# அரசியல் பெருஞ்சொல்



வ.உ.சிதம்பரம்பிள்ளை

# அரசியல் பெருஞ்சொல்
# வ. உ. சி. கண்ட பாரதி
# சிவஞான போதம்

வ. உ. சிதம்பரம்பிள்ளை

வ. உ. சி. நூலகம்

பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்

ஜி - 1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.

தொலைபேசி : 044 - 28476273 / 98404 44841

அரசியல் பெருஞ்சொல்
வ. உ. சி. கண்ட பாரதி
சிவஞான போதம்

வ. உ. சிதம்பரம்பிள்ளை

வெளியீடு :

வ. உ. சி. நூலகம்
பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்
ஜி-1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.
தொலைபேசி : 044 - 28476273

| First Edition : 2004 |

Published by : V. O. C. NOOLAGAM.
Publisher and Book-Sellers
G - 1, Lloyds Colony, Royapettah, Chennai - 600014.
Phone: 044 - 28476273

| No. of Pages : 80 |

| No. of Copies : 1000 | Size of the Book : 1/8 Demy |

| Paper used for text : 18.6 Maplitho | Printing Type : 11 Points |

| Typeset at : Thaiyal Graphic Solutions, Chennai - 14. |

| Printed at : Muni Offset, Chennai - 5. |

Price : Rs. 30/-

# சேலம் அரசியல் மகாநாட்டில் எனது பெருஞ்சொல்

## மூன்றாவது அரசியல் மகாநாடு—1927

### கடவுள் வணக்கம்

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

என்றபடி எளிமை யுற்றிருக்கா நின்ற எனது நாட்டினை வலிமைப் படுத்துவேன் என்று ஊக்கும் எனக்கு எல்லாம் வல்ல இறைவன் தனது உடையை இறுக உடுத்துக்கொண்டு எனது வழிகாட்டியாக என் முன் செல்வானாக.

### செய்ந்நன்றியறிதல்

'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு'

என்றபடி என் நாட்டினை மேம்படுத்தக் கருதி யான் 'சுதேசிய நீராவிக் கப்பல் சங்கத்தை நிறுவிய காலத்தில் பல்லாயிரக்கணக்காகப் பொருள் அளித்துத் துணைபுரிந்தும் அவ்வூக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்து வாடிய காலத்தில் வேண்டியவற்றை ஈந்து என் வாட்டத்தைக் களைந்தும், தேசாபிமானமும் என்பால் உளதோ என்று சிலர் ஐயமுறும் இக்காலத்தில் தேசாபிமானத்திற்கே உறைவிடம் என்று சொல்லும்படியான சிறப்பு வாய்ந்த சேலம் ஜில்லாவாசிகள் கூடிய இம்மகாநாட்டின் தலைமைப் பதவியை நல்கி மேன்மையளித்தும், நீங்கள் எனக்குச் செய்த நன்றியை எழுமை எழுபிறப்பும் உள்ளுவேனாக.

கல்கத்தா நகரத்தில் நடந்த விசேஷ காங்கிரஸ் மகாநாட்டில் என் தேசியக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறான கோட்பாடுகள் அடங்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உடனே யான் சென்னைக்கு வந்து, 'திலகர் சுயாட்சி சங்கத்தின் விசேஷ கூட்டம், ஒன்றைக்கூட்டி மேற்கண்ட விசேஷக் காங்கிரஸ் மகாநாட்டின் தீர்மானங்களை எல்லாம் கண்டித்து தீர்மானங்களை நிறைவேற்றிப் பத்திரிகைகளிற் பிரசுரித்துவிட்டு யான் காங்கிரஸினின்று விலகி, இதுகாறும் ஒடுங்கியிருந்தேன். என் கோட்பாடுகளுக்கு மாறான நீதி ஸ்தல பஹிஸ்காரம், கலாசாலை பஹிஸ்காரம், சட்டசபை பஹிஸ்காரம் முதலிய பஹிஸ்காரங்க ளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நீங்கிக் காங்கிரஸ் மகாசபை, தனது கல்கத்தா விசேஷ மகாநாட்டிற்கு முன்னிருந்த நிலைமைக்கு வந்துவிட்ட படியால் யான் திரும்பிக் காங்கிரஸில் புகலாம் என்று நினைத்தேன். என்னைப்போல காங்கிரஸை விட்டு விலகி நின்ற எனது பிராமணரல்லாத சகோதரர்களில் உண்மையான தேசாபிமானிகள் சிலர் கோவை நகரில்ஒரு விசேஷ மகாநாடு கூட்டிப் பிராமணரல்லாதார் களுடைய தேச சேவைக்குக் காங்கிரஸ் மகாசபையைக் கைப்பற்றி ஒரு கருவியாக உபயோகித்தல் இன்றியமையாததென்று தீர்மானித்தார்கள். எனக்கும் என் தேசத்திற்கும் நல்லகாலம் பிறந்துவிட்டதென்று கருதினேன். சென்ற பல ஆண்டுகளாக ஒடுங்கியிருந்த யான் எவ்வாறு வெளிவருவதென்று சிந்தித்துக் கவன்று கொண்டிருந்தேன்.

'உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்றபடி எனது நண்பர்களாகிய நீங்கள் உங்களுடைய இம்மகா நாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று எனக்குக் கட்டளை இட்டீர்கள். அக்கட்டளை எனக்கு 'காலத்தினாற் செய்த நன்றி'யும் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போலும், ஆயிற்று.

'தேச அரசாட்சியை மீட்பதற்காக தேச ஜனங்கள் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொண்டு போராடும் காலத்தில் தேசாபிமானம் இல்லாது புறங்காட்டி ஒடுகின்றீரே' என்று என்னிடம் கேட்ட ஒரு பாரிஸ்டர் புன்மொழியும் 'இராஜாங்கத்தாரிடம் கைக்கூலி பெற்றுத் தேசத் துரோகம் செய்துகொண்டிருக்கிறான் சிதம்பரம்பிள்ளை என்று பொருள்படும்படி எழுதிய ஒரு பத்திரிகையாசிரியர் புன்மொழியும் இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை. தேசாபிமான ஒளி நாளுக்கு நாள் வளர்வதேயன்றிக் குறைவதும் அவிவதும் இல்லை. 'விளக்குப் புகவிருள் சென்றாங் கொருவன் தவத்தின்முன் நில்லாதாம் பாவம்' என்றபடி தேசாபிமான ஒளிமுன் தேசத்துரோகம் இருள் நில்லாது. இவ்வுண்மையினை அவர் அறிவாராக.

'ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து'

என்று சிலர் என் சென்ற கால ஒடுக்கத்தைப் பற்றிக்கூறும் உயர் மொழியும், 'பிராமண அபிமானி' என்று பிராமணரல்லாத சிறுவர் சிவராலும், 'வஞ்சக சொரூபி' என்று பிராமணர் ஒருவராலும் அநியாய மாகப் பழிக்கப் பெற்ற ஸ்ரீதிலகருடைய சீடன் வெளிவந்து விட்டான்' என்று பலர் பேசும் உயர் மொழியும் என்னைச் சேரும் படியான நற்காலம் வந்ததற்காக யான்பெரிதும் அகமகிழ்கின்றேன். அந்நற்கால வரவிற்குக் காரணஸ்தர்களாயுள்ள உங்கள் எல்லோரையும் வணங்குகின்றேன்.

## அவையடக்கம்

இது போன்ற மகாநாடுகளில் தலைமை வகிக்கும் பெரியார் ஒவ்வொருவரும் 'பெருமை பெருமிதமின்மை', 'பணியுமாம் என்றும் பெருமை' என்றபடி தாம் அம்மகாநாட்டின் தலைமை வகித்தற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் இல்லாதவரென்று தமது 'பெருமித மின்மை'யைக் கூறி 'யார் யார்க்கும் தாழ்ச்சி சொல்லிப் 'பெருமையும்' 'பெருஞ்சுட்டும்' பெறுவர். பெரியார்க்கு இலக்கணம் பெருமிதமின்மை கூறலும், யார்யார்க்கும் தாழ்ச்சி சொல்லலும் என்றால், சிறியார்க்கு இலக்கணம் பெருமிதம் கூறலும், யார் யார்க்கும் உயர்ச்சி சொல்லலும் என்பது சொல்லாமலே விளங்கும். அதுபற்றியன்றோ 'சிறுமை பெருமிதம்ஊர்ந்துவிடும்' எனவும், 'சிறுமை அணியுமாம் தன்னை வியந்து' எனவும் கூறியுள்ளார் நம் பெரியார். அவர் வாக்கைப் பின்பற்றிச் சில காரணங்கள் கூறி இம்மகாநாட்டின் தலைமை வகித்தற்கு யான் தகுதியுடையோன் என்பதை நிரூபிக்கின்றேன். இம்மகாநாடு இந்தியன் நேஷனல் காங்கிரஸின் ஒரு கிளை. யான் ஒரு இந்தியன். இது சிறந்த தேசாபிமானிகள் கூடியுள்ள மகாநாடு. யானும் தேசாபிமானி என்று சொல்லிப் பெருமை பாராட்டுகின்றவன். இம்மகாநாட்டிற் குழுமி யுள்ளாரிற் பெரும்பாலார் பிராமணரல்லாதார். யானும் ஒரு பிராமணரல்லாதான். இந்த ஜில்லா சிறந்த ஒரு தமிழ்நாடு. யானும் சிறந்த ஓர் தமிழன். இம்மகாநாட்டில் முதன்மையாக நிற்போர் வருடக்கணக்கில் சிறைத் தீர்ப்புப் பெற்று வருடக்கணக்கில் சிறையில் வசித்தவர். யானும் ஏககாலத்தில் நடைபெறும் இரண்டு இருபது வருடங்கள் சிறைத் தீர்ப்புப் பெற்று ஒரு நாலரை வருடம் சிறையில் வசித்தவன். இம்மகாநாடு உங்கள் எல்லோராலும் மிக நேசிக்கப் பெற்றது. யானும் உங்களால் மிக நேசிக்கப்பெற்றவன். உங்களிற் பலர் உழவும், உபகாரமும் செய்கின்ற உண்மை வேளாளர். யானும் ஜாதிமாத்திரையில் ஒரு வேளாளன். உங்களிற் பலர் பலமில்லாத பிற ஜாதியாரைத் தாழ்த்துதலை இயற்கையாக கொண்டுள்ள ஜாதியாரென்று உண்மைத் தேசாபிமானிகளால்

பழிக்கப்படுகின்றவர். யானும் அத்தன்மையமான ஜாதியாவென்று உண்மைத் தேசாபிமானிகளால் பழிக்கப்படுகின்றவன். இப்பல ஒற்றுமைகளால் யான் இம்மகாநாட்டிவ் தலைமை வகித்ததற்குத் தகுதியுடையோன். ஆயினும், பல விஷயங்களில் என் அபிப்பிராயமும் உங்கள் அபிப்பிராயங்களும் மாறுபடவாம். என் அபிப்பிராயத்தை நீங்கள் கேட்டு, உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்த பின்னர் யான் எனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுதல் கூடும். ஆதலால் யான் சொல்பவற்றைப் பொறுமையோடு கேட்கும்படியாக உங்களை மிக வணக்கத்தோடு பிரார்த்திக்கிறேன்.

## சுய அரசாட்சி

'நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்'

என்று நமது முன்னோர் கூறியுள்ளார். அதாவது, ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்பது, தான் பிறந்த தேசத்தின் ஆள்கையைத் தன்னது ஆக்கிக் கொள்ளுதல். சுய அரசாட்சி அடைதலே நமது நோக்கம் என்று நமது காங்கிரஸ் தலைவர்களும் கூறியுள்ளார்கள். ஆனால் 'சுய அரசாட்சி' என்றால் என்ன? 'சுயஅரசாட்சி' எதுபோலிருக்கும்? என்று அறிவாளி களும் அடிக்கடி வினவக்கேட்டிருக்கிறேன். அவர் அதனை அறியாமல் வினவுகின்றனரா? அல்லது அறிந்திருந்தும் ஏனையோர் அறிந்திருக் கின்றனரா என்று தெரிந்து கொள்வதற்காக வினவு கின்றனரா? என்பது தெரியவில்லை. அது யாதாயினும் ஆகுக. சுய அரசாட்சியைப்பற்றி யான் அறிந்துள்ளவற்றைச் சொல்லு கின்றேன். சுய அரசாட்சி நான்கு வகைப்படும்.

1. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத்தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி அம்மகாஜனங்களால், அல்லது அப்பிரதி நிதிகளால், (தேச அரசாட்சியை நடாத்துவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவன் ஒருவனால் ஆளப்படுதல். ('மகா ஜனங்களால்' என்பது அவர்களிற் 'பெரும்பாலார்களால்' எனவும், 'பிரதிநிதிகளின்' என்பது அவர்களிற் 'பெரும்பாலார்களின்' எனவும் பொருள்படும். ஆண்பால் பெண்பாலையும் குறிக்கும்.) இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு, முதலிய காரியங் களிலும் பிறதேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்னும் மூன்றில் ஒன்றாகக்கொள்ளுதல், முதலிய காரியங்களிலும் பூரண சுதந்திரமும் சுவாதீனமுமுடையது. இவ்வரசாட்சி பிரான்ஸ் தேசத்திலும், அமெரிக்கா தேசத்திலும், தற்காலம் நடைபெறுகின்ற அரசாட்சி போன்றது. இதனைக் 'குடியாட்சி' *(Republic Government)* என்று கூறுவர் அறிஞர்.

2. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத் தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆலோசனை முடிவுப்படி தன்னை நெடுங்காலம் ஆண்டுவந்த, அல்லது ஆளவந்த, அரசன் ஒருவனால் ஆளப்படுதல். இவ்வரசும் தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு, முதலிய காரியங்களிலும், பிறதேசங்களை நட்பு, பகை, நொதுமல்[1] என்னும் மூன்றில் ஒன்றாகக் கொள்ளுதல், முதலிய காரியங்களிலும் பூரண சுதந்திரமும், சுவாதீனமுமுடையது. இவ்வரசாட்சி இங்கிலாந்து தேசத்திலும், ஜப்பான் தேசத்திலும் தற்காலம் நடைபெறும் அரசாட்சி போன்றது. இதனை 'கோனாட்சி' *(Monarchical Government)* என்பர் அறிஞர்.

3. ஒரு தேசம், தனது மகா ஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத் தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் ஆலோசனை முடிவுப்படி அம்மகாஜனங்களால், அல்லது அப்பிரதிநிதிகளால், (தேச அரசாட்சி நடத்துவதற்குத் தகுதி வாய்ந்தவனென்று) தேர்ந்தெடுக்கப் பெற்ற தலைவன் ஒருனால் ஆளப்படுதல். ஆனால் இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு முதலிய காரியங்களில் மாத்திரம் பூரண சுதந்திரமும் சுவாதீனமும் உடையது. பிறதேசங்களை நட்பாகவோ, பகையாகவோ, நொதுமலாகவோ கொள்ளுதல், முதலிய காரியங்களில் மேற்கூறிய அரசுகளில்முதலாவது வகை அரசைச் சார்ந்து, அதன் ஆணைப்படி நடக்கக் கட்டுப்பட்டது. இவ்வகையான அரசாட்சி தற்காலம் எந்த தேசத்திலாவது நடைபெறுவதாகத் தெரியவில்லை. இதனைச் 'சார்ந்த குடியாட்சி' *(Dependent Republican Government)* என்பர் அறிஞர்.

4. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத் தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி அத்தேசத்தை நெடுங்காலம் ஆண்டுவந்த, அல்லது ஆளவந்த, அரசன் ஒருவனால் ஆளப்படுதல். ஆனால் இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு முதலிய காரியங்களில் மாத்திரம் பூரண சுதந்திரமும், சுவாதீனமுமுடையது. பிற தேசங்களை நட்பாகவோ, பகையாகவோ, நொதுமலாகவோ கொள்ளுதல், முதலிய காரியங்களில் மேற்கூறிய மூவகை அரசுகளில் இரண்டாவது வகை அரசைச் சார்ந்து அதன் ஆணைப்படி நடக்கக் கட்டுப்பட்டது. இவ்வரசாட்சி ஆஸ்திரேலியா தேசத்திலும், கானடா தேசத்திலும், தென் ஆப்பிரிக்காத் தேசத்திலும் தற்காலம் நடைபெறும் அரசாட்சி போன்றது. இதனைச் 'சார்ந்த கோனாட்சி' *(Dependent Monarchical Government)* என்பர் அறிஞர். முந்திய அரசு இரண்டும் 'பேரரசு' எனவும், பிந்திய அரசு இரண்டும் 'சிற்றரசு' எனவும் வழங்கப்படும்.

மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி நடைபெறாத ஆட்சிகள் 'அரசாட்சி' என்று சொல்லப்படும்

1. நொதும்பல் - விருப்பு வெறுப்பின்மை

தகுதியுடையன அல்ல. ஆதலால், அவற்றின் கூறுபாடுகள் முதலியவற்றைப் பற்றி இங்குப் பேச வேண்டிய அவசியம்இல்லை.

## நாம் விரும்பும் சுய அரசாட்சி

மேற்கூறிய நான்கு வகையான சுய அரசாட்சிகளுள் முன்னைய மூன்றில் ஒன்றை நாம் அடைய வேண்டுமென்று நம் தேசத்தாரில் ஒருவன் சொல்வானானால், அதுவே இந்தியன் பினல்கோடு 124பி பிரிவுப்படி குற்றமாகுமோ என்று யான் அஞ்சுகின்றேன். ஆதலால், அவற்றைப்பற்றி யான் ஒன்றும் பேசாது அம்மூவகை சுய அரசாட்சிகளும் நமக்கு ஆகாதவை என்று தள்ளிவிடுகின்றேன். ஆகவே நாம் அடைய விரும்பும் சுய அரசாட்சி மேலே நான்காவது வகையாகக் கூறப்பட்ட சுய அரசாட்சியே. அவ்வரசாட்சி தான் நம் தேசத்தின் தற்காலநிலைமைக்கும் பொருத்தமானதென்று கொள்ளத் தக்கது. நம் தேச பக்தர்களிற் சிலர் மேற்கூறிய நான்குவகை சுய அரசாட்சிகளில் முதலாவது வகை சுய அரசாட்சி ஒன்றே தாம் வேண்டுவது எனக்கூறக் கேட்டிருக்கிறேன். அக்கூற்றுத் தற்கொல்லியும் பயனிற்சொல்லும் ஆமென்று யான் கருதுகின்றேன். ஆகவே, நாம் அடைய விரும்பும் சுய அரசாட்சி நமது தேசத்து அகப்புறக்காப்புகள் முதலிய காரியங்களில் நாம் பூரண சுதந்திரமும் சுவாதீனமும் உடையவராயும் பிறதேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்ற மூன்றில் ஒன்றாகக் கொள்ளுதல் முதலிய காரியங்களில் பெரிய பிரிட்டன் (Great Britain) தேசத்து அரசைச் சார்ந்து அதன் ஆணைப்படி ஒழுகும் கடப்பாடு உடையவராயும் இருக்கும் சுய அரசாட்சியே. இத்தகைய அரசாட்சியைச் 'சுயஅரசாட்சி' எனச் சொல்லலாமோ? எனின், சொல்லலாம். என்னை? நமதுதேசத்து அகப்புறக்காப்பு முதலிய காரியங்களிலெல்லாம் நாம் பூரண சுதந்திரமும் சுவாதீனமும் உடையவராகலான். இச்சுய அரசாட்சிக்கே நாம் தகுதியுடையவரல்வர் என்று நம்மை ஆள்வோரும் நம்கிழவர் சிலரும் கூறுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்களிற் சில வருமாறு:-

1. இச்சுய அரசாட்சிக்கு நாம் உண்மையில் தகுதியுடையோரா யிருப்பின், அவரவர் தகுதிக்குத் தக்க ஸ்தாபனங்களை அவரவர்க்கு அளிக்கும் சர்வ நியாயாதிபதியான எல்லாம் வல்ல இறைவன் நம்மை நமது தற்கால சுதந்திரமற்ற நிலைமையில் வைத்திருப்பாரா?
2. நம்மிற் பெரும்பாலார் (Majority) பிறர்பொருள்களையும் உரிமை களையும் அபகரிக்க விரும்பாத நடுநிலைமையிலுள்ளராயிருக் கின்றனரா? எளியோரை வலியோர் வருத்துங்கால், எளியோருக்கு உதவியாய் வலியோரை எதிர்க்க நம்மிற் பெரும்பாலார் சித்தமா யிருக்கின்றனரா? மதங்களை அழிப்பதிலும், அறங்களை வளர்ப் பதிலும், நம்மிற் பெரும்பாலார் விருப்பமுடையோராயிருக்

கின்றனரா? பெருந்தொகையினராயுள்ள ஜாதியார்கள் சிறு தொகையினராயுள்ள ஜாதியார்களைத் தாழ்த்தி, அவமதித்து, வருத்தும் சுபாவத்தை நம்மிற் பெரும்பாலார் விட்டுவிட்டனரா?

3. நாம் சுய அரசாட்சியை அடைவோமாயின், நம் தேசத்தில் சிறு தொகையினராயுள்ள ஜாதியார்களுடையவும் நம்மால் அநியாயமாகத் தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்களுடையவும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் நாம் கவர முற்படோம் என்று அந்த ஜாதியார்கள் நம்புவதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? அந்த நம்பிக்கை அவர்களுக்குப் பூரணமாக உண்டாலன்றி, அவர்கள் நம்முடன் சேர்ந்து சுய அரசாட்சி அடைவதற்கு ஒத்துழைப்பார்களா? அவ்விரு வகையான ஜாதியார்கள் என்னென்ன உரிமைகளையும் சுதந்திரங்களையும் அடைய விரும்புகின்றார்கள் என்றாவது நாம் தெரிந்துள்ளோமா?

4. நம் தேசத்திலுள்ள பல் மதஸ்தர்களும் தத்தம் மதச்செயல்கள் பிறமதஸ்தர்களைப் பாதிக்காதவாறு தத்தம் மதக் கோட்பாடுகளைத் திருத்திக் கொண்டனரா? இம்மதக் கோட்பாடுகள் மேற்சொல்லிய படி திருத்தப்படாத வரையில் நம்மவர்களுள் நெடுங்காலமாக நடந்து வருகின்ற மதச்சச்சரவுகளும் சண்டைகளும் கொலைகளும் நீங்குமா? அவை நீங்காத வரையில் நமக்குள் ஒற்றுமை ஏற்படுமா? அவ்வொற்றுமை ஏற்படாத வரையில் நமக்குச் சுய அரசாட்சி வேண்டுமென்று நம்மை ஆள்வோரிடம் இரக்கவாவது நாம் அருகரா? இவர்கள் இவ்வாறு சொல்வதையும் நமது தற்கால நிலைமையையும் கவனிக்குங்கால், நாம் விரும்பத்தக்கது மேற்கூறிய நான்காவது வகைச் சுய அரசாட்சியேயாம்.

## சுய அரசாட்சிக்கு வழி

ஒரு பேரரசின் துணையைப்பெற்றுப் போர்புரிதல், அல்லது தேசம் முழுவதும் ஒரே காலத்தில் புரட்சி செய்தல், சுய அரசாட்சி வழி என்று சிலர் கூறுகின்றனர். நமக்கு ஆகா என்று நாம் தள்ளிய மேற்கூறிய முதல் மூன்று வகைச் சுய அரசாட்சிகளுக்கும் அவ்விரண்டில் ஒன்றுதான் வழி. ஆனால், நாம் அடைய விரும்பும் மேற்கூறிய நான்காவது வகைச் சுய அரசாட்சிக்கு அவ்வழிகளிற் செல்லுதல் அவசியம் இன்று. அன்றியும், அவ்வழிகள் தேசமக்கட்கும் பொருட்கும் அழிவும் கேடும் விளைவிப்பவை; நமது காங்கிரஸ் கோட்பாட்டுக்கு மாறுபட்டவை: நாம் கைக்கொள்ள முடியாதவை. ஆதலால் அவ்வழிகள் நாம் விரும்பும் சுய அரசாட்சியை அடைவதற்கும், நமது தேசத்தின் நிலைமைக்கும் பொருத்தமற்றவை யென நாம் தள்ளிவிடுவோமாக.

நாம் விரும்பும் மேற்கூறிய நான்காவது வகைச்சுய அரசாட்சியை நாம் அடைவதற்கு வழிதான் யாது என்றால், நமது கிழவர்கள் 'ஒத்துழைத்தல்'

*(Co-Operation)* என்கின்றனர். நமது தற்காலத் தலைவர்கள் 'ஒத்துழையாமை' *(Non-Co-Operation)* என்கின்றனர். நாம் 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' *(Responsive Co-Operation)* என்கின்றோம். இவை சொல் மாத்திரையில் மூன்றாகத் தோன்று கின்றனவேயல்லாமல், உண்மையில் ஒன்றேயாம். இம்மூன்றும் இரப்புத்தான்; ஆனால் சொல்லாலும் செயலாலும் வேறாகத் தோன்றுகின்ற இரப்பு. 'ஒத்துழைத்தல்' என்பது நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜாங்கத்தார் நமக்குத் தந்தாலும், தர மறுத்தாலும் நாம் அவர்க்கு வந்தனம் (Thanks) கூறி நமது தேச நிர்வாக விஷயத்தில் அவரோடு உடம்பட்டு உழைத்தல். 'ஒத்துழையாமை' என்பது நாம் அடைய விரும்பும் நமது உரிமைகள் அனைத்தையும் ஒருங்கு நம் இராஜாங்கத்தார் நமக்குத் தரும் வரையில் நாம் அவரோடு, நமது தேச நிர்வாக விஷயத்தில் உடம்படாது மாறுபட்டு இருத்தல். 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' என்பது, நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜாங்கத்தார் நமக்குத் தருவதாயிருந்தால், அதற்காக நாம் அவர்க்கு வந்தனம் (Thanks) கூறி அவரோடு உடம்பட்டு உழைத்தலும், எதையேனும் அவர் நமக்குத் தர மறுப்பாராயின் அது விஷயத்தில் நாம் அவரோடு உடம்படாது மாறுபட்டிருத்தலுமாம்.

'ஒத்துழைத்தல்' 'இரப்பான்வெகுளாமை வேண்டும்' என்னும் உண்மையையும் 'ஒத்துழையாமை' 'வேண்டாமை வேண்டவரும்' என்னும் உண்மையையும்' 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' 'தன்னெஞ்சறிவது பொய்யற்க என்னும் உண்மையையும் உட் கொண்டுள்ளன. எந்த இரப்பு எந்த உண்மையை கொண்டிருப்பினும், எல்லா இரப்பும் இரப்புத்தான். 'ஒத்துழைத்தல்' தமக்கு உரிய வற்றைப்பிறர்தரினும் தராவிடினும், அது நமது விதியென்று கருதிப் பிறர்க்குப் பண்பு செய்யும் கிழவர் செயல் போன்றது. 'ஒத்துழையாமை' தின்பண்டம் முழுவதும் தமக்குத் தரும் வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய்தந்தையரோடு கோபித்துக்கொண்டிருக்கும் குழந்தைகள் செயல்போன்றது. 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' தமக்குரிய வற்றைத் தந்தபோது உவந்தும் தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயல்போன்றது.

இரத்தலால் சுய அரசாட்சி நமக்குக் கிடைக்குமா? எனின், நம் உரிமையை நம் இராஜாங்கத்தார் நமக்கு அளிக்கும்படி செய்யத்தக்க பெருமையோடு நாம் இரப்பின், சுய அரசாட்சி நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அப்பெருமை யாதெனின், நம்தேசத்துப் பல மத ஜாதித் தலைவர்களெல்லாம் ஒற்றுமைப் பட்டு இரத்தல். அதுபற்றியே, நம் பாரதியார் 'இரண்டுபட்டால் உண்டு வீழ்வு; ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று கூறியுள்ளார்.

சுயஅரசாட்சி அடைவதற்கு நாம் ஒற்றுமைப்படுதல் இன்றியமையாத தொன்றாயிருக்குங்கால், நம் தலைவர்களில் சிலர் நம் சுதேச மன்னர்களின் ஆள்கைக்குட்பட்ட தேசங்களிலும் நம் சுய அரசாட்சி பரவ வேண்டு மென்றும், அதற்காக அத்தேசங்களின் குடிகளையும் நாம் காங்கிரஸ் மகாசபையில் சேர்த்துக்கொண்டு கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும், பேசக்கேட்டிருக்கிறேன். இப்பேச்சு எனக்கு ஓர் புதுமையாக தோன்றிற்று. நாம் வேண்டுவது பெரிய பிரிட்டன் தேசத்து அரசரைச் சார்ந்திருக்கும் கோனாட்சி. நம் சுதேச மன்னர்களின் அரசாட்சியும் பெரிய பிரிட்டன் தேசத்து அரசைச் சார்ந்துள்ள கோனாட்சிதானே? நம் பக்கத்திலுள்ள நாம் சுதேசக் கோனாட்சியை ஒழித்துவிட்டுப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிறதேசக் கோனாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பது வியப்பன்றோ? அதற்காகச் சுதேச மன்னர்களின் குடிகளைச் சேர்த்துக் கொண்டு நாம் கிளர்ச்சி செய்தல். அச்சுதேச மன்னர்கள் நம்மிடம் கொண்டுள்ள அநுதாபத்தைக்கெடுக்கும் அன்றோ? அச்சுதேச மன்னர்களின் அரசாட்சி,• அவர்கள் தேசத்துக் குடிகளுக்குச் சுய அரசாட்சியன்றோ?

அக்குடிகளால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி அம்மன்னர்கள் அரசாட்சி செய்ய வேண்டுமென்பது, அக்குடிகள் அம்மன்னர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டிய உரிமை. அவ்விஷயத்தில் நாம் பிரவேசித்தல் தகுதியன்று. அதில் நாம் பிரவேசித்தல் நம் பக்கத்திலும் பகைமையை உண்டாகுதலேயன்றி வேறன்று. அதனால் நம் காங்கிரஸ் மகாசபை, சுதேச மன்னர்களின் அரசாட்சி சம்பந்தமான காரியங்களில் தலையிடலாகாதென்று யான் வற்புறுத்துகின்றேன்.

சில வருஷங்களுக்கு முன் வரையில் நம் காங்கிரஸ் நமது இராஜீய நோக்கங்களை இங்கிலாந்து முதலிய தேசங்களில் பரப்புவதற்காக இங்கிலாந்தில் சில நண்பர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக 'இந்தியா' என்னும் ஒரு பத்திரிகையை நடத்தி வந்தது. நமது நோக்கங்களைப் பற்றிய பிரச்சாரங்கள் செய்வதற்கு நாம் இங்கிலாந்திலும் மற்றைய தேசங்களிலும் நமது ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டியதிருக்க, இங்கிலாந்திலிருந்த ஸ்தாபனத்தையும் கூடப் பொருட் செலவின தென்றும் பயனற்றதென்றும் நாம் எடுத்துவிட்டது ஒரு பெரும்பிழை யாகும். தேசாபிமானமும் சகல திறமைகளும் சேர்ந்து முதிர்ந்த நம் தேச பக்தர்களிற் சிலர் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நிலையாகத் தங்கி நமது நோக்கங்களைப் பிரச்சாரம் செய்வதற்குரிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வேலைகள் செய்துவரும்படியாக நமது காங்கிரஸ் ஏற்பாடு செய்தல் வேண்டும். செலவுக்குறைவு முதலிய வற்றைக் கவனித்துத் தகுதியில்லாதாரை அந்த அயல்நாட்டு ஸ்தாபனங் களின் தலைவர்களாக

நாம் அனுப்புவோமாயின், அது 'கடைமுறை தான் சாம் துயரம் தரும்'. ஆதலால், அதற்குச் சகல வகைகளிலும் தகுதி வாய்ந்த இந்திய தேசாபிமானிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புதல் நமது கடமையாகும்.

## ஒற்றுமைக்குரிய வழிகள்

நம்தேசத்தார்களில் ஒவ்வொருவரும்தத்தம் மதக்கோட்பாடுகளும் ஜாதிக் கோட்பாடுகளும் பிறர் மதக் கோட்பாடுகளையும் ஜாதிக் கோட்பாடுகளையும், பாதிக்காதவாறு திருத்திக்கொள்ளுதல் வேண்டும். ஹிந்து மதமும் முகம்மதிய மதமும் முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு. அவையாவன: (1) முகம்மதியர் பக்ரீத் முதலிய பண்டிகைகளில் ஹிந்துக்கள் பார்த்து மனம் வருந்தும்படியாகப் பசுக்களைக் கொல்லுதல். (2) பள்ளி வாசல்களில் தொழுது கொண்டிருக்கிற முகம்மதியருடைய மனம் கலையும்படியான விதத்தில் ஹிந்துக்களுடைய ஊர்கோலங்களை மேளவாத்தியங்களுடன் பள்ளிவாசல்களில் பக்கத்து வீதிவழியாகக் கொண்டுபோதல், பூரண தேசாபிமானமுடைய இரு மதத்தலைவர்களும் ஒன்றுகூடி 'கொடுத்து வாங்கல்' *(Give and take)* என்னும் கொள்கையை உபயோகப்படுத்தி இம்முரண்பாட்டுக் கோட்பாடுகளைத் திருத்திக் கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு முதல் வழியாகும்.

ஹிந்துக்களுள் 'உயர்ந்த ஜாதியார்' என்னப்படுவோரும் 'தாழ்ந்த ஜாதியார்' என்னப்படுவோரும் முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு. அவையாவன:

(1) 'உயர்ந்த ஜாதியார்' என்னப்படுவோர் தம்மைப் பன்றி முதலிய அசுத்தப் பிராணிகள் நெருங்கும் அளவுகூடத் 'தாழ்ந்த ஜாதியார்' என்னப்படுவோர் நெருங்கவிடாமை.

(2) தாழ்ந்த ஜாதியார் என்னப்படுவோர் உயர்ந்த ஜாதியார் என்னப்படுவோருடன் சமபந்தி போஜனம் செய்ய விரும்புதல்.

பூரண மனித அறிவையுடைய இவ்விருவகை ஜாதித் தலைவர்கள் சிலர் ஒன்றுகூடிக் 'கொடுத்து வாங்கல்' என்னும் கொள்கையை உபயோகப் படுத்தி இம்முரண்பாட்டுக் கோட்பாடுகளைத் திருத்திக் கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு இரண்டாவது வழியாகும். 'உயர்ந்த ஜாதியார்' என்னப்படுவோர் 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்', 'நல்ல குலமென்றும் தீய குலமென்றும் சொல்வளவல்லாற் பொருளில்லை' என்னும் முன்னோர் மொழிகளையும், 'தாழ்ந்த ஜாதியார்' என்னப் படுவோர் 'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லர் கீழல்லவர்' என்னும் முன்னோர் மொழியையும் உட்கொண்டு சமாதானம் ஆவதற்கு முயற்சிப்பார்களாக.

இந்தியர்களுக்கெல்லாம் 'பொதுஉடைமைகள்' இன்னின்னவை என்றும், இந்தியன் ஒவ்வொருவனுக்கும் 'தனியுடைமைகள்' இன்னின்னவை என்றும்,நாம் எல்லோரும் அறிந்துகொள்ளுதல் வேண்டும். பொது உடைமைகளில் இந்தியர்கள் எல்லார்க்கும் சமவுரிமை உண்டு. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமை உண்டு. கல்வி, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, ஆற்றுநீர், ஏரிநீர், பெரும்பாட்டை, பொதுக் கூட்டுறவு, காட்டில் வாழும் உயிர்கள், இராஜாங்க உத்தியோகங்கள் முதலியன பொது உடைமைகள். ஒருவனுடைய செல்வம், குளத்து நீர், கிணற்று நீர், நடைபாதை, வீடு, வீட்டில் வாழும் உயிர்கள், சொந்த வேலைகள் முதலியன தனி உடைமைகள். பொது உடைமைகளில் யாவர்க்கும் சம உரிமையுண்டாதலால், அவற்றை ஒருவன் அனுபவித்தலை மற்றொருவன் தடுக்கலாகாது. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமை யுண்டாதலால், அவற்றை அவர் தவிர வேறொருவன் அநுபவிக்க முற்படலாகாது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்தியர்களுக்கெல்லாம் பொது உடைமைகள் இன்னின்னவை யென்றும், இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தனியுடைமைகள் இன்னின்னவை யென்றும், நம் தேசத்துப் பல ஜாதித் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசி ஆலோசனை செய்து வரையறுத்து முடிவு செய்தலே' நமது ஒற்றுமைக்கு மூன்றாவது வழியாகும்.

இவ்வுண்மையை அறியாது நம்மில் அறிவாளிகளாயுள்ளவர்களும் கூட நமது தேசத்தில் நிலவும் ஜாதி வேற்றுமையொன்றே நமது ஒற்றுமையின்மைக்குக் காரணம் என்று கூறுகின்றனர். அவ்வொன்றே காரணமென்பது சரியன்று. இப்பொழுது நமது தேசத்தில் பிறப்பை ஆதாரமாகக்கொண்டு நிலவும் அநீதியான ஜாதி வேற்றுமை ஒழிக்கப்பட வேண்டுவதுஅவசியம்தான். அது விரைவில் ஒழியுமா? என்பது ஒருவினா. அது ஒழிந்தபின் அதற்குப் பதிலாக வேறொன்றை ஆதாரமாகக்கொண்டு ஜாதி வேற்றுமைகள் உண்டாகவா? என்பது மற்றொருவினா. இவ்வினாக்களுக்கு விடைகள் பின்னர்க் கூறுகின்றேன். நமது ஒற்றுமையின்மைக்கு முக்கிய காரணம் நமது பொதுவுடைமைகள் இன்னின்னவையென்றும் தனியுடைமைகள் இன்னின்னவையென்றும் அறியாது சிலர் பொதுவுடைமைகளிற் சிலவற்றைத் தமது தனியுடைமைகள் என்று கொண்டு அவ்வுடைமைகளில் மற்றவர்களுக் குள்ள சமவுரிமையைக்கொடுக்க மறுக்கின்றனர். வேறு சிலர் தனியுடைமைகளில் சிலவற்றைப் பொதுவுடைமைகள் என்று கருதி, அவ்வுடைமைகளிற் சமவுரிமை கொண்டாட முற்படுகின்றனர்.

பொதுவுடைமைகளில் சமவுரிமையை மறுப்பதற்கு உதாரணம்- ஓர் ஊர் ஜனங்களுடைய பொது நன்மைக்காக இராஜங்கத்தார் அல்லது

ஸ்தவஸ்தாபனத்தார், அவ்வூரில் 'உயர்ந்த ஜாதியார்' என்னப்படுவோர் வசிக்கும் வீடுகளுக்குச் சமீபமாயுள்ள பொது இடத்தில் ஒரு குளமோ, கிணறோ வெட்டுகின்றனர். தங்கள் வீடுகளுக்குச் சமீபமாயிருக்கின்ற காரணத்தால் அவ்வுயர்ந்த ஜாதியார் என்னப்படுவோர் அதில் மற்றை ஜாதியார்கள் குளிக்கக்கூடாது, குடிதண்ணீர் எடுக்கக்கூடாது என்று சொல்லி அதில் மற்றை ஜாதியர்களுக்குள்ள சமவுரிமையை மறுக்கின்றனர். அதனால் அந்த ஊரில் அவ்வுயர்ந்த ஜாதியார் என்னப் படுவோருக்கும் மற்றை ஜாதியார்களுக்கும் ஒற்றுமையின்மையும், பகைமையும் உண்டாகின்றன.

தனியுடைமைகளில் சமவுரிமை கொண்டாடுவதற்கு உதாரணம்: ஓர் ஊரில் உயர்ந்த ஜாதியார் என்னப்படும் சில ஜாதியார்கள் சேர்ந்து தங்களுக்குள் வரிவிதித்துப் பணம் சேகரித்துத் தங்கள் ஜாதியார்களுடைய சொந்தத் தனி உபயோகத்திற்காகத் தாழ்ந்த ஜாதியார்கள் என்னப் படுவோர்கள் வசிக்கும் வீடுகளுக்குச் சமீபமாயுள்ள தங்கள் சொந்த இடத்தில் ஒரு குளமோ, கிணறோ வெட்டுகின்றனர். தங்கள் வீடுகளுக்குச் சமீபமாக இருக்கின்ற காரணத்தால் அத்தாழ்ந்த ஜாதியார்கள் என்னப் படுவோர்கள் அதில் குளிக்க வேண்டும், குடிதண்ணீர் எடுக்கவேண்டும் என்று சொல்லித் தனியுரிமை கொண்டாட முற்படுகின்றார்கள். அவர்கள் செயலை அக்குளத்தின், அல்லது கிணற்றின், சொந்தக்காரர்களான ஜாதியார்கள் தடுக்கின்றார்கள். அதனால் அவ்வுயர்ந்த ஜாதியார் என்னப்படு வோருக்கும் அத்தாழ்ந்த ஜாதியார் என்னப்படுவோருக்கும் ஒற்றுமையின்மையும், பகைமையும் உண்டாகின்றன.

இவ்வுதாரணங்களால் நம் தேசத்தின் சில ஜாதியார்களுள் உண்டாயிருக்கிற ஒற்றுமையின்மைக்கும் பகைமைக்கும் முக்கிய காரணம் பிறப்பை ஆதாரமாகக்கொண்டுள்ள அநீதியான ஜாதி வேற்றுமையும் உயர்வு தாழ்வும் மாத்திரம் அல்ல; பொதுவுடைமைகளில் சிலர் மற்றவர்களுக்குரிய சமவுரிமையைக் கொடுக்க மறுத்தலும், தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரர் அல்லாத சிலர் சமவுரிமை கொண்டாட முற்படுதலுமாம் என்பது தெளிவாக விளங்கும். ஓர் உடைமை பொதுவுடைமையா, தனியுடைமையா என்று தீர்மானிப்பதற்குத் தக்க சான்று இல்லையாயின், அவ்வுடைமையைப் பொது உடைமை என்றே தீர்மானித்துவிடலாம். ஒற்றுமை நிமித்தமாகத் தனியுடைமைகளிற் சிலவற்றைப் பொதுவுடைமைகளாக இந்தியர்களெல்லாம் அநுபவிக்கும்படி விட்டுவிடலாம். இவ்வாறாக நமக்குள் ஒற்றுமையை உண்டுபண்ணி வளர்த்தல் இன்றியமையாதது.

'தென்இந்தியா நலவுரிமை சங்கத்தார்' சென்ற பல வருஷங்களாக வேண்டுகின்ற 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' நமது பொதுவுடைமைகளில் முக்கியமான சிலவற்றை விளக்கிக்காட்டி நமக்குள் ஏற்பட்டுள்ள

ஒற்றுமையின்மையையும் பகைமையையும் குறைக்க வல்லது. அது காரணத்தால் அவ் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை'ப் பற்றிச் சில இங்குக் கூறுகின்றேன்.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இராஜாங்க உத்தியோகங்களையும், சட்டசபை, ஜில்லா நிர்வாக சபை (District Board) முதலிய ஸ்தலஸ்தாபன உத்தியோகங்களையும் காங்கிரஸ் மகாசபை, அதன் கிளைச்சபை முதலிய பொதுஸ்தாபன உத்தியோகங்களையும் நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர் ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து பற்றிக் கொள்ளுதலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், அதாவது மேற்கூறிய உத்தியோகங்களையும், அவற்றின் அதிகாரம், சம்பளம், செல்வாக்கு முதலியவற்றையும் ஒவ்வொரு ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து அந்தந்த ஜாதியார் அடையும்படி செய்தல். (உத்தியோக மென்பது சம்பள உத்தியோகமும், கௌரவ உத்தியோகமுமாம்).

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகாதென்று தேசாபிமானத்திலும், அறிவிலும், சிறந்தவராயுள்ள சிலர் கூறுகின்றனர். அதற்கு அவர் கூறும் காரணங்களாவன: (1) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நமது தேசத்தில் நிலவும்படி செய்து விட்டால் ஜாதி வேற்றுமையும், அது பற்றிய உயர்வும் தாழ்வும் நமது தேசத்தில் நிலைத்துப்போம்; அதுபற்றி நமது தேசத்தில் ஒற்றுமையின்மையும் பகைமையும் நிலைத்துப்போம். (2) உத்தியோக விஷயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கவனிப்பதா யிருந்தால், சில உத்தியோகங் களுக்குத் தகுதியில்லாதாரை நியமிக்கும்படியான நிலைமை ஏற்படும். (3) நம் தேசத்திலுள்ள ஜாதிகள் பல; ஒவ்வொரு ஜாதியையும்சேர்ந்தவர்கள் மிகப்பலர். உத்தியோகங் களோ மிகச்சில. அச்சிலவற்றை அம்மிகப் பலர்க்குப் பகிர்ந்து கொடுப்பது எப்படி?

இம்மூன்று காரணங்களும் யுக்திக்கு அனுபவத்திற்கும் பொருந்தாதவை. இப்பொழுது நமது தேசத்திலுள்ள ஜாதி வேற்றுமைகள் எப்பொழுது ஒழியும்? பிறப்பை ஆதாரமாகக் கொண்டு தற்காலம் நமது தேசத்தில் நிலவும் அநீதியான ஜாதி வேற்றுமைகளும், அந்த ஜாதிகளில் ஒன்றுஉயர்வு, மற்றொன்று தாழ்வு என்னும் அநீதியான கோட்பாடும் ஒருகால் ஒழியக்கூடும். அவை ஒழிந்த பின்னர் நல்லொழுக்கம், தவம், கல்வி, தொழில், செல்வம் முதலியவற்றில் ஒன்றை, அல்லது சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு ஜாதி வேற்றுமைகள் உண்டாகவா? நல்லஒழுக்கம், தவம், கல்வி, செல்வம், நற்றொழில் முதலிய நல்லவற்றை உடையோர் மேலான ஜாதியார் என்றும் தீயஒழுக்கம், தவமின்மை, கல்வியின்மை, செல்வமின்மை, தீத்தொழில்

முதலியவற்றை உடையோர் கீழான ஜாதியார் என்றும் கருதப்பட மாட்டாரா?

'ஒண்பொருள் ஒன்றே தவம் கல்வி ஆள்வினை, என்றிவற்றான் ஆகும் குலம்' என்னும் நாலடியார் வாக்கும், 'ஒழுக்கம் உடைமைகுடிமை; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' 'தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும்' 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோ டேனையவர்' 'செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு' 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்னும் பொய்யா மொழிப் புலவர் வாக்குகளும் பொய்க்குமா? அவை பொய்க்கும் எனினும் மனிதர் மேம்படுவதற்கு ஒழுக்கம் முதலியவை பற்றி உயர்வு, தாழ்வு கற்பித்தல் அவசியம் அன்றோ? (Unity in Variety) என்றபடி வேற்றுமைகளுள் ஒற்றுமை காண்டலன்றோஅறிவு? வேற்றுமை இல்லையெனின், ஒற்றுமையென்பதொன்றுண்டோ? இக்காரணங்களால் பிறப்பை ஆதாரமாகக்கொண்ட ஜாதி வேற்றுமை களும், அது பற்றிய உயர்வு தாழ்வுகளும் ஒழிதலை அறிவுடையோர் விரும்புவரே தவிர, ஒழுக்கம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்ட ஜாதி வேற்றுமைகளாவது, அது பற்றிய உயர்வு தாழ்வுகளாவது, ஒழிதலை அறிவுடையோர் விரும்பார்.

ஜாதி வேற்றுமை என்று யான் கூறுங்கால், மனிதர்கள் நிற்கும் நிலைமைகளைப் பற்றிய வேற்றுமை என்றே கொள்க . உயர்வு தாழ்வு என்று யான்கூறுங்கால், பிறரால் மதிக்கப்படும் தன்மையைப் பற்றிய உயர்வு, தாழ்வு என்றே கொள்க. மனிதர்களிற் சிலர் அவருடைய நல்ல ஒழுக்கம் முதலியவற்றைப் பற்றி உயர்வாகவும் வேறு சிலர் அவருடைய தீய ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றி தாழ்வாகவும் மதிக்கப்படுவரென்று யான் கூறினும் பொது உடமைகளிலும் பொது இடங்களிலும் அவரெல்லாருக்கும் சம உரிமையும் சம இருப்பும் கொடுக்கப்பட வேண்டுமென்றே கூறுகின்றேன். ஆனால் தனி உடமைகளிலும் தனி இடங்களிலும் அவற்றின் சொந்தக்காரர் விருப்பம்போல் நல்ல ஒழுக்கம் முதலியவற்றை உடையவர்க்கும் தீய ஒழுக்கம் முதலியவற்றை உடையவர்க்கும் முறையேஉயர்ந்த உரிமையும் இருப்பும் தாழ்ந்த உரிமையும் இருப்பும் கொடுக்கப் படலாம்.

உதாரணமாக, இராசாங்கத்தாரால் அல்லது ஸ்தல சொந்த ஸ்தாபனங்களால் ஏற்படுத்தப்பட்ட கலாசாலைகள், சத்திரங்கள், புகைவண்டிகள் அவற்றின் உணவுசாலைகள் முதலியவற்றில் எல்லா ஜாதியார்களுக்கும் சம இருப்பும் சம பந்தி போஜனமும் கொடுக்கப்பட வேண்டும். அங்கு அவர்கள் அவற்றை அடைய உரிமை உடையவர்கள். ஒருவரால் அல்லது ஒரு ஜாதியரால்,அல்லது சில ஜாதியார்களால் முறையே அவருடைய, அல்லது அந்த ஜாதியாருடைய அல்லது அந்த

சில ஜாதியார்களுடைய உபயோகத்திற்காக மாத்திரம் ஏற்படுத்தப்பட்ட கலாசாலைகள், சத்திரங்கள் முதலியவற்றில் அவற்றை ஏற்படுத்தியவர் இஷ்டப்படி சில ஜாதியாருக்குச் சம இருப்பும் சமபந்தி போஜனமும் வேறு சில ஜாதியாருக்குத் தாழ்ந்த இருப்பும் தனிப்பந்தி போஜனமும் கொடுக்கப்படலாம். தாழ்ந்த இருப்பையும் தனிப்பந்தி போஜனத்தையும் வேண்டாதார் அம்'மதியாதார் வாசல் வழி மிதிக்க வேண்டா'. அதுபற்றி அவரோடு பகைமை கொண்டாடுதல் தகுதியன்று. ஒரே தாய் தந்தை பெற்ற மக்கள்களில் ஒருவர்க்கு உயர்ந்த இருப்பும் போஜனமும் கொடுக்கப்படுகின்றன வாகலான்.

ஒருவருடைய அல்லது ஒருசிலருடைய சொந்தக்காரியங்களில் அவருடைய, அல்லது அச்சிலருடைய, இஷ்டப்படி அவர் அல்லது அச்சிலர், நடந்துகொள்ளும்படியாக மற்றவர்கள் விட்டுவிடுதலே முறையாகும். அவருடைய சொந்தக் காரியங்களில் மற்றவர்களது இஷ்டப்படி அவர் நடக்க வேண்டுமென்பது முறை அன்று. ஒருவருடைய சொந்தக் காரியங்களிலும் அவர் மற்றவர்களது இஷ்டப்படி நடக்க வேண்டுமென்றால் அவர் தம் சுதந்திரம் சுவாதீனம் முதலியவற்றை இழந்து மற்றவர்களுக்கு அடிமையாய் வாழ வேண்டியதாகவே ஏற்படும். அப்போது அவருடைய உடல், பொருள், உயிர், மனைவி, மக்கள் எல்லாம் மற்றவர்களுடைய சொந்த உடைமைகளாக விட்டுவிட வேண்டிய நிலைமையும் ஏற்படக்கூடும். அதனால் பெருங்குழப்பம் ஏற்பட்டுத் தேசத்தார்களுள் போர் நிகழவுங்கூடும்.

உலகத்திலும் அதன் ஒருபாகமாகிய நம்தேசத்திலும், சரியான ஒன்றையோ, தப்பான ஒன்றையோ ஆதாரமாகக்கொண்டு ஜாதி வேற்றுமைகளும், அவற்றைப் பற்றிய உயர்வு தாழ்வுகளும், எக்காலத்திலும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கும். அவற்றை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுதலும், அவற்றை ஒழிப்பதற்கு 'வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்' தடையென்று சொல்லுதலும் ஆழ்ந்து ஆலோசியாமல் மேலெழுந்த வாரியாகச் சொல்லுதலாம். நாம் வேண்டுவது நம் தேசத்தவருள் நித்தியமாக நிலவும் ஒற்றுமையே. அவ்வொற்றுமைக்கு ஜாதி வேற்றுமை ஒழிவும், அதுபற்றிய உயர்வு தாழ்வு ஒழிவும் அவசியம்என்று சிலர் சொல்லி வருகிறபடியால் அவ்விரண்டின் ஒழிவையும் நம்மில் சிலர் விரும்புகின்றனர். அவற்றின் ஒழிவு அவசியம் என்று அச்சிலர் கூறுவதற்குக் காரணம், தற்காலம் நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான ஜாதி வேற்றுமைகளும் அவற்றைப் பற்றிய உயர்வுதாழ்வுகளுமே.

ஆனால், உயர்வு தாழ்வு இல்லாத ஒரே ஜாதியாருள்ளும், ஒரே குடும்பத்தினருள்ளும், ஒற்றுமையின்மையும், பகைமையும் கொலை

முதலியனவும் நிகழக் காண்கின்றோம். இதன்றியும், தம் ஜாதி உயர்வென்றும், பிறர் ஜாதி தாழ்வென்றும் கருதும் இருவேறு ஜாதியார். சிலர் ஒற்றுமைப்பட்டு அத்திவந்த நண்பர்களாக வாழ்கின்றதையும் காண்கின்றோம். இக்காட்சியால் நம் தேசத்தாருள் நிலவும் ஒற்றுமையின்மை, பகைமை முதலியவற்றிற்கு முக்கியமான காரணம் ஜாதி வேற்றுமையும், அது பற்றிய உயர்வு தாழ்வும் அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கத் தக்கது. ஆயின், நம் தேசத்தாருள் நிலவும் ஒற்றுமையின்மை, முதலியவற்றிற்கு முக்கியமான காரணம்தான் யாதோ? எனின், நம்தேசத்து இராஜாங்க உத்தியோகங் களிலும், சட்டசபை முதலிய ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களிலும், காங்கிரஸ் மகாசபை முதலிய பொது ஸ்தாபன உத்தியோகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாமையே. 'இவ்வுண்மையை ஓர் உதாரண முகத்தால் விளக்குகின்றேன்.

ஒரு குடும்பத்தில் சகோதரர்கள் பத்துப்பேர்கள்இருக்கிறார்கள். குடும்பத்துக்கு ஆயிரம் ஏக்கர் நன்செய் புன்செய்களும், கர்ணம் உத்தியோகம் ஒன்றும் கிராமமுனுசிபு உத்தியோகம் ஒன்றும் இருக்கின்றன. சகோதரர் பதின்மரில் வயதிலும் கல்வியிலும் முதிர்ந்த இருவர், கர்ணம் உத்தியோகத்தை ஒருவரும், கிராம முனிசிபு உத்தியோகத்தை மற்றொருவருமாகக் கொண்டு அவற்றின் சம்பளங்களைப் பெற்றும் குடும்பநிலங்களை எல்லாம் மற்றைச் சகோதரர்கள் எண்மரைக் கொண்டு பயிரிடுவித்து விளை பொருள்களை அடைந்தும், அவற்றைத் தம் இஷ்டப்படி தமது மனைவி மக்களின் சுக வாழ்க்கைக்கு உபயோகித்துக்கொண்டும் மற்றைச் சகோதரர்கள் எண்மரும் அவர்கள் மனைவிமக்களும் அன்னவஸ்திரத்திற்குத் திண்டாடும்படி விட்டுக் கொண்டும் இருக்கின்றனர். வயதிலும் கல்வியிலும் முதிர்ந்த அவ்விரு சகோதரரும் கர்ணம், கிராமமுனிசிபு உத்தியோக அதிகாரம், சம்பளம், செல்வாக்கு, குடும்பநிலங்களின் ஊதியம் முதலியவற்றை அநுபவிக்கின்றதையும், தாமும் தமது மனைவிமக்களும் அன்னவஸ்த்திரத்திற்குத் திண்டாடுகின்றதையும், மற்றைச் சகோதரர் எண்மரும் கவனித்தார்கள்.

உடனே அவர்கள் எண்மரும் முந்திய இருவரையும் பார்த்துக் 'கர்ணம் கிராமமுனிசிபு உத்தியோகங்கள் குடும்பத்துக்குப் பொதுவான உத்தியோகங்கள்: ஆயிரம் ஏக்கர் நன்செய் புன்செய்களும் குடும்பத்துக்குப் பொதுவான நிலங்கள். அவ்விரு உத்தியோகங் களையும் நிலங்களையும் சமமாகப் பத்துப்பங்கு வைத்துப்பிரித்து அநுபவிப்போம்' என்று கூறுகின்றனர். முந்திய சகோதரர் இருவரும் மற்றச் சகோதரர் எண்மரையும் பார்த்து 'நமது உத்தியோகங்களையும் சொத்துக்களையும் நாம் பிரிவினை செய்துகொண்டால், நமக்கு ஒற்றுமையின்மை ஏற்பட்டு விடும். கர்ணம் உத்தியோகத்தையும் கிராம முனிசிபு உத்தியோகத்தையும்.

வகிக்க நீங்கள் தகுதி இல்லாதவர்கள். அன்றியும் இரண்டு உத்தியோகங்களைப் பத்துப் பேர்கள் பகிர்ந்து கொள்வ தெப்படி? உத்தியோக அதிகாரமும் செல்வாக்கும் இல்லாதவர்கள் சொத்துக்களைச் சரியாகப் பரிபாலித்தல் முடியாது. ஆதலால் நம் குடும்ப உத்தியோகங்களையும் சொத்துக்களையும் பிரிக்க வேண்டா' என்று சொல்லுகின்றனர்.

மற்றை எண்மரும் 'நாங்கள் ஒவ்வொருவரும் கர்ணம் உத்தியோகத்தையும் கிராமமுனிசீபு உத்தியோகத்தையும் வகித்துப் பார்த்தால்தானே நாங்கள் அவற்றிற்குத் தகுதியுடையவராவோம். இரண்டு உத்தியோகங்களைப் பத்துப்பங்கு வைப்பதெப்படி யென்றால், ஒவ்வொருவர் ஒவ்வொரு வருஷமாக அவ்வுத்தியோகங் களைப் பார்த்து அவற்றின் சம்பளம், அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றை அடைவோம். நன்செய் புன்செய்களைச் 'சம பாகமாகப் பிரித்துக் கொள்வோம்' என்று கூறுகின்றனர்.

கனவான்களே! உத்தியோகங்களையும், குடும்பச் சொத்துக் களையும் சமமாகப் பிரித்துக்கொள்வதால் அச்சகோதரர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமா? அல்லது உத்தியோகங்களையும், சொத்துக்களையும் பிரித்துக் கொள்ளாமல் முந்திய சகோதரர் இருவரும் மாத்திரம் அவற்றின் ஊதியங்களை அடைந்து அநுபவிப்பதால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமா? அவ்வுத்தியோகங்களையும் சொத்துக்களையும் சமபாகமாகப் பிரித்துக்கொள்வதே அச்சகோதரர் பதின்மருள்ளும் ஒற்றுமை நிலவுவதற்கு வழியென்பதும், அவை பிரிக்கப்படாதிருத்தல் அச்சகோதரர் பதின்மருள்ளும் ஒற்றுமையின்மையும் பகைமையும் வளர்வதற்கு வழி என்பதும் பள்ளிச்சிறார்க்கும் தெள்ளென விளங்கத்தக்கவை.

இனி, சட்டசபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், காங்கிரஸ் சபை முதலியபொது ஸ்தாபனங்களும் வகுப்புவாரிப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அந்தந்த வகுப்பினர்களே உடையவர்களா யிருத்தல் வேண்டும். ஆனால், சிலர் அப்பிரதிநிதிகளும் கலப்புத் தொகுதிகளால்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வகுப்புவாரித்தொகுதிகள் ஏற்படுத்தப் படுமானால் ஜாதி வேற்றுமைகள் இன்னும் வளருமென்றும் கூறுகின்றனர். வகுப்புவாரித் தொகுதிகள் ஏற்படுத்துவதனால் ஜாதி வேற்றுமைகள் வளரப்போவதில்லை. அவை வளர்ந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலும் கூட, அதனால் நம் தேசத்திற்குக் கேடு ஒன்றும் உண்டாகப் போவதில்லை. நாம் வேண்டுவதெல்லாம் ஒற்றுமையொன்றே. வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வகுப்புவாரித் தொகுதியாக வாக்காளர்கள் (வோட்டர்கள்) ஏற்படுத்தப்பட வில்லையானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பொய்ப்பேச்சாகிப்

பழையபடி நமக்குள் ஒற்றுமையின்மையும், பகைமையும், சண்டையும் தான் வளர்ந்து கொண்டிருக்கும். நமக்குள் ஒற்றுமையை உண்டாக்கி வளர்ப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வகுப்புவாரி வோட்டர்த் தொகுதிகள் இன்றியமை யாதவை. ஆதலால் வகுப்புவாரிப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அந்தந்த வகுப்பிலுள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்பாலவரையும், பெண்பாலாரையும் வாக்காளர்களாக ஏற்படுத்துவதற்கு வேண்டுவன செய்யும்படிக்கும் தேசாபிமானச் சகோதரர்களையெல்லாம் பிரார்த்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதலால், நம் தேசத்தாருள் ஒற்றுமை ஏற்படுவதற்கு நமது இராஜாங்க உத்தியோகங்களிலும், ஸ்தல ஸ்தாபன உத்தியோகங் களிலும், பொது ஸ்தாபன உத்தியோகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நிலவும்படி செய்தலே உண்மைத் தேசாபிமானி ஒவ்வொருடைய கடமையுமாகும். இவ்வுண்மையை அறிந்தே நம் தலைவர்கள் காங்கிரஸ் மகாசபையின் உத்தியோகம் முதலியவற்றைப் பற்றிய விதிகளில் முகம்மதியர்களுக்கு இத்தனை ஸ்தாபனங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தாழ்ந்த வகுப்பினரென்போர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வரையறுத்துத் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் ஒற்றுமை யின்மையை உண்டுபண்ணும் என்பவரைப்பற்றி யான் என்ன கூறுவேன்? அவர் உண்மையை உணராதவரென்று கூறவோ, ஒற்றுமையை நாடாதவரென்று கூறவோ, காங்கிரஸ் மகாசபை விதிகளின் கருத்துப்படி நடக்காதவரென்று கூறவோ, என் மனம் துணியவில்லை. ஆதலால் அவரைப்பற்றி யான் குறையொன்றும் கூறாமலே, அவர் இனிமேலா யினும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் மேற்கூறிய உத்தியோகங் களிலும், மற்றைப்பொது உடைமைப் பரிபாலனங்களிலும் நிலவும்படி செய்து நமக்குள் தற்காலம் நிலவாநின்ற ஒற்றுமையின்மை, பகைமை முதலியவற்றை நீக்கி ஒற்றுமையை உண்டாக்கி வளர்க்கும்படியாகப் பிரார்த்தித்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

## இராஜாங்க உத்தியோகங்கள்

சட்டசபை, நகர பரிபாலன சபை, ஜில்லா நிர்வாக சபை, தாலுகா நிர்வாக சபை முதலியவற்றின் அங்கத்தினர் ஸ்தானங்களைத் தேச பக்தர்கள் ஏற்றுக்கொள்ளலாமென்று இப்போது நமது தலைவர்க ளெல்லாம் ஒரு மனதாகச்சொல்லி விட்டபடியாலும் அந்த ஸ்தானங்களை நம் தேச பக்தர்கள்இப்போது ஏற்றுக்கொண்டு வருகிறபடியாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளுதலின் ஆவசியகத்தைப் பற்றி யான் ஒன்றும்

கூறவேண்டுவதில்லை. ஆனால் இராஜாங்க உத்தியோகங்களைத் தேசபக்தர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று நம் தலைவர்களில் சிலர் இன்னமும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். இராஜாங்க உத்தியோகங் களைத் தேசபக்தர்கள் ஏற்றுக்கொள்ள வில்லையானால், தேசபக்தரல்லா தார்கள் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக் கின்றார்கள். அவ்வுத்தி யோகங்களைத் தேசபக்தர்கள் ஏற்றுக்கொண்டால், அவற்றின் அதிகாரம், செல்வாக்கு, சம்பளம் முதலியவற்றை அவர் குடும்ப நன்மைக்காகவும், நம் தேச நன்மைக்காகவும் அவர்கள் உபயோகிப்பார்கள். அவற்றைத் தேசபக்தரல்லாதார்கள் ஏற்றுக்கொண்டால், அவற்றின் அதிகாரம், செல்வாக்கு, சம்பளம் முதலியவற்றை அவர்களுடைய சொந்தக் குடும்ப நன்மைக்கும், தேசத் தீமைக்கும் அவர்கள் உபயோகிப்பார்கள்.

இராஜாங்க உத்தியோகங்களை நம் தேசத்தீர்களில் எவருமே ஏற்றுக் கொள்ளாமலிருக்கும்படி செய்துவிடலாமென்று சிலர் கூறுகின்றனர். அது அசாத்தியமான காரியம், அதிகாரத்தையும், செல்வாக்கையும், பொருளையும் விரும்பாதவர்கள் இவ்வுலகத்தில் இல்லையாகலான்; உணவு, உடை முதலியவற்றையும் மனைவி, மக்கள் முதலியவர்களையும் விரும்புகிறவர்களெல்லாம் இராஜாங்க உத்தியோகங்களையும், அவற்றின் அதிகாரம்,செல்வாக்கு, சம்பளம் முதலியவற்றையும் விரும்புவார்களென்பது வெள்ளிடை மலை போல் விளங்கத்தக்கது. ஆதலால், இராஜாங்க உத்தியோகங்கள் வேண்டா என்னும் வெறும் பேச்சை விட்டுவிட்டு நாம் இராஜாங்க உத்தியோகங்கள் எல்லா வற்றையும் அடையும்படியான மார்க்கத்தில் செல்வோமாக. இராஜாங்கத் தாரோடு கோபித்துக்கொண்டு இராஜாங்க உத்தியோகங்கள் வேண்டா என்றல்,குளத்தோடு கோபித்துக்கொண்டு குளியாமல் போதலை ஒக்கும். அதனால் இராஜாங்கத்தார் நஷ்டம் அடையப் போவதில்லை. நாம்தான் நஷ்டம் அடைவோம்.

சுய அரசாட்சி என்பதுதான் யாது? நாம் நம் தேசத்தை ஆளுதல்தானே? கவர்னர் உத்தியோகம்முதற்கொண்டு, வெட்டியான் உத்தியோகம் வரையிலுள்ள சகல உத்தியோகங்களையும் நம் தேசத்தார்களே வகிப்பார்களாயின், நம்தேசத்தார்களே நம்தேசத்தை ஆள்பவர்களா கின்றார்கள் என்பதில் என்ன தடை?

கல்வி, அறிவு, தேசாபிமானம், இராஜீய ஞானம் முதலியவை நிறைந்துவிளங்கிய ஸ்ரீதிலகர், நம் தேச அரசாட்சி சம்பந்தமான சகல உத்தியோகங்களையும் நம் தேசத்தார்கள்அடைதலே நாம் சுய அரசாட்சி அடைதலாகுமென்று அவர் ஆயுள்காலமெல்லாம் கூறிவந்தார். இராஜீய விஷயங்களில் அவரைப்பின்பற்றுகிற யானும் அதனையே கூறுகின் றேன். நம் தேசத்தின் மாகாணத்தின் கவர்னராக நமது வார்டு சின்னா நியமிக்கப்படவில்லையா?அவ்வாறு நம் தேசத்தின்பல மாகாணங்

களுக்கும் லார்டுகளான பல இந்தியர்கள் கவர்னராக நியமிக்கப்படுவார்களாயின், நம் தேச அரசாட்சியை நாம் அடைந்துவிட்டோமென்பதில் என்ன ஐயமுளது? அவ்வாறு நம் தேசத்து எல்லா மாகாணங்களுக்கும் இந்தியர்கள் கவர்னர்களாக நியமிக்கப் படுவார்களா என்று சிலர் வினவலாம். லார்டு சின்னா கவர்னராக நியமிக்கப்பட்டதற்கு காரணம் யாது? அப்போது தேசத்தலைவர்களுள் காணப்பட்ட ஒற்றுமையன்றோ? லார்டு சின்னா உத்தியோகத்தை விட்டதற்குக் காரணம் யாது? அப்போது தேசத்தலைவர்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையின்மையன்றோ நம் தேசத்தலைவர்கள் எல்லாருள்ளும் பூரண ஒற்றுமை ஏற்பட்டு விட்டதென்று நம்மை ஆள்வோர் எந்த நிமிஷம் காண்பரோ, அந்த நிமிஷமே நமது தேசத்தின் பலமாகாணங்களும் நம்மவர்களையே கவர்னர்களாக நியமித்து நமது தேசத்தை நாமே ஆளும்படி செய்துவிடுவர் என்பது நிச்சயம்.

இராஜாங்க உத்தியோகங்களைக் கொடுப்போர்கள் இராஜாங்க அதிகாரிகளாயிருக்கும்போது, இராஜாங்க உத்தியோகங்களில் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்'. நிலவும்படி நாம் செய்வது எப்படி என்று சிலர் வினவுகின்றனர்.

ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களிலும், பொதுஸ்தாபன உத்தியோகங்களிலும், 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' சரியாக நிலவும்படி நாம் செய்துவிட்டோமென்றால், இராஜாங்க உத்தியோகங்களிலும் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' சரியாக நிலவும்படி நம் இராஜாங்க அதிகாரிகள் செய்துவிடுவார்கள். இராஜாங்க உத்தியோகங்களிற் பெரும்பாலானவற்றைத் தற்காலம் ஒன்றிரண்டு ஜாதியார்கள் மாத்திரம் கைக்கொண்டிருக்கிறார்கள். அவ்வுத்தியோகங்களை நம் தேசத்திலுள்ள எல்லா ஜாதியார்களுக்கும் பகிர்ந்துகொடுப்பது எவ்வாறென்று சிலர் வினவுகின்றனர். கவர்ன்மென்ட் அதிகாரிகள் ஒன்று செய்ய வேண்டுமென்று நினைப்பார்களாயின். அவர்கள் அதனை எப்படியும் செய்து முடித்துவிடுவார்கள். அதற்குரிய வழிகளெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுதுள்ள இராஜாங்க உத்தியோகங்களில் எந்தெந்த ஜாதியார்களுக்கு எத்தனை எத்தனை கொடுக்கப்பட வேண்டுமென்று கணக்கிடப்படுகிறதோ, அந்தக் கணக்குப்படி அந்தந்த ஜாதியார்கள் அத்தனை அத்தனை உத்தியோகங்கள் அடையும் வரையில் காலியாகும் உத்தியோகங்களுக்கு வேறு ஜாதியார்கள் நியமிக்கப்படக் கூடாதென்று கவர்ன்மென்ட் உத்தரவு (G.O.) ஒன்று பிறப்பித்து ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவந்துவிடுவார்கள். ஆனால் இவ்வுத்தரவு நாம்விரும்பும் பயனை விரைவில் அளிக்கமாட்டாது. மற்றை ஜாதியார்களுக்காக என்னென்ன உத்தியோகங்களில் எத்தனை எத்தனை கொடுக்கப்படவேண்டுமென்று கணக்கிடப்படுகின்றனவோ, அத்தனை

உத்தியோகங்களையும் இராஜாங்கத்தார் உடனே காலி செய்விக்க வேண்டும். அதற்கு இத்தனை வருஷத்திற்கு மேற்பட்டு இன்னின் உத்தியோகங்களை வகிக்கின்றவர்கள் உடனே அவ்வுத்தியோகங்களை விட்டு ஓய்வுச் சம்பளம் வாங்கிக்கொண்டு விலகிவிடவேண்டு மென்றும், இத்தனை வருஷத்திற்குட்பட்டு இன்னின்ன உத்தியோகங் களை வகிக்கின்றவர்களெல்லாம் கவர்ன்மென்ட்டுக்குத் தேவையில்லை யென்றும் ஒரு சட்டம் (Bill) சட்டசபையிற்கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அந்தச் சட்டப்படி முந்தியவர்களையும், பிந்தியவர்களையும் அவரவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவிட்டுக் காலியான அவ்வுத்தி யோகங்களை மற்றை ஜாதியார்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இராஜாங்க அதிகாரிகள் அவ்வாறு சட்டம் உண்டுபண்ண முற்பட வில்லையானால், சட்டசபையிலுள்ள நமது பிரதிநிதிகள் மூலமாக அவ்வாறான சட்டமொன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றும்படி செய்து அந்தச் சட்டத்தை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரும்படி கவர்ன்மென்ட் அதிகாரிகளை நாம் வற்புறுத்த வேண்டும்.

## பிராமணரும் பிராமணரல்லாதாரும்

'பிராமணரும் பிராமணரல்லாதாரும்' என்று கூறும்போது, யான் முக்கியமாகச் சென்னை மாகாணப் பிராமணரையும் பிராமணரல்லா தாரையுமே குறிக்கிறேன். 'பிராமணரல்லாதார்' என்னும்போது முகமதியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துக்கின்ற ஹிந்துக்கள் என்னும் நான்கு வகுப்பினர்களையும் குறிக்கின்றேன்.

பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையும், பகைமையும் வளர்ந்து இப்போது துண்டுபட்டுப் போகும்படியான நிலைமை (Breaking point) க்கு வந்துவிட்டது. உண்மைத் தேசாபிமானிகள் இப்போது விரைந்து முன்வந்து பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் ஏற்பட்டுள்ள, ஒற்றுமையின்மைக்கும் பகைமைக்குமுரிய உண்மைக் காரணங்களைக் கண்டுபிடித்து ஒழிக்காத விஷயத்தில், நாம் சுய அரசாட்சி என்ற பேச்சையும் கூட விட்டுவிடும்படியான நிலைமை வெகுவிரைவில் ஏற்பட்டுவிடுமென்று யான் அஞ்சுகிறேன்.

நமது தேசத்தின் வட மாகாணங்களில் ஹிந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் ஏற்பட்டுள்ள பகைமையையும் சண்டையையும் நீக்கி ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென்று நமது மாகாணத்திலுள்ள சிலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். என்ன வெட்கக்கேடு! நமது மாகாணத்தில் நம்முடன் வசித்துவரும் பிராமணருக்கும் பிராமணரல்லா தாருக்கும் ஏற்பட்டிருக்கிற ஒற்றுமையின்மையையும் பகைமையையும்

நீக்கி அவ்விரு வகுப்பினர்களுக்குள்ளும் ஒற்றுமை உண்டுபண்ண மாட்டாதார் பஞ்சாபு மாகாணத்திலுள்ள முகமதியர் களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஏற்பட்டுள்ள பகைமையையும் சண்டைகளையும் நீக்கி அவ்விரு வகுப்பினருள்ளும் ஒற்றுமையை உண்டாக்கப்போகின்றனராம்! இது புதுமையிலும் புதுமை.

பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கும் ஏற்பட்டுள்ள சண்டைகளை உண்டு பண்ணுகின்றவர் இராஜாங்கத்தாரே என்றும், சுதேச மன்னர்கள் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளில் ஜாதிச்சண்டைகள் இல்லை என்றும் நம் தேசத்துக்குச் சுய அரசாட்சி வந்துவிட்டால் ஜாதிச் சண்டைகள் எல்லாம் நீங்கிவிடும் என்றும் சிலர் சொல்லுகின்றனர். இந்த மூன்றும் முழுப்பொய். பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டை களுக்குக் காரணம் ஒன்றுமே இல்லையெனின் இராஜாங்கத் தாராலோ, மற்றவராலோ, அவர்களுக்குள் சண்டையை உண்டு பண்ணமுடியாது. சுதேச மன்னர்கள் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளிலும் ஜாதிச்சண்டைகள் இல்லாமல் இல்லை. அவற்றிலும் தென்னாடுகளில் பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டைகள் இருக்கின்றன. சுய அரசாட்சிக்கு முதல்வழி நமது தேசத்தினர்களெல்வாம் ஒற்றுமைப்படுதல். உண்மை அவ்வாறிருக்க, சுய அரசாட்சி வந்துவிட்டால் நம் தேசத்தினர்களுள் ஒற்றுமை உண்டாய் விடும் என்று சொல்வது நீந்தக் கற்றுக்கொண்டால் நீரில் இறங்கலாம் என்பதுபோலாம். ஒருவன் நீரில் இறங்காமல் நீந்தக் கற்றுக்கொள்ளப் போவதில்லை. அதுபோல நம் தேசத்தார்களெல்லாம் ஒற்றுமைப் படாமல் நாம் சுய அரசாட்சிஅடையப்போவதில்லை.

தேசாபிமானிகளென்றும், தேசத் தலைவர்களென்றும் சொல்லப்படும் பிராமணர்களிற் சிவர் தமதுபேச்சுக்களிலும், எழுத்துக்களிலும், நடக்கைகளிலும் பிராமணர்-பிராமணரல்வதார் சண்டைகள் இங்கு இல்லாதது போலக் காட்டிக்கொண்டு வருகின்றனர். இவர் இவ்வாறு செய்வதின் நோக்கம், இவர் ஜாதியாருக்கும் மற்றை ஜாதியார்களுக்கு முள்ள சண்டைகளைப் பிற மாகாணத் தேசாபிமானி களும் தேசத் தலைவர்களும் அறிவார்களாயின், தம்மை மதிக்க மாட்டார்கள் என்ற நினைப்போ, அல்லது அச்சண்டைகளுக்குரிய காரணங்களை விசாரித்து நீக்கத் தலைப்படுவார்களாயின், தம் ஜாதியார்களே இச்சண்டைகளுக்குக் காரணஸ்தர்கள் என்பதை அறிந்து கொள்ளுவார்கள் என்ற அச்சமோ தெரியவில்லை. இவர் நோக்கம் எதாயினும் ஆகுக. நமது தேச ஒற்றுமைக்கு ஒரு பெருநோயாய்த் தோன்றியுள்ள பிராமணர் - பிராமணரல்வாதார் சண்டைகளை ஒழிப்பதற்குரிய வழிகளை நாம்சிந்திப்போமாக.

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் நம் பெரியார். பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டை நோயோ அளவுகடக்கும் நிலைமைக்கு வந்துவிட்டதென்பது இம்மாகாணாத்திலுள்ள ஒவ்வொரு ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் நேரில் தெரிந்த விஷயம். ஆதலால் அச்சண்டைகளைப் பற்றியோ, அவற்றின் தற்கால நிலைமைகளைப் பற்றியோ நாம் ஆராயவேண்டிய அவசியம் இல்லை. அச்சண்டை நோயின் முதல் (காரணங்கள்) கூடப்பிராமணரலலாதார்களிற் பலர்க்கும், பிராமணர்களிற்சிலர்க்கும் நன்றாகத் தெரியும். அக்காரணங்களைத் தெரியாமல் இருக்கிற பிராமணரல்லாத சிலரும் பிராமணர் பலரும் பிற மாகாணத் தேசாபிமானிகளும் தேசத்தலைவர்களும் தெரிந்து கொள்ளும்பொருட்டு இங்குக் கூறுகின்றேன்.

1. பிராமண ஜாதியார்களெல்லாம் மேலானவர்களென்றும், மற்றை ஜாதியார்களெல்லாம் கீழானவர்களென்றும் தங்கள் சொல்லாலும் செயலாலும் காட்டி மற்றை ஜாதியார்களை இழிவுபடுத்தி வருகிறார்கள்.

2. பிராமணர்களே பிராமணரல்லாதார்கள் கடவுளை அடைவதற் குரிய வழியைக்காட்டும் குருமார்களென்றும், பிராமணரல்லதார் களின் குடும்பங்களில் நிகழும் சகல மங்கல அமங்கலச் சடங்குகளையும் நடாத்துவிப்பதற்குரிய ஆச்சாரியார்கள் என்றும் கூறிப் பிராமணரல்லாதார்களின் பொருள்களை அவர்கள் தாய்வயிற்றில் உற்பவித்த காலம்முதல் அவர்கள் இறக்கும் வரையிலும், அவர்கள் இறந்தபின் அவர்கள் மக்கள் உயிரோடிருக்கும் காலம் முடியும் வரையிலும்கவர்ந்து கொண்டு வருகிறார்கள்.

3. சர்க்கார் உத்தியோகங்களையும் ஸ்தல ஸ்தாபன உத்தியோகங் களையும் பொதுஸ்தாபன உத்தியோகங்களையும் வகிப்பதற்குரிய அறிவும் திறமையும் உரிமையும்தங்களுக்கே உண்டென்று சொல்லி அவ்வுத்தியோகங்களையெல்லாம் தாங்களே கொண்டு அவற்றின் சம்பளம், அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றை எல்லாம் அபகரித்துவருகின்றார்கள் பிராமணர்கள்.

இம்மூன்றும் பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டை நோயின் முதல்கள் (காரணங்கள்). இக்காரணங்களை ஒழிப்பதற்கு வழிகளை ஆராய்வோமாக.

முதலாவது காரணம் எப்படி ஏற்பட்டதென்றால், பிராமணரல்லாதார் களாகிய தமிழர்களின் முன்னோர்கள் பிராமணர்களின் முன்னோர்களாகிய ஆரியர்களை 'மிலேச்சர்' என்றும், யாகத்தின் பெயரால் கண்டவற்றை யெல்லாம் தின்பவர்களென்றும் நினைத்தவற்றையெல்லாம் செய்பவர்க ளென்றும், சொல்லியும் நிகண்டு முதலிய நூல்களில் எழுதிவைத்தும்,

அவர்களைத் தொடாமலும் அவர்கள் தொட்ட பொருள்களைக் கொள்ளாமலும், அவர்களைத் தொட நேர்ந்தபோது குளித்தும் அவர்களை இழிவுபடுத்தி வந்தார்கள். அவ்விழிவை ஒழிப்பதற்கு வழி என்ன என்று அவ்வாரியார்கள் ஆலோசனை செய்தார்கள்.

'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - தான்; தன்னை
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்'

என்ற உண்மையைக் கண்டார்கள்.

உடனே தங்களைப் பிராமணர்கள் என்றும், மற்றைத் தமிழர்களெல்லாம் சூத்திரர்கள் என்றும், சொல்லவும் எழுதவும் தலைப்பட்டார்கள்; அவ்வாறு தாங்கள் மேலான ஜாதியார் என்றும், தமிழர்களெல்லாம் கீழான ஜாதியார்கள் என்றும் நடக்கையிலும் காட்டினார்கள். சிறிது காலத்தில் அவர்கள் மேலான ஜாதியாராகவும், தமிழர்கள் கீழான ஜாதியார்களாவும் அறியார் பலரால் கருதப்படமாட்டார்கள். தமிழர்களின் முன்னோர்களால் தங்களுக்கு ஏற்பட்ட இழிவுநோய் தாங்கள் மேலான ஜாதியார்கள் என்று கூறிய மருந்தால் நீங்கிப்போயிற்று. அந்த மருந்தையே தமிழர்கள் கைக்கொள்ளின் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற நோய் நீங்கிப்போம். அதாவது பிராமணரல்லாத ஜாதியர்களில் ஒவ்வொருவரும் தாம் பிராமணருக்கு மேற்பட்ட ஜாதியாரென்று கருதிப் பிராமணர் மற்றை ஜாதியார்களை நடத்துகிறது போலப் பிராமணர்களை நடத்தி வருவராயின், தம் ஆரோப இழிவு நோய் போய்விடும். இந்நோய் முதலைப் போக்குவதற்கு வேறு மருந்து தேடவேண்டுவதில்லை.

இரண்டாவது காரணம், மேற்கண்டபடி தாங்கள் மேலான ஜாதியார்கள் என்று கொண்ட கொள்கை அழியாதிருக்கும் பொருட்டு பிராமணர்கள் மற்றை ஜாதியார்களுக்கு விதித்த அபராதத்தண்டனை. அத்தண்டனையை மாற்றிக்கொள்வதற்குரிய அதிகாரம் பிராமணரல்லாதார்கள் கையிலேயே இருக்கிறதைக் கண்டுபிடித்து நம் திருவாளர். ஈ.வெ.இராமசாமி நாயக்கரவர்கள் பிராமணரல்லாதார் களுக்கு கூறி அதனை உபயோகிக்கும்படி செய்துகொண்டு வருகிறார்கள். அவ்வதிகாரத்தைப் பிராமணரல்லாதார்கள் ஊக்கத்துடன் உறுதியாகச் செலுத்தி தங்கள் அபராதத் தண்டனையை மாற்றிக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டைக்குரிய மூன்றாவது காரணத்தைப் போக்குவதுதான் மிகக்கஷ்டமான காரியம். இக்காரண விஷயத்தைப்பற்றித் தேசத் தலைவர்களென்று சொல்லப்படுகிற பிராமண சகோதரர்களில் சிலர் பேசுகிற பேச்சுக்களைப் பார்க்கும்போது

மிகவியப்புத் தோற்றுகின்றது. இராஜாங்க உத்தியோகங்களைக் கவருவதற்காக இராஜாங்கத்தாரோடு சேர்ந்து அவரைப் பலப்படுத்து கின்ற (பிராமணரல்லதார் அடங்கிய) ஒரு கட்சியாரை ஒழிப்பதற்காக காங்கிரஸ்காரர்கள் இரட்டையாட்சிக்கு உதவிபுரிய வேண்டியவர் களாயிருக்கிறார்கள் என்று ஒரு பிராமணத் தலைவர் சில தினங்களுக்கு முன் பேசியிருக்கிறார். ஆ! என்ன ஆச்சரியம்? நமது தேசத்தில் நூறு பேர்களுக்கு மூன்று பேர்களாயிருக்கின்ற நம் பிராமண சகோதரர்கள் நமது தேசத்து இராஜாங்க உத்தியோகங்ளில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு விதமும் அவ்வுத்தியோகங்களில் இந்தியர்கள் பெறும் சம்பளத் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு விதமும் (இக்கணக்குச்சிறிது ஏறத்தாழ இருக்கலாம்) அடைந்துவருகிறபோது, பிராமணரல்லதார்கள் இராஜாங்க உத்தியோகங்களைக் கவருவதற்காக இராஜாங்கத்தாரோடு சேர்ந்து அவரைப் பலப்படுத்துகின்றார்கள் என்று காங்கிரஸ் தலைவர் என்னும் பிராமணர் ஒருவர் பேசுவராயின், மற்றைப்பிராமணர்கள் என்னென்ன பேசத்துணிய மாட்டார்கள்? பிராமணர்கள் நம் தேசத்தில் சிறு தொகையினரா யிருத்தலால், தம்முடைய உரிமைகளை மற்றை ஜாதியார்கள் கைப்பற்றிக் கொள்வார்கள் என்ற அச்சத்தால், சுய அரசாட்சியை உள்ளூர விரும்ப மாட்டார்கள் என்றும், அவர்கள் சுய அரசாட்சிக்குப் பாடுபடுவதுபோல் நடிப்பதெல்லாம் தம் உறவினருக்கும் ஜாதியாருக்கும் இராஜாங்க உத்தியோகங்கள் வாங்கிக்கொடுக்கும் பொருட்டே என்றும் பிராமணரல்லாதார் சொல்வது உண்மைதானோ என்றும் யானும் இப்பொழுது ஐயம் உறுகின்றேன்.

இராஜாங்க உத்தியோகங்களும், ஸ்தலஸ்தாபன உத்தியோகங் களும், பொதுஸ்தாபன உத்தியோகங்களும், நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் அந்தந்த ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டாலன்றி, நம் தேசத்தாருள் ஒற்றுமை உண்டாகப் போவதேயில்லையென்பதும், நமக்குள் ஒற்றுமை உண்டாகாமல் நாம் சுய அரசாட்சி அடையப் போவதே இல்லை யென்பதும் மனித அறிவுடைய எவர்க்கும் தெளிவாக விளங்கத்தக்கவை. இவ்வுண்மையை மாறாக பேசுகின்றவர் யாவராயினும் மனித அறிவில்லாதவர், அல்லது 'பகலை இரவென்று கூறும் பாதகர்' என்று நாம் கொள்ளக் கடவோம். பிராமணர்களும் பிராமணரல்லாதார்களும் ஒத்துழைப்பின் அவ்விரு வகுப்பினருள்ளும் இப்போது நிலவும் பகைமையை விரைவில் ஒழித்து, ஒற்றுமையை எளிதில் ஏற்படுத்திவிடலாம். இவ்வொற்றுமையை உண்டு பண்ணு வதற்காக பிராமணரல்லாதார் களுடன் ஒத்துழைக்கப் பிராமணர்கள் முன் வரவில்லையானால் மேல் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்னும் தலைப்பின் கீழ் யான்கூறியபடி இப்பொழுது பிராமணர்கள் வகித்துக்கொண்டிருக்கிற உத்தியோகங்களில் பிராமண ஜாதியார் களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்களுக்குரிய

உத்தியோகங்களைத் தவிர மற்றைய உத்தியோகங்களையெல்லாம் இராஜாங்கத்தார் காலி செய்வித்து மற்றை ஜாதியார்களுக்கு அவரவர் எண்ணிக்கை விகிதப்படி கொடுக்க வேண்டுமென்று சட்டம் ஒன்று பிராமணரல்லாதார் சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றி அச்சட்டத்தை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரும்படி இராஜாங்கத்தாரை வற்புறுத்த வேண்டும்.'

இராஜாங்க உத்தியோகங்கள் முதலியவற்றில், தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்களின் எண்ணிக்கைவிகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், தாழ்த்துகின்ற ஜாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படிஅவர்கள் அடைய வேண்டிய உதியோகங்களை அவர்களும், இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், முகமதியர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும் அடையும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு இந்த நான்கு வகுப்புத் தலைவர்களும் ஒன்றுகூடி உத்தியோகங்களின் எண்ணிக்கை யையும் அவற்றில் ஒவ்வொன்றன் சம்பளத் தொகையையும் கணக்குப்பார்த்தும், அவ்வுத்தியோகங்களின் அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றைக் கவனித்தும், ஒவ்வொரு ஜாதியாருக்கும் இன்னின்ன உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டு மென்று ஒருபட்டி தயார் செய்யவேண்டும். உத்தியோகங்களின் எண்ணிக்கை குறைந்தும், ஜாதிகளின் எண்ணிக்கை கூடியும் இருக்குமாயின், சற்றேறக்குறைய ஒரு தன்மையான பழக்க வழக்கங்களையும், ஒழுக்கங்களையும் உடைய இரண்டு மூன்று ஜாதிகளை ஒன்றுசேர்த்து ஒரு ஜாதியாகக் கணக்கிட்டுக்கொள்ளலாம். ஒவ்வொரு ஜாதியார்களிலும் இன்னின்னார்க்கு இன்னின்ன உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற விஷயத்தைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஜாதியாரிலும் நடுவு நிலைமையுள்ள சிலரைத் தேர்ந்தெடுத்துப் பஞ்சாயத்துச்சபையாக கட்டுப்படாத உத்தியோக வேட்டைக்காரர் களை அந்தந்த ஜாதியிலிருந்து விலக்குதல் முதலிய காரியங்கள் செய்து பஞ்சாயத்தார் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்யலாம். இவ்வாறு சம்பள உத்தியோகங்களையும், கௌரவ உத்தியோகங்களையும் அந்தந்த ஜாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படி பகுந்து கொடுத்துவிட்டால், இப்பொழுதுள்ள ஜாதிச்சண்டை களில் பெரும்பகுதி நீங்கிவிடும்.

பின்னர், ஒவ்வொரு ஜாதியாரும் மற்றை ஜாதியார்களிடமிருந்து அடைய விரும்பும் உரிமைகள் என்னென்னவென்பதற்கு அந்தந்த ஜாதிப்பஞ்சாயத்தார் மூலமாக ஒருபட்டி தயார் செய்ய வேண்டும். பிற்பாடு, அவ்வுரிமைகளின் சம்மந்தமுள்ள பல ஜாதிப் பஞ்சாயத்தார்

களும் ஒன்றுகூடிப்பேசி இன்னின்ன உரிமைகள் இன்னின்ன ஜாதியார்களுக்கு யாதொரு நிபந்தனையும்இல்லாமல், அல்லது இன்னின்ன நிபந்தனைகளின் பேரில், கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்து முடிவு செய்து விளம்பரப்படுத்தி ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஏற்பட்டுள்ள உரிமைகளை அவரவர் அடைந்து அநுபவிக்கும்படி பலஜாதிப் பஞ்சாயத்தார்களுக்கும் பார்த்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறாக, பிராமணரல்லாதார்களில் அடங்கியுள்ள நான்கு வகுப்பினர்களும் தங்கள் தங்கள் ஜாதி உரிமைகளை வரையறுத்துப்பிரித்து அடைந்து அனுபவித்து ஒற்றுமையான பின்னர்ப் பிராமணர்களிடமிருந்து பிராமணரல்லாதார் களுக்கு வரவேண்டிய உரிமைகளை அடைவதற்கு வேண்டுவன செய்யலாம். நமக்குள் ஏற்பட்டுள்ள ஜாதிச் சண்டைகளும், மதச்சண்டைகளும் நீங்கி நமக்குள் ஒற்றுமை ஏற்படும் வரையில் நாம் சுய அரசாட்சி அடைய வேண்டுமென்று பேசுதலும், முயற்சித்தலும், ஆகாயக் கோட்டை கட்டவேண்டுமென்று பேசுதலும், முயற்சித்தலும் போலாம். இராஜாங்கத்துக்கு வரிகொடாமை முதலிய கீழ்ப் படியாமை *(Civil disobedience)*யைப் பற்றிச் சிலர் பேசுகின்றனர். ஒவ்வொரு ஜாதியாருக்கும் உரிய சிறு சிறு உத்தியோகங்களையும் உரிமைகளையும் கொடுப்பதற்குச் சம்மதியாமல் சண்டையிடுவோர், தேசத்தார் முழுவதும் ஒன்றுபட்டுச்செய்யவேண்டிய வரிகொடாமை முதலியவற்றைப் பற்றிப்பேசுதலைப் பார்த்து நம்மை ஆள்வோரும், அவர்கள் இனத்தாரும், ஏனையோர்களும் நகைக்கின்றனர்.

இது வெறும் பேச்சு என்பதை அவர்களெல்லாம் அறியார்களென்று கருதுதல் எவ்வளவு பெரிய அறியாமை! இந்தியர்களெல்லாம், அல்லது இந்தியத்தலைவர்களெல்லாம், ஒன்றுபடும் வரையில் நாம் சுய அரசாட்சி அடையவேண்டுமென்று பேசுதலும், நாம் அடைய விரும்பும் சுயஅரசாட்சி இத்தன்மைத்தா யிருக்க வேண்டுமென்று பேசுதலும், அந்த சுய அரசாட்சி அடைவதற்கு உரிய வழிகளைப் பற்றிப் பேசுதலும் வெறும் பயனற்ற பேச்சுக்கள். அவற்றைப் பற்றிப் பேசவேண்டும் என்று விரும்பினால் நம் தேசத்துப் பல மதத்தினர்களும், ஜாதியார்களும் அவரவர்கள் உரிமைகளை அடையும்படி செய்து நம் தேசத்தாருள் ஒற்றுமையை உண்டுபண்ணும் வேலை ஒன்றிலேயே உண்மைத் தேசாபிமானிகளெல்லாம்தங்கள் முழுக்கவனத்தையும் பலத்தையும் செலுத்த வேண்டுமென்ற யான் பன்முறை நமஸ்கரித்துக் கேட்டுக் கொள்கிறேன். எனது தேசத்தினர்களாகிய உங்கள்பால் தெரியப்படுத்த வேண்டியவற்றை ஒருவாறு தெரியப்படுத்தி விட்டேன். இனி, நமது தேசத்தை ஆள்வோராகிய இராஜாங்கத்தார் *(Government)*க்குத் தெரியப்படுத்த வேண்டியவற்றைச் சுருக்கமாகச் சொல்லி என் பேச்சை முடித்துவிடுகிறேன்.

## இராஜாங்கத்தார்க்குச் சில சொற்கள்

'அறிகொன் றறியான் எனினும், உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்'

இந்தியர் தமது தேசத்துக்குச் சுயஅரசாட்சி வேண்டுமென்று விரும்பியதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று தேசத்தார்களிற் பெரும்பாலார் வறுமையால் வாடுதல். மற்றொன்று தேச நீதிபதிகளிற் சிலர் செய்யும் கொடுஞ்செயல்கள், இவ்விரு காரணங்களும் பரிகரிக்கப்பட்டுவிட்டால்,தேசத்திற்குச் சுய அரசாட்சி வேண்டும் என்பவரின் எண்ணிக்கை, 'பஞ்சபாண்டவர்களை யான் அறியேனோ? கட்டில்கால் போல மூன்று பேர்' என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டிப்பூமியில் ஒன்று எழுதி அதனை அழித்து விட்டனன்' என்ற கதைபோல் ஆய்விடும்.

## ஜனங்களின் வறுமை

தேசத்திலுள்ள சுமார் முப்பத்திரண்டுகோடி ஜனங்களில் பசியால் உழன்று சாகின்றவர்கள் சுமார் ஒருகோடியென்றும், அரைவயிறுக் கஞ்சியுடன் வருந்துகின்றவர்கள் சுமார் இரண்டு கோடியென்றும், தொழில் கிடையாமல் திண்டாடுகின்றவர்கள் பலகோடியென்றும் தேசாபிமானிகள் கணக்கிட்டுக் கூறுகின்றார்கள். அவர்களது அந்நிலைமைக்குக் காரணம் இராஜாங்கப் பரிபாலனக் குறைவு என்றுதானே யாரும்சொல்வர்?

அவர்கள் வறுமைத் துன்பத்தைப்போக்குவதற்கு இராஜாங்கத்தார் செய்யத்தக்கவை இரண்டு. ஒன்று இந்தியாவில் விவசாயத்துக்கு இதுவரையில் கொண்டுவரப்படாத மலைப்பக்க நிலங்களையும், ஏனைய தரிசு நிலங்களையும் விரைவில்விவசாயத்துக்குக்கொண்டு வருவதற்காக ஆங்காங்கு இராஜாங்க விவசாயப்பண்ணைகள் ஏற்படுத்தி வேலை கிடையாது திண்டாடும் ஜனங்களைக் கொண்டு விவசாயம் செய்வித்து அவர்களுக்குக் கூலிகொடுத்தல். தேசத்தில் எந்தெந்த இடத்தில் எந்தெந்த தொழில்செய்வதற்கு சௌகரியங்கள் அமைந்திருக்கின்றன வோ, அந்தந்த இடத்தில் அந்தந்த தொழிலைச் செய்வதற்கு இராஜாங்கத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி வேலை கிடையாது திண்டாடும் ஜனங்களைக் கொண்டு அத்தொழிற்சாலை களில் தொழில் செய்வித்து அவர்களுக்குக்கூலி கொடுத்தல் மற்றொன்று.

இராஜாங்கத்தார் மேற்கண்டபடி விவசாயப்பண்ணைகளையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி வேலைகிடையாது திண்டாடும் இந்தியர்களுக்கெல்லாம் வேலை கொடுத்து அவர்கள் வறுமையை நீக்கினும், அவர்கள் மதுபானம் செய்ய வழியில்லாமற் செய்தாலன்றி

அவர்களது வறுமை நீங்கப்போவதில்லை: அவர்கள் வறுமை நீங்காதவரையில் இராஜாங்கத்தாரையே குறை கூறுவர். அன்றியும், மதுபானத்தால் இராஜாங்கத்தார் வரும்படி அடைந்துவருகிறதைப் பற்றி இராஜாங்கத்தாரை அறிவுடையோர்களெல்லாம் மிக மிக இழிவாகப்பேசி பழிக்கின்றனர். அவ்விழிவையும், பழிப்பையும் நீக்குவதற்காகவும் இராஜாங்கத்தார் மதுபானத்தைத் தேசத்தை விட்டு அடியோட ஒழிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

## சில நீதிபதிகளின் கொடுஞ்செயல்கள்

1. இப்பொழுதுள்ள சப்மேஜிஸ்டிரேட்டுகளிற் பலரும் டிவிஷனல் மேஜிஸ்டிரேட்டுகளிற் சிலரும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அடிமைகளாயிருக்கின்றனர். தமது கோர்ட்டில் சப் இன்ஸ்பெக்டரைக் கண்டால் அஞ்சுகின்றனர். சர்க்கிள் இன்ஸ்பெக்டரைக் கண்டால் நடுங்குகின்றனர். அவ்வச்ச நடுக்கங்களின் பயன்போலீஸ் உத்தியோகஸ்தரால் சார்ஜ் செய்யப்படும் கேஸ்களில் பெரும்பாலனவற்றில் எதிரிகள் தண்டனையடைதலும், தண்டனை உறுதி செய்யப்படுதலும், செஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட் (Commit) செய்யப்படுதலுமே.

2. போலீஸ் உத்தியோகஸ்தரால் சார்ஜ் செய்யப்படாத கேசுகளிற் பெரும்பாலன - அவை எத்தன்மையயனவாயிரந்தாலும் சரி - கிரிமினல் புரோசீஜர் கோடு 203வது பிரிவுப்படியும் 253, 209 வது பிரிவுகளின்படியும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

3. போலீஸ் உத்தியோகஸ்தரால் சார்ஜ் செய்யப்பட்ட கேசுகளில் அப்போலீசு உத்தியோகஸ்தர்கள் அனுமதி தந்தாலன்றி வக்கீல்கள் பிராஸிக்கூஷன் (வாதி) பக்கத்தில் ஆஜராகக்கூடாதென்று அப்போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வற்புறுத்துகின்றனர். அவ்வற்புறுத் தலை மேஜிஸ்டிரேட்டுகள் அங்கீகரிக்கின்றனர். அதனால் நேரிடும் அநீதிக்கு அளவேயில்லை. உதாரணமாக வாதியால் குற்றம் சாட்டப்பட்டவர்களில் கொடுமை அதிகம் புரிந்தசிலரை விட்டு விட்டுக் கொடுமை புரிந்த சிலரை மாத்திரம் சார்ஜ் செய்கின்றனர்; வாதியார் கோரப்பட்ட முக்கியமான சாட்சிகளை கோருகின்றனர். போலீஸ் உத்தியோகஸ்தர். இந்த நிலைமையில் வாதி என்ன செய்வது? வாதி பக்கத்துக்கோ போலீஸ் உத்தியோகஸ்தர் அனுமதியின்றி வக்கீல்கள் ஆஜராகக் கூடாது. தாம் விட்டுவிட்ட எதிரிகளையும் சாட்சிகளையும் சேர்ப்பதற்குப்போலீஸ் உத்தியோகஸ்தர் சம்மதிக்க மாட்டார். வாதி தன் கேசை இழக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. கிரிமினல் புரோசீர்கோடு 495 (1)பிரிவில் 'ஒரு கேசை விசாரணை செய்யும் மேஜிஸ்திரேட்டு எந்தமனிதனுக்கும் (வக்கீல் அல்லாதவனுக்குக் கூட அந்தக் கேசின் பிராஸிக்கூஷன் பக்கத்தை

நடத்தும்படி) அனுமதி கொடுக்கவாம்' என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அவ்வதிகாரம் போலீஸ் உத்தியோகஸ்தரின் அனுமதியின்றி மேஜிஸ்டிரேட்டுகளால் செலுத்தப்படுவதில்லை.

4. எதிரியை ஜாமீன்பேரில் விடலாகாதென்று குறிக்கப்பட்டுள்ள குற்றங்களுக்காகப் போலீஸ் உத்தியோகஸ்தரால் சார்ஜ் செய்யப்பட்ட கேஸ்களில் எதிரியை ஜாமீன் பேரில் விட வேண்டுமென்று கிரிமினல் புரோசிஜர் கோடு 497வது பிரிவுப்படி மனுச்செய்யப்படுமானால், எதிரியை ஜாமீன் பேரில் விடலாமாவென்று போலீஸ் உத்தியோகஸ்தரிடம் மேஜிஸ்டிரேட்டுகள் கேட்கின்றனர். அவர் 'விடலாம்' என்றால், எதிரி ஜாமீன்பேரில் விடப்படுகிறான். 'விடக்கூடாது'என்றால், எதிரி ஜாமீன் பேரில் விடப்படுவதில்லை. போலீஸ் உத்தியோகஸ்தரைக் கேட்டுத்தான் எதிரியை ஜாமீன் பேரில் விடவேண்டுமென்று சில டிஸ்டிரிக்ட் மேஜிஸ்டிரேட்டுகள் சப் மேஜிஸ்டிரேட்டுகளுக்கு சுற்றுத்தரவு (Circular) பிறப்பித்திருக் கிறதாகத் தெரிகிறது. கிரிமினல் புரோசிஜர் கோடு 497வது பிரிவுப்படி மேஜிஸ்டிரேட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட யுக்தம் (Discretion) போலீஸ் கேஸ்களில் பெரும்பாலும் உபயோகிக்கப்படுவதில்லை.

5. போலீஸ் உத்தியோகஸ்தரால் சார்ஜ் செய்யப்பட்ட செஷன் கோர்ட்டு பரிசீலனைக் கேஸ்களில் சப்மேஜிஸ்டிரேட்டுகள் எதிரியை விடுதலை (Discharge) செய்வது அருமையினும் அருமை, கேஸின் சாட்சியம் எவ்வளவு அற்பமாயிருந்தாலும் சரி, நம்பக்கூடாததாயிருந்தாலும் சரி, எதிரி செஷன்ஸ் கோர்ட்டுக்குக் கமிட்டி செய்யப்படுகிறான். அதனால் அவன்அநியாயமாக ஒன்றிரண்டு மாதம் சிறையில் இருப்பதுடன் செஷன்ஸ் கோர்ட்டில் தன் கட்சியை நடத்துவதற்காகப் பெருந்தொகை செலவு செய்யும்படியாகவும் ஏற்படுகிறது. கிரிமினல் புரோசிஜர் கோடு 209வது பிரிவு அநேகமாக அடிக்கப்பட்ட எழுத்து (Dead letter) ஆகவேயிருக்கிறது.

6. மேஜிஸ்டிரேட்டுகள்செஷன்ஸ் கோர்ட்டுக்குக் கமிட்டி செய்யும் கேஸ்களில் எதிரியை ஜாமீன் பேரில் விடக்கூடாதென்று சில டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்டிரேட்டுகள் சுற்றுத்தரவு விடுத்திருக் கிறதாகத் தெரிகிறது. இச்சுற்றுத்தரவால் கிரிமினல் புரோசிஜர் கோடு 496, 497, 220 பிரிவுகள் அடிக்கப்பட்ட எழுத்து (Dead letter) ஆகிவிட்டன.

7. சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் சிலர் வஞ்சம் (illegal gratification) வாங்குகிறார்கள் என்பது பலரும் அறிந்த ஒர அந்தரங்க விஷயம் (Open Secret). இப்பொழுதுள்ள சட்டப்படி அவ்வுத்தியோகஸ்தர் களைத் தண்டனைக்குக்கொண்டுவருவது மிகக்கஷ்டமான காரியம். ஏனெனில், வஞ்சம் கொடுத்தவன் வஞ்சம் வாங்குதலாகிய குற்றத்திற்கு உடந்தைக்குற்றம் (Abetment) செய்தவனாவான் என்று

இந்தியன் பீனல்கோடு கூறுகின்றது. பெரும்பாலும் எதிரிதான் லஞ்சம் கொடுப்பவன். அவன்பேரில் ஏற்பட்ட ஒரு கேசிலிருந்து தப்புவதற்காக அவன் லஞ்சம் கொடுக்கிறான். அவ்வாறு லஞ்சம் கொடுத்தவன் 'உடைந்தைக் குற்றவாளி' என்று சட்டம்சொல்லும் போது அவன் லஞ்சம் கொடுத்த விஷயத்தை வெளியில்சொல்வானா? சர்க்கார் அதிகாரிகளிடம்பிரியாது கொடுப்பானா? பொய்ப்பிரியாது செய்தவனைத் தண்டிப்பதற்கு இந்தியன் பீனல்கோடு 211 முதலிய பல பிரிவுகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் லஞ்சம் கொடுத்தவன் உடைந்தைக் குற்றவாளி என்று விதிக்கும் சட்டம் இருப்பானேன்? அப்படியிருப்பது 'நீங்கள் வஞ்சம் கொடுங்கள், ஆனால் அதனை வெளியில் சொல்லதேயுங்கள்' என்று கட்டளையிட்டதுபோலாகிறது.

8. 1979ம் வருஷத்து வக்கீல்களின் சட்டம் (*Legal Practitioner's Act*) 3-வது பிரிவு ஒரு வக்கீலிடமிருந்து கிடைக்கும் பொருளுக்காக ஒரு வக்கீலுக்கு ஒரு கக்ஷிக்காரனைக் கொண்டுபோய்விடுகிறவனும், அல்லது ஒரு வக்கீலிடமிருந்தாவது ஒரு கக்ஷிக்காரனிடமிருந் தாவது தனக்குக் கிடைக்கும் பணத்திற்காக ஒரு வக்கீலுக்கு ஒரு கக்ஷிக்காரனை கொண்டுபோய்விடுவதாக அல்லது ஒரு கக்ஷிக்காரனுக்கு ஒரு வக்கீலைத் திட்டம் செய்து கொடுப்பதாகச் சொல்லுகின்றவனும், மேற்கண்ட வக்கீலுகளுக்கும் கக்ஷிக்காரனை கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக அல்லது கக்ஷிக்காரர்களுக்கு வக்கீலைத் திட்டம் பண்ணிக் கொடுப்பதற் காகச் சிவில் அல்லது கிரிமினல் அல்லது ரெவினியூ கோர்ட்டு எல்லைகளிலாவது ரயில்வே ஸ்டேஷன்கள், கக்ஷிக்காரர்கள் இறங்கும் அல்லது தங்கும் இடங்கள், அல்லது பொதுஜனங்கள் தங்கும் சத்திரம் முதலியவற்றிற்காவது அடிக்கடி போகிறவனும் 'டௌட்' ஆவான் என்று கூறுகின்றது.

ஆக்ட்டு 13-வது பிரிவு 'தனக்குக் கிடைத்த, அல்லது கிடைக்கும் பீஸிலிருந்து கேசை தனக்குக் கொடுத்ததற்காக அல்லது கொடுப்பதற்காக ஏதேனும், பணம் கொடுக்கும் அல்லது கொடுப்பதற்கு சம்மதிக்கும்ஒரு வக்கீலை வேலையிலிருந்து நீக்கிவிடலாம் (*Dismiss*) செய்யலாம். ஒரு குறித்த காலத்திற்கு நீக்கிவைக்கலாம் (*Suspend*) செய்யலாம்' என்று கூறுகிறது.

சூ ஆக்டு 36-வது பிரிவு 'ஹைக்கோர்ட்டும், டிஸ்டிரிக்டு ஜட்ஜும், செஷன்ஸ் டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டும், டிஸ்டிரிக்டு கலெக்டரும் தாம் நேரிலாவது, தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர் மூலமாகவாவது, விசாரணை செய்து சாக்ஷியத்தால் அல்லது பொதுப் பிரஸ்தாபத்தால் 'டௌட்டு'களின் தொழிலை வழக்கமாகச் செய்யும் மனிதர்களைத் தெரிந்து ஒரு ஜாப்தா தயார் செய்வித்துத் தம் கோர்ட்டிலும் தமக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டுகளிலும் பிரசுரம் செய்யலாம்' என்றும், 'அந்த

ஜாப்தாவில் கண்ட நபர்களை அந்தந்தக் கோர்ட்டார் தமது கோர்ட்டு எல்லைக்குள் வரக்கூடாதென்று உத்தரவு செய்யலாம்' என்றும் கூறுகின்றது.

கூடி சட்டம் மேற்கண்டவாறு சொல்லியிருந்தும், வக்கீல்களிற் பலர் 'டௌட்'களுக்குத் தாம் வாங்கும் பீஸிலிருந்து இரண்டிலொரு பங்கு மூன்றிலொரு பங்கு, நான்கிலொரு பங்கு வீதம் கமிஷன் கொடுத்து அந்த டௌட்டுகள் மூலமாக கக்ஷிக்காரர்களைப் பிடித்துக் கொண்டிருக் கிறார்கள். ஓர் ஊரில் சர்ட்டிபிக்கேட்டுப்பெற்ற வக்கீல்கள் 10 பேர் இருந்தால் 'டௌட்டுகள்' 20 பேருக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அந்த 'டௌட்டு'கள் மேற்கண்ட கோர்ட்டு முதலிய இடங்களில் மாத்திரமல்லாமல், டௌட்டுகளுக்குக் கமிஷன் கொடாத வக்கீல்களின் ஆபீஸ்களின் முன்னும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

மேற்கண்ட வக்கீல்களின் சட்டம் 36-வது பிரிவானது ஜாப்தா தயார் செய்வித்துப் பிரகரிக்கலாம் *(May prepare and publish)* என்று சொல்லுகிற காரணத்தாலோ, அல்லது உதாசீனத்தாலோ, மேற்கண்ட அதிகாரிகள் 'டௌட்கள்' சம்மந்தமாக ஒன்றும் செய்வதில்லை. 'டௌட்டு'களால் அநேக கக்ஷிக்காரர்களின் பொருள்கள் அநியாயமாகக் கவரப்படுகின்றது. அநேக வக்கீல்கள் மிக இழிவாகக் கருதப்படு கின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் நீதி தவறுவதற்கும் இடம் ஏற்படுகிறது. கூடி 36வது பிரிவிலுள்ள 'May' என்பதற்குப் பதிலாக 'Shall' என்று போட்டு கூடி சட்டத்தைத்திருத்தினாலன்றி, கூடி மூன்று பிரிவுகளும் கூடி சட்டத்தில் இருப்பதால் யாதொரு பயனும் இல்லை.

## தமிழர்களுக்கு விரைவில் வேண்டியவை

நம்தமிழ்நாடு மிகப்பரந்த நாடு. சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூன்று பேரரசர்களும் பல சிற்றரசர்களும் கூடி ஆண்டு வந்த பெரிய நாடு. தமிழ்நாட்டில் ஏறக்குறைய நான்குகோடி ஜனங்கள் இருக்கிறார்கள். தமிழ்மொழி(பாஷை) மிகத்தொன்மையானது. அது மலையாளம், கன்னடம், துளுவம், தெலுங்கு முதலிய பல பாஷைகளுக்குத் தாய்ப் பாஷையாய் விளங்குவது. ஒப்புயர்வற்ற தொன்னூல் எண்ணிறந்தவற்றை உடையது. பேசுவதற்கும், எழுதுவற்கும், பாடுவதற்கும் மிகப் பொருத்தானது. இந்நாட்டில் பாஷையும் தொழிலும் கற்கத்தக்க ஆண்மக்கள் பெண்மக்கள் சுமார் ஒருகோடி (நூறு லெக்ஷம்) பேர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறிருந்தும், இந்நாட்டில் இதுவரையில் தமிழ்சர்வகலா சாலை ஒன்றும் ஏற்படுத்தவில்லை. தமிழ்நாட்டினும் மிக மிகச்சிறியதாகிய ஆந்திரநாட்டிற்கு ஆந்திர சர்வகலாசாலை ஏற்பட்டு விட்டது. இது

வரையில் தமிழ் சர்வகலாசாலை ஏற்படாததற்குக் காரணம் சட்டசபையிலுள்ள தமிழ் அங்கத்தினர்களின் ஊக்கக் குறைவும் இராஜாங்கத்தாரின் கவனக்குறைவுமே என்று யான் கருதுகின்றேன். அவ்விரு திறத்தாரையும் என் போன்றோர் இனி மேலும் குறைகூறாத வண்ணம் அவர்கள் 'தமிழ்சர்வகலாசாலை'யை வெகுவிரைவில் ஸ்தாபிப்பார்களாக.

தமிழ்நாட்டிலுள்ள சிலநகரங்களிலும் பல கிராமங்களிலும் வேண்டிய அளவு வைத்திய உதவிகள் கிடையாமல் ஜனங்கள் படும்பாடு பெரும் பாடாயிருக்கிறது. எனது நீண்ட கால அனுபவத்தில் தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும்,தமிழ் நாட்டினரின் சரீர இயற்கைக்கும் பொருத்தமான வைத்தியம் தமிழ்ச்சித்த வைத்தியமே என்று யான் கண்டுள்ளேன். தமிழ்ச்சித்தர்கள் தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்து வசித்துத் தமிழ்நாட்டினுடைய நிலைமைகளையும் தமிழ் மக்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங்களையும் நேரில் அறிந்து வைத்தியம் செய்து வைத்திய நூல்கள்எழுதி வைத்தவர்களான படியால், அவர்கள் வைத்தியம் தமிழ்நாட்டிற்கு மிகப்பொருத்தமா யிருக்கிறது. இவ்வுண்மையினைக் கண்டு இராஜாங்கத்தாரும் தமது சென்னை நகர வைத்தியக் கல்லூரியில் தமிழ் சித்த வைத்தியத்தைக் கற்றுக்கொடுக்கும்படியான ஏற்பாடு செய்திருக்கின்றனர். சில நகர பரிபாலன சங்கத்தினரும், ஜில்லா நிர்வாக சபையினரும், சில தாலுகா நிர்வாக சபையினரும் சிற்சிலஇடங்களில் தமது செலவில், அல்லது தமது பொருளுதவியில், தமிழ்ச்சித்த வைத்திய சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் இன்னமும் தமிழ் நூல்களெல்லாம் பாக்களாகவே இருக்கின்றன. அவற்றை வசன நடையில் எழுதி வெளிப்படுத்துவதற்கும், தமிழ்ச்சித்த வைத்திய மாணவர்களுக்கு ரண வைத்தியம் (*Surgery*) தற்கால மேனாட்டு முறையில் இன்னம் அதிகமாகக் கற்பிக்கும்படிக்கும் இராஜாங்கத்தார் ஏற்பாடு செய்தல் வேண்டும். இராஜாங்கத்தாரும் ஸ்தலஸ்தாபன சபையார்களும் சேர்ந்து தமிழ்நாட்டிலுள்ள பெரிய கிராமம் ஒவ்வொன்றிலும், சிறு கிராமங்கள் சில சிலவாகச்சேர்த்து அவற்றின் மத்தியிலுள்ள கிராமத்திலும் தமிழ்ச் சித்த வைத்தியசாலைகளை அமைத்து ஜனங்களுக்கு வேண்டும் சமயத்திலும் எளிதாகவும் வைத்திய உதவி கிடைக்கும்படி செய்வார்களாக.

## சேலம் ஜில்லா விஷயங்கள்

நமது தேசம் சுயஅரசாட்சிபெறுவதற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்றும், நமது இராஜாங்கத்தார் என்னென்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்றும், நமது தமிழ்நாட்டிற்கு விரைவில் வேண்டியவற்றையும் இங்குச்சொன்னேன். இந்த சேலம் ஜில்லா மாநாட்டில் இந்த ஜில்லாவின் நன்மைக்காகச் செய்யப்பட

வேண்டியவற்றைப் பற்றி ஒன்றும் யான்சொல்லவில்லையே என்று சிலர் நினைக்கலாம். அந்தஜில்லா விஷயம் ஒன்றும் எனக்குத் தெரியாது. அவ்விஷயங்களைத் தெரிந்தவர்கள் விஷயாலோசனைச் சபைக் கூட்டத்திலும் இம்மகாநாட்டிலும்பேசி வேண்டுவன செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முடிவுரை

எனது பேச்சு மிக வளர்ந்துவிட்டபடியாலும், நாம் இம்மகாநாட்டில் செய்யவேண்டிய முக்கியவேலைகள் பல இருப்பதாலும், என் பேச்சை இம்மட்டில் நிறுத்திவிடுகின்றேன். இம்மகாநாட்டின் தலைமையான யான் வகிக்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படிச் செய்ததற்காகச் சேலம் ஜில்லாவாசிகளாகிய உங்கள் எல்லோருக்கும் என் நன்றியறிதலைத் தெரியப்படுத்தி என் நமஸ்காரத்தை அளிக்கின்றேன். இந்த மகாநாடு இனிது நடைபெற்று முடிவதற்கும், இந்த மகாநாட்டில் நமது தேசம் விரைவில் சுய அரசாட்சி பெறுவதற்குரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கும், நீங்கள் எல்லோரும் எனக்கு உதவி புரிவதுடன் எல்லாம் வல்ல இறைவனும் எனக்குத் துணை புரியும்படியாக யான் வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை

சேலம் — *தலைவன்*

*5.11.27*

# வ. உ. சி. கண்ட பாரதி

## பாரதிக்கும் எனக்கும் பழக்கம்

பாரதியாரின் தந்தை ஸ்ரீ சின்னச்சாமி ஐயர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகம் வகித்து வந்தார். அதே காலத்தில் எனது தந்தையார் ஸ்ரீ.வ.உலகநாத பிள்ளை அதே சமஸ்தானத்தில் வக்கீலாக சேவை செய்துகொண்டிருந்தார். என் தகப்பனாருடன் பாரதியாரின் தந்தையார் எங்கள் சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரத்திற்கு அடிக்கடி வருவதுண்டு.

எங்கள் ஊர் சரித்திரப் பிரசித்தமானது. 'மானம் பொழியுது, பூமி விளையுது; மன்னவன் காணிக்குக் கிஸ்தி எது?' என்று முழங்கி ஆங்கிலக் கும்பினியாரோடு அருஞ்சமர் புரிந்து பெரும்புகழ் எய்திய பாஞ்சாலங்குறிச்சிப் பாளைய மன்னன் - வீரன் கட்டபொம்மன் காலத்தில் ஒட்டப்பிடாரம் சீரும் சிறப்பும் பொருந்திய சிற்றூராகத் திகழ்ந்தது. பின்னர் சமீப காலம்வரை ஒட்டப்பிடாரத்தில் தாலூகாக் கச்சேரியும், தாலுகா மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் இருந்து வந்தன.

இவ்விரண்டு கச்சேரிகளில் ஏதாவது ஒன்றில் 'ஜோலி'யாகவே எங்களூருக்கு ஸ்ரீமான் ஐயர் என் தந்தையாருடன் வருவார்.

அங்கு வந்த காலத்தில் என் வீட்டிலாவது, என் வீட்டிற்கு மேற்கேயுள்ள பழைய பாஞ்சாலங்குறிச்சித் தானாதிபதிப்பிள்ளை வீட்டிலாவது தங்குவார். அப்பொழுது எனக்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதிருக்கும். ஸ்ரீமான் ஐயர் எந்தையாரிடமும், என்னிடமும் மற்றையோரிடமும் பேசிய மாதிரியிலிருந்து அவர் ஒரு பெரிய மேதாவி என நான் நினைத்தேன்.

என் தகப்பனார் என்னிடம் ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மகன் இருப்பதாகவும், அவன் அதிபுத்திசாலியென்றும், சிறு பிள்ளையாயிருக்கும்போதே தமிழில் வெகு அருமையாகச் சுயம் பாடுவான் என்றும் கூறுவதுண்டு. ஐயரது குமாரன் பாடிய கவிகளை என்னிடம் சொல்லிக்காட்டி அவனைப்பற்றி என் தந்தை வெகுவாகப் புகழ்ந்து பேசுவார். சிறு வயதிலேயே கவி பாடிய அச் சிறுபிள்ளைதான் சுப்பிரமணிய பாரதி என்று இன்று உலகமெல்லாம் புகழ்பெற்று விளங்கும் பெரியார்.

## முதல் சந்திப்பு

இப்பெரியாரை நான் முதன்முதலாகப் பார்க்கும் பாக்கியம் பெற்றது அவர் சென்னையில், 'இந்தியா' என்னும் பெயர் பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த காலத்தில்தான். அந்தக் காலத்தில் 'இந்தியா'வுக்குப் பேரும் புகழும் பெருஞ்செல்வாக்கும் இருந்தன. பத்திரிகையின் சிறப்புக்குக் காரணம் ஆசிரியர்தான் என்பது சொல்லாமலே தெரியும்.

அது 1906-ம் வருஷ ஆரம்பமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்போது நான் தூத்துக்குடியிலிருந்து சென்னை சென்றிருந்தேன். (எனது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலிருந்து கச்சேரிகள் எல்லாம் எடுபட்டுவிட்டதனால் அப்பொழுது நான் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்துவந்தேன்.) சென்னையில் திருவல்லிக்கேணியில் 'சுங்குராமசெட்டித் தெரு'வில் என் நண்பன் ஒருவன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து நான் பட்டணம் (town) போகிற வருகிற வழியில் ஒரு பெரிய வீடு இருந்தது. அதுதான் 'இந்தியா' பத்திராதிபர் ஸ்ரீமான் திருமலாசாரியார் வீடு என்று தெரிந்துகொண்டேன்.

ஒருநாள் மாலை நாலு மணி சுமாருக்கு நான் 'இந்தியா' அதிபர் திரு.ஆசாரியாரைப் பார்ப்பதற்காக அப்பெரிய வீட்டிற்குள் புகுந்தேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்ததில், ''அவர் மாடியில் இருக்கிறார்'' என்றனர்.

நான் மாடிக்குச் சென்றேன்; அங்கு ஒரு அய்யங்கார் அமர்ந்திருந்தார். அவர் இளவயதினராகக் காணப்பட்டார். முகத்தில் அறிவுச்சுடர் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்தான் அதிபராக இருக்க வேண்டுமென நினைத்து அவரைக் கேட்டேன்.

''ஆம்'' என்றார் அவர்.

அவரிடம் என் ஊரும், பேரும் சொன்னேன்.

அவர் மாடியின் உள்ளரங்கை நோக்கி, ''பாரதி! உங்கள் ஊரார் ஒருவர் உம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்'' என்று உரக்கக் கூறினார்.

உடனே உள்ளிருந்து இருவர் வந்தனர். முண்டாசுக் கட்டுக்கும் முறுக்கு மீசைக்கும் பெயர் பெற்றது எங்கள் ஜில்லா. எனவே தலைப்பாகைக் கட்டைப் பார்த்ததுமே பாரதியார் என்பதைத் தெரிந்துகொண்டேன். முறைப்படி அதிபர் ஸ்ரீமான் ஆசாரியார், ''இவர்தான் 'இந்தியா' ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி'' எனப் பாரதியாரைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தினார்.

ஆசிரியர் பாரதியார் என் ஊரையும், பெயரையும் பற்றி உசாவினார்.

நான், ''ஒட்டப்பிடாரம் வக்கீல் உலகநாதபிள்ளை மகன், சிதம்பரம் பிள்ளை'' என்றேன்.

''ஓ, அப்படியா! பிள்ளைவாளின் பிள்ளையாண்டானா நீங்கள்! உட்காருங்கள்!'' என்று கூறி அருகிலிருந்த நாற்காலியில் அமரச் செய்தார். அவரும் மற்றவரும் வேறு இரு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர்.

## பாரதியார் ஆரம்பித்தார்

''உங்கள் தகப்பனார் என் தகப்பனாரின் அத்யந்த நண்பர். அவாளை எனக்கு நன்னாத் தெரியும். உங்களைப்பற்றியும் கேள்விப் பட்டிருக்கேன்'' என்றார் பாரதியார்.

ஆமாம்! எங்கள் ஜில்லாவிற்கே உரித்தான அந்தச் சிறந்த தமிழ்ப்பாணியில் அவர் பேசினார். பின்னர் பல்வேறு விஷயங்களைப் பற்றி நால்வரும் - குறிப்பாக நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தோம். தேசகாரியங்கள் பற்றிய பேச்சுக்களே எங்கள் அளவளாவுதலில் தலைமை வகித்தன. இந்த முதல் சந்திப்பும் பேச்சும் என்னைச் சோழனாகவும் அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படி செய்தது. பாரதியார் என்னை கடற்கரைக்கு அழைத்தார். நாங்கள் நால்வரும் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்று வெகுநேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக்கொண்டிருந்தோம். வங்க மாகாணத்தின் சிங்கச் செயல்கள் பற்றியும் விபின் சந்திர பாலரின் தேசபக்தி, பிரசங்கங்கள் முதலியவை பற்றியும் பாரதியார் மிகுந்த ஆவேசத்துடன் பேசினார்.

என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக்கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம் சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் 'பளிச்'சென ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன.

பாரதி, ''பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின் ஒளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை

பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இதுதான். வாழி அன்னை! வாழ் அம்மை! சக்தி வாழி!'' என ஆவேசம் வந்தவர் போலப் பேசினார். அவ முண்டாசுக் கட்டின் முன்தானைத் துணி காற்றில் வெற்றிக்கொடி போலப் படபடவென்ற சப்தத்துடன் பறந்துகொண்டிருந்தது. கடல் அலை பேரிரைச்சலிட்டது. உள்ளம் நிரம்பிய மகிழ்வோடு நாங்கள் நால்வரு திரும்பினோம்.

பின்னர் நாள்தோறும் நான் 'இந்தியா' ஆபீசுக்கும், அதிபர் வீட்டிற்கும் கடற்கரைக்கும் செல்லவானேன்; அதிபரும், ஆசிரியரும் நானும் அவ்வப்போது அளவளாவுவது வழக்கமாகிவிட்டது. சுப்பிரமணிய பாரதியும் நானும் சோழனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருமகனும் ஆயினோம்.

## அன்னைக்கா ஆடு பலி?

ஒருநாள் மாலை வழக்கம்போல நாங்கள் மூவரும் (பாரதி, ஆசாரியார், நான்) திருவல்லிக்கேணிக் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ சென்று கொண்டிருந்த எங்கள் பேச்சு வங்க வள நாட்டின்மீது திரும்பியது. அப்போது காளி தேவிக்கு வங்கத்தில் ஆடு பலி கொடுப்பதைக் கண்டித்து விபின் சந்திரர் பேசிய பேச்சிற்கு மாமா உருக்கத்துடனும் ஆவேசத்துடனும் ஒரு வியாக்கியானம் செய்து முடித்தார். (இல்லை, 'பொழிந்து கொட்டினார்' என்று சொல்வதுதான் பொருத்தம்.) இவ்வியாக்கியானத்தைக் கேட்ட நான் கொழுத்த தேசாபிமானியாக மாறிவிட்டேன். (அதாவது இந்தக் காலத்திய தீவிரவாதி) இந்த வியாக்கியானத்தினால் நாங்கள் இருவரும் அதிகமாகப் பிணைக்கப்பட்டோம்; பெருமகிழ்ச்சி கொண்டோம். எங்கள் நட்பைப் பற்றி மாமா சொல்வார், ''மாப்பிள்ளை, நமக்கினி யாரடா ஈடு?'' என்று.

அது முதல் அவர் என் வீட்டிற்கு வருவதும் என்னோடு உண்ணுவதும் உறங்குவதும், நான் அவர் வீட்டிற்குப் போவதும் அவரோடு உண்ணுவதும் உறங்குவதுமாக இருந்தோம். பிரான்ஸ், இத்தாலி இவை போன்ற பிற தேசங்களின் சரிதத்தை மாமா ஆதியோடந்தமாக ஆவேசத்துடன் கூறிமுடிப்பார். நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம். இடையிடையே ஏதாவது சந்தேகம் தோன்றினால் அவரிடம் கேட்பேன். அவர் காரணம் கூறி விளக்குவார்.

## கேட்டவுடனே பாட்டு!

ஒருநாள் இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய யௌவன இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தோர், செய்து வந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கிலப் பாஷையில் மாமா எனக்குப்

படித்துக் காட்டினார். அதனைக் கேட்டதும் நான் சொக்கிப்போனேன்! அச்செய்யுளைத் தமிழ்ப் பாட்டாக மொழி பெயர்த்துத் தர மாமாவை வேண்டினேன். அவர் அன்றே அந்த இடத்திலேயே அதைத் தமிழில் கவிதையாக மொழி பெயர்த்துத் தந்தார். அதுதான் ''பேரருட் கடவுள் திருவடியாணை'' எனத் தொடங்கும் பாட்டு.

பின்னர் நம் தேச ஆட்சியைச் சீக்கிரமே நாம் கைக்கொள்வதற்குச் செய்ய வேண்டியவைகளைப் பற்றிப் பேசுவதே வழக்கமாகிவிட்டது. தினம் ஒரு திட்டமிடுவதும் மறுநாள் மாற்றுவதும், மாற்றம் செய்தும் எங்கள் முயற்சிகளைப் 'பத்தரைமாற்றாக'ப் பக்குவம் செய்வதுமாயிருந்தோம். எங்கள் முயற்சிகளைப் பற்றி எங்கனும் பேசினோம், பிரசங்கம் புரிந்தோம். ஆனாலு் மாமா மட்டும் சொன்மாரி பொழிந்தார்.

தேசாபிமான ஊற்றென விளங்கும் திருவல்லிக்கேணி கோவில் பக்கத்திலுள்ள மண்டையன் கூட்டத்தாராகிய திருமலாசாரியார், ஸ்ரீநிலாஸாசாரியார் முதலியாரோடு அடிக்கடிப் பேசலானோம்; ஆலோசனை அனைத்தும் புரிந்தோம். அவ்வாலோசனையின் பயனாகத் திருவல்லிக்கேணியில் ''சென்னை ஜனசங்கம்'' என்ற தேசாபிமானச் சங்கம் எழுந்தது. பின்னர் நான் எங்கள் யோசனைப்படி தூத்துக்குடி திரும்பினேன்; தேச ஆட்சியின் மீட்சிக்கான வேலைகளில் ஈடுபட்டேன்.

## சூரத் காங்கிரஸில் தமிழர்கள்

1907-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் சூரத்தில் நடப்பதாயிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் தலைமை வகிப்பதற்குக் கல்கத்தாவிலிருந்த பெரிய சீமானும் பெயர் பெற்ற வக்கீலுமான ஸ்ரீ ராஜ்பிகாரி கோஷ் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. அது நம் பாரதியாரின் கண்களிலும் படாமல் போகவில்லை. தேச சேவையே பெரிதென நினைத்துச் சிறந்த தொண்டாற்றியதன் காரணமாகத் தேசம் விட்டுக் கடத்தப்பட்டு அப்பொழுதுதான் விடுதலையடைந்திருந்த லாலா லஜபதிராயை அவ்வருஷத்துக் காங்கிரஸின் தலைவராக்க வேண்டுமென பாரதியார் நினைத்தார்; என்னைச் சென்னைக்குப் புறப்பட்டு வரும்படித் தந்தி கொடுத்தார். நான் சென்னை சென்றேன். மாமா, நான், மற்றும் தேசாபிமானிகள் எல்லோரும் ஒருங்குகூடி ஆலோசித்தோம். லாலா லஜபதிராயையே காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தோம். அதற்கான வேலைகளைச் செய்யும் பொறுப்பு மாமாவுக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. அவ்வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதன் பொருட்டு நான் அரசனாகவும் மாமா மந்திரியாகவும் மாறினோம்.

முதலில் ஸ்ரீமான் பால கங்காதர திலகரையும், பாபு அரவிந்த கோஷையும் எங்கள் கொள்கைக்கு இணங்கும்படிச் செய்ய வேண்டுமென நினைத்தோம். அவ்விரு தேசாபிமானிகளுக்கும் கடிதங்கள் போன்ற நீண்ட தந்திகள் பல அனுப்பினேன். காங்கிரஸ் மகாநாட்டில் லாலா லஜபதிராய்க்குப் பெரும்பான்மையான வாக்குகள் (votes) கிடைக்கச் செய்வதற்காகச் சென்னை மாகாணத்திலிருந்தும் அநேக பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வர முடியுமாவெனக் கேட்டு அவர்கள் பதில் தந்தி அனுப்பினார்கள். அவ்வாறு செய்வதாக எனக்கு வாக்குறுதி பெற்றுக்கொண்டு, ''காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு லாலா லஜபதிராயைத் தலைவராக்க வேண்டுவதைச் செய்கிறோம்'' என்று ஸ்ரீ திலகரும், கோஷும் எனக்கு முடிவான தந்தி அனுப்பினார்கள்.

## தலைவர் மாற்றத்திற்குக் கிளர்ச்சி

அது விஷயமாகத் திலகரது கேசரி பத்திரிகையிலும் பம்பாய் மாகாணத்தின் பிற தேசியப் பத்திரிகைகளிலும், ஸ்ரீ அரவிந்தரின் வந்தே மாதரம் பத்திரிகையிலும், வங்க மாகாணத்தின் இதர தேசியப் பத்திரிகைகளிலும் மற்றைய மாகாணங்களில் உள்ள தேசியப் பத்திரிகைகளிலும் பலமான கிளர்ச்சி செய்யப்பட்டது. சில மிதவாதிகள் தவிர மற்ற மிதவாதிகளும், அமிதவாதிகள் (தீவிரவாதிகள்) ஆகியோரும் தேசாபிமானிகளும் லாலா லஜபதிராயையே காங்கிரஸ் தலைவராக்கவேண்டுமெனப் பத்திரிகைகளில் எழுதித் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள். ஆரம்பத் தேதியும் நெருங்கியது. ''ஏராளமான பிரதிநிதிகளுடன் நான் அத்தேதிக்குச் சில தினங்களுக்கு முன்னரே சூரத் நகரம் வந்துசேர வேண்டும்'' என்று திலகர் பெருமானிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது.

## சூரத்துக்கு ஸ்பெஷல் ரயில்

தூத்துக்குடியினின்று நான் சில நண்பர்களுடன் புறப்பட்டுச் சென்னை போய்ச்சேர்ந்தேன். மண்டையன் கூட்டத்தார் வீட்டில், ''சென்னை ஜனசங்க''த்தின் அங்கத்தினர்களாகிய இளந்தேசாபிமானி களையெல்லாம் ஒரு கூட்டம் கூட்டி ஆலோசனை செய்தோம்.

பாரதி மாமா நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சென்னை யிலிருந்து சூரத்துக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டு மென்று சொன்னார்.

அப்பிரதிநிதிகளில் பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றும், அவர்களைச் சூரத்திற்குக் கூட்டிப்போய் வருவதற்குரிய செலவுத் தொகையில் ஒரு பாதியை மண்டையன் கூட்டத் தலைவர் ஸ்ரீநிவாஸாசாரியும், மற்றொரு பாதியை நானும் கொடுக்க வேண்டுமென்றும் எங்களுக்குள் முடிவு

செய்துகொண்டோம். சுமார் நூறு பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வருவதாகத் திலகருக்குத் தந்தி கொடுத்தோம்.

அப்போது நடைமுறையில் (அமலில்) இருந்த காங்கிரஸ் மஹாசபையின் விதிப்படி சங்கங்களின் மூலமாகத்தான் காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறே பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பும்படியாகத் தமிழ்நாட்டிலுள்ள பல நண்பர்களுக்குத் தகவல் கொடுத்தோம். அவர்களும் அவ்வாறே பல்வேறு ஊர்களிலிருந்து பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பினர். அவர்களில் அநேகர் சாதாரண ரயில் வழியாக சூரத் சென்றனர். எங்கள் சென்னைத் தலைவர் ஸ்ரீ.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னையிலிருந்து சூரத்துக்குச் சென்றார்கள். சென்னை ஜன சங்கத்தின் அங்கத்தினர்களாகிய இளந்தேசாபிமானிகள் எல்லோரும் ஒரு பெரிய ரயில் வண்டியை பிரத்தியேகமாகப் பதிவு செய்து (Special Reserve) சென்னையிலிருந்து சூரத் சென்றோம். எங்களுடன் வந்தவர்களில் சென்னை அட்வகேட் ஸ்ரீமான் எஸ்.துரைசாமி ஐயர், எம்.ஏ.பி.எல்., ஸ்ரீமான் வி.சக்கரை செட்டியார் பி.ஏ.பி.எல்., ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## சூரத் காங்கிரஸ் உடைக்கப்பட்டது

பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சூரத் நகருக்கு வெளியே காங்கிரஸ் கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களில் தங்கியிருந்தோம். நகரின் நடுப்பாகத்திலுள்ள மாளிகை (பங்களாக்) களில் திலகர் முதலிய பம்பாய் பிரதிநிதிகளும், வேறு சில மாளிகைகளில் அரவிந்தர் முதலிய வங்கப் பிரதிநிதிகளும் தங்கியிருந்தார்கள்.

காங்கிரஸ் பிரசிடெண்டாக (தலைவர்)வந்திருந்த ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ் எழுதி அச்சிட்டுக் கொண்டு வந்திருந்த தலைமைப் பிரசங்கத்தில் அப்போது 'அமிதவாதிகள்' என்று அழைக்கப்பட்ட திலகர், அரவிந்தர், பாரதியார் குழாத்தினரைப்பற்றி இழிவாகச் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்ததாக நாங்கள் அறிந்தோம். அவற்றை அப்பிரசுரத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று ஸ்ரீ ராஷ்பிகாரிக்கு திலகரும் அரவிந்தரும் சிலரிடம் சொல்லி அனுப்பினர். நீக்குவதற்கு ஸ்ரீ கோஷ் இணங்கவில்லை. அவ்வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்காவிட்டால், காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ராஷ்பிகாரி தலைமை வகிக்க வேண்டுமென்ற பிரேரேபணையை (Proposal)த் தாம் எதிர்க்கப்போவதாக திலகர் பெருமான் அப்போதைய மிதவாதத் தலைவர்களாகிய ஸர்.பிரோஸிஷா மேத்தா, ஸ்ரீ கோக்கலே, வி.கிருஷ்ணசாமி ஐயர் முதலியவர்களுக்குச் சொல்லி அனுப்பினார்.

மிதவாதத் தலைவர்கள் பலரும் கூடி ஆலோசித்து பிரஸ்தாப வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்க முடியாதெனப் பதில் தெரிவித்து விட்டனர்.

பின்னர் பால கங்காதரர் (திலகர்) காங்கிரஸ் மஹா சபைக்காகப் பல்வேறு மாகாணங்களிலுமிருந்து வந்திருந்த தேசியக் கட்சிப் பிரதிநிதிகளையெல்லாம் சேர்த்து ஒரு கூட்டம் கூட்டினார். நடந்த விஷயங்களை எடுத்துச்சொல்லி ஆலோசனை செய்யக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ ராஷ்பிகாரி அவ்வாக்கியங்களைத் தமது பிரசுரத்தினின்று நீக்காவிட்டால் அவர் (கோஷ்) தலைவராக வேண்டுமென்ற பிரேரேபணையை எதிர்க்கப் போவதாகவும், லாலா லஜபதிராய் தலைவராக வேண்டுமென்ற பிரேரேபணையைச் செய்யப் போவதாகவும் ஸ்ரீ அரவிந்தர், பாரதியார் முதலியோர் கர்ஜித்தனர். கடைசியில் அவ்வாறே செய்வதென்றும் அதைத் திலகர் முன்னின்று நிறைவேற்றி வைக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

## வாழ்க திலகர் பெருமான்!

திலகருக்கும் ஏனைய தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றை இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியம் என நினைக்கிறேன். ('இது இக்காலக் காங்கிரஸ் தலைவர்களது கண்ணிலும் படுவதாக!') அவர் எக்காரியத்தைச் செய்ய விரும்பினாலும், அக்காரியத்தைப்பற்றி முதலில் தம்முடைய சிஷ்யர்களைக் கலந்து ஆலோசனை செய்வார். தமது கருத்தும், அவர்களது அபிப்பிராயமும் மாறுபடுமாயினும் தமது அபிப்பிராயத்திற்கு அனுசரணையான விஷயங்களையெல்லாம் காரண காரியத்தோடு எடுத்துச்சொல்லி விவாதிப்பார். தமது அபிப்பிராயம் அவர்களால் நிராகரிக்கப்படுமாயின், தமது சிஷ்யர்களின் அபிப்பிராயப்படியே முடிவு செய்வித்து அதனையே தாம் முன்னின்று முடிப்பார்.

## உள்ளுக்குள்ளே ஒரு சூழ்ச்சி

மேலே கூறிய காங்கிரஸ் தலைவர் பிரேரேபணையைப் பற்றிய முடிவு மிதவாதத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் கூட்டம் கூடி ஆலோசனை செய்தார்கள். லாலா லஜபதிராய் அவ்வருஷத்துக் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், திலகர் கட்சியினர் காங்கிரஸ் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்கமாட்டார் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதன்படி அவர்கள் லாலா லஜபதிராயை அழைத்து விஷயத்தை அவரிடம் தெரியப்படுத்தினார்கள். தம்மால் காங்கிரஸில் பிளவு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதாக அவர் அவர்களுக்குத் தெரிவித்து விட்டுத் திலகரிடம் வந்தார். நடந்ததைத் தெரியப்படுத்திக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்காமல் விட்டுவிடும்படி கேட்டார்.

தலைவர் - பிரசங்கப் பிரசுரத்தில் தம் கூட்டத்தினரைப்பற்றி கோஷ் எழுதியுள்ள இழிமொழிகளைத் திலகர் ஸ்ரீ லஜபதிக்கு எடுத்துக் காட்டினார். அதனைப் படித்த அப்பெருந்தகைமையாளர் மிக வருந்தினார். தாம் மிதவாதத் தலைவர்களை மீண்டும் கண்டு பேசி அவ்வாக்கியங்களைப் பிரசுரத்தினின்று நீக்கும்படிச் செய்வதாக வாக்குறுதி செய்து போனார். ஆனால், அவருடைய பேச்சா மிதவாதத் தலைவர்களின் செவியில் ஏறப்போகிறது? இல்லை.

லஜபதிராய் திரும்பி வந்து நடந்ததைச் சொல்ல வருந்தித் தம் பெயரைத் தலைமைப் பதவிக்கு பிரேரேபிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.

## காங்கிரஸ் மகாநாட்டில் கலாட்டா!

குறித்த நேரத்தில் குறித்த தேதியில் மஹாசபை கூடிற்று. காங்கிரஸ் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கமுடைய பாரதியார் முதலிய தேசியவாதிகள் காங்கிரஸ் கொட்டகையில் பல பாகங்களிலும் உட்கார்ந்திருந்தோம். பிரமாண்டமான கொட்டகையில் எங்கு நோக்கினும் ஜனத்திரள். மத்தியில் பிரசங்க மேடை. 'எள் போட்டால் எள் விழாது' என்பார்களே, அம்மாதிரியான கூட்டம்.

வரவேற்புத் தலைவர் எழுந்து தமது வரவேற்புப் பிரசங்கப் பிரசுரத்தைப் படித்து முடித்தார். பிரசங்க மேடையிலிருந்தவர்களில் ஒருவர் எழுந்திருந்து ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ் மஹாநாட்டிற்குத் தலைமை வகிக்கவேண்டுமென்று பிரேரேபித்தார். அங்கிருந்த மற்றொரு மிதவாதத் தலைவர் எழுந்திருந்து அதை ஆமோதித்தார்.

ஆமோதித்ததுதான் தாமதம்! திலகர் பிரசங்க மேடை மீது ஒரே தாவாகத் தாவினார். பிரேரேபணையைத் தாம் ஆட்சேபிப்பதாகத் தெரிவித்தார். கூச்சல் கிளம்பிற்று. பலர் பலவாறு திலகரைத் திட்டிக்கொண்டும், "உன் இடத்திற்குப் போ! பேசாதே! (go to your seat, Don't speak) எனப் பேய்க் கூச்சலிட்டுப் பெருங்குழப்பம் செய்தனர்.

தலைவரைப் பற்றிய பிரேரேபணையைத் தாம் எதிர்ப்பதற்குரிய காரணங்களை எடுத்துச் சொல்வதற்காகப் பலமுறை திலகர் எத்தனித்தார்.

மிதவாதிகளின் பெருங்கூச்சலால் திலகர் வார்த்தைகள் காங்கிரஸ் பந்தலில் பிரதிநிதிகள் இருந்த இடங்களுக்குக் கேட்கவில்லை. திலகரோ, தம்மைப் பேசவிட்டாலன்றிப் பிரசங்க மேடையை விட்டுப் போகப்போவதில்லையென்று கூறி, நின்ற இடத்திலேயே அசையாது கையைக் கட்டிக்கொண்டு சிங்கம்போல் நின்றார்.

இச்சமயத்தில் ராஷ்பிகாரி கோஷ் பிரசங்க மேடை மேஜை மீது ஏறி நின்றுகொண்டு தமது தலைமைப் பிரசங்கத்தை 'விருவிரென' வாசிக்கத் தொடங்கினார்.

பந்தலின் பல பாகங்களிலிருந்தும் மீண்டும் கூச்சல் கிளம்பிற்று. ''இன்னும் உம்மைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை! உமது பிரசங்கத்தை வாசிக்கவேண்டாம்!'' என்று பலர் கத்தினார்கள்.

மிதவாதிகள் பிரசங்க மேடைமீது ஏறி வந்து குழுமி நின்றுகொண்டு திலகரை நோக்கி, ''உம் இடத்திற்குப் போம்! உம் வாயைத் திறவாதேயும்!'' (go to your seat! Don't open your mouth.) என்று பெரும் கூச்சலிட்டார்கள்.

அப்போது அவர்கள் முன்பு திலகர் நின்ற நிலை, ஆஹா! இன்றும் அன்றுபோல என் மனக்கண்ணில் தோன்றுகிறது. அன்று அவர் நின்ற நிலையை மதம் பொழிந்து கர்ஜித்துக்கொண்டிருந்த பல நூறு யானைகளின் முன் அமைதியுடன் வேண்டுமென்றே அடங்கி நின்ற சிங்க ராஜாவின் நிலைக்கு ஒப்பிடலாம்.

## காங்கிரஸ் கலைந்தது

அச்சமயத்தில் மேடைமீதிருந்த மிதவாதிகளில் சிலர் தாம் அமர்ந்திருந்த நாற்காலிகளைத் தம் தலைக்குமேலே தூக்கித் திலகர்மேல் எறிய முயற்சித்தனர். காங்கிரஸ் பந்தலின் முன்னணியில் இருந்த ஸ்ரீ கபர்தேயும், பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகளும் ஒரே பாய்ச்சலாய் மேடைமீது பாய்ந்து திலகரைச் சுற்றி வட்டமாக நின்றுகொண்டு அவர்மேல் எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துப் பக்கத்தே தள்ளிக்கொண்டிருந்தனர். வேடிக்கை! அப்போதும் ராஷ்பிகாரி மூச்சுவிடாமல் வாயுவேகத்தில் தமது பிரசங்கக் குறிப்பைப் படித்துக் கொண்டிருந்தார்!

சென்னைப் பிரதிநிதிகள், ''உமது பிரசங்கத்தை வாசிக்க வேண்டாம். போய் உட்காரும்'' என்று கூச்சல் போட்டனர்.

இந்தச் சமயத்தில் காங்கிரஸ் பந்தலின் பல மூலைகளிலும் முன்னரே ஒளித்து வைக்கப்பட்டிருந்த போக்கிரிகள் (goondas) தடிக்கம்புகளுடன் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு மேடைக்குச் சென்றார்கள். பந்தலிலே அலைமோதியது!

மேடை சென்ற போக்கிரிகள் திலகரைச் சுற்றி அரண்போல நின்றுகொண்டு, எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துக் கொண்டிருந்த சென்னைப் பிரதிநிதிகளைத் தடியால் தாக்கிக் கீழே சாய்த்தனர். பார்த்தனர் பிரதிநிதிகள்! ஆர்த்தனர். பந்தலின் நாலா பக்கங்களிலிருந்தும் ஜோடுகளும், செருப்புகளும் குண்டர்களை நோக்கிப் பறந்தன. சில மிதவாதத் தலைவர்களுக்கும் அடி. நிலைமை கட்டுக்கடங்காது போகவே காங்கிரஸைக் கலைக்க வேண்டுமென்று போலீஸாருக்குத் தகவல் பறந்தது. போலீஸார் 'குபுகுபு'வென வந்திறங்கினர். காங்கிரஸ் பந்தல் தமது ஆளுமையிலிருப்பதாகவும், கால்மணி நேரத்திற்குள் எல்லோரும் பந்தலை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும் போலீஸார் அறிவித்தனர்.

உடனே மிதவாதத் தலைவர்கள் குண்டர்களோடும் சில பிரதிநிதிகளோடும் பந்தலைவிட்டு வெளியேறிப் போய்விட்டனர்.

பிறகு, எங்கள் தலைவர்களும், நாங்களும் பந்தலைவிட்டு வெளியேறி அரவிந்தர் தங்கியிருந்த பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

## தேசீயவாதிகள் மகாநாடு

திலகர், கபர்தே முதலிய பம்பாய்த் தலைவர்களும், பிரதிநிதிகளும், அரவிந்தர் முதலிய வங்க தேசத் தலைவர்களும் பிரதிநிதிகளும், பஞ்சாப் தேசத் தலைவர்களும், பிரதிநிதிகள் ஆகியோரும் பாரதியார், துரைசாமி ஐயர், சக்கரை செட்டியார், ஸ்ரீனிவாஸாசாரியார் முதலிய சென்னைத் தலைவர்கள், பிரதிநிதிகள் முதலியோரும் கூடி ஆலோசித்தோம். மறுநாள் மாலை சூரத் நகரிலுள்ள பெரியதோர் கட்டடத்தில் ''தேசீயவாதிகள் மகாநாடு'' ஒன்று கூட்டி மேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப் பட்டது.

## திலகரும் வைதீகமும்

இங்குத் திலகருடைய வைதீகக் கோட்பாடுகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லவேண்டுவது அவசியமாயிருக்கிறது. தேசீயத் தலைவர்களும், பிறரும் அரவிந்தர் மாளிகை மாடியில் கூடி ஆலோசித்துக் கொண்டிருந்தபோது திலகருக்கு ஒருவன் சாப்பாடு கொண்டு வந்தான். அவன் திலகரைப் பார்த்து வலதுபக்கத்திலுள்ள தனித்ததோர் அறையைச் சுட்டிக்காட்டி, ''அங்கே கொண்டுபோய் வைக்கட்டுமா?'' என்று கேட்டான். திலகர், ''தேச பக்தர்களுக்குள்ளேயா ஜாதி வேற்றுமை? தம்பி, இங்கேயே வை'' என்றார். திலகர், கபர்தே, பாரதியார், நான் முதலிய பல்வேறு ஜாதிக்காரர்கள் ஒரே பந்தியில் வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டோம். எனவே தேச பக்திக்கு வெளியேதான் திலகரது வைதீகக் கோட்பாடு எல்லாம் என்பது தெளிவு.

ஏற்கனவே கூறியபடி மறுநாள் மாலையில் தேசிய வாதிகளின் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ அரவிந்தர் தலைமை தாங்கினார். இனி நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றிப்பல மாகாணத்தவரும் பிரசங்கித்தனர். மிதவாதிகளை விட்டுத் தனியே பிரிந்து தேசியவாதிகள் வருஷந்தோறும் தனி மகாநாடு கூட்டி ஆலோசனை செய்து சுய ஆட்சி அடைவதற்கான வேலைத்திட்டங்களை வகுத்து வருஷம் முழுவதும் வேலை செய்துவரவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இந்த மகாநாட்டில் பாரதி மாமாதான் முன்னின்று வேண்டுவன செய்தார். பல்வேறு மாகாணத்தவர் களுடனும் அவரவரது பாஷையில் பேசி அவர்களைத் தம் வழிப்படுத்தினார். மாமாவுக்கு ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பல பாஷைகள் தெரியுமெனப் பின்னால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

நிறைவேறிய தீர்மானப்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு காரியதரிசியைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று முடிவாயிற்று.

பம்பாய் மாகாணத்திற்குத் திலகரும், வங்கத்திற்கு அரவிந்தரும், சென்னை மாகாணத்திற்கு நானும் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். எங்கள் வேலைத் திட்டங்களும் வகுக்கப்பட்டன. பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சென்னை வந்து சேர்ந்தோம். திருவல்லிக்கேணிக் கடற்கரையிலும், மூர்மார்க்கெட் முதலிய பல இடங்களிலும் நானும், மாமாவும் காங்கிரஸ் கலைக்கப்பட்டது பற்றியும், தேசியவாதிகள் மகாநாடு நிறுவப்பட்டது பற்றியும், அதன் வேலைத் திட்டங்கள் பற்றியும் பல பிரசங்கங்கள் தொடர்ந்து செய்துவந்தோம்.

இந்தச் சமயத்திலெல்லாம் மாமாவும் நானும் ஈருடலும் ஒருயிருமாக வேலை செய்தோம் என்றால் மிகையாகாது. எங்களைச் சிலர் ''இரட்டையர்'' என்றே கேலியாகக் குறிப்பிடுவார்கள். என்னைக் கண்டால் மாமாவைக் காணலாம்; அவரைக் கண்டால் என்னைக் காணலாம். கொஞ்சகாலம் சென்றபின் நானும் எனது நண்பர்களும் தூத்துக்குடி சென்றோம். மாமா ரயில் வரைக்கும் வந்து வழியனுப்பினார்.

## ''கதர்க் கப்பல் கொடி காணுதே.''

தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல் வழி, வியாபாரம் செய்துவந்த வெள்ளையர்களை விரட்டியடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்கு கடல் ஆதிக்கம் வேண்டும். ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்ராவுக்கும் அப்பாலும் தமிழ்க்கப்பல் போய்வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்துவந்தனர். எனவே தமிழர்கள் மீண்டும் கடல்மேல் செல்வது எவ்வாறு என்பதைத் திட்டமிட்டேன்.

இத்திட்டத்தின் விளைவுதான் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி. எனது நண்பர்களின் நன்முயற்சியாலும் பொதுஜன ஆதரவாலும் சுதேசிக் கப்பல் கம்பெனி 1906-ம் ஆண்டில் நிறுவப்பட்டது.

கப்பல் கம்பெனியைக் கண்டு வெள்ளையர் வெகுண்டெழுந்தனர். அவர்களின் வியாபாரமும் கடலாதிக்கமும் நாசமடையத் தொடங்கியது. கப்பல் கம்பெனிக்குக் காரணஸ்தனான என்னைச் சிறைக்குள் தள்ள விரும்பினார்கள் வெள்ளையர்கள்.

சுதந்திர ஆட்சிக்காக நானும் சுப்பிரமணிய சிவாவும் இதர எனது நண்பர்களும் கிளர்ச்சி செய்துவந்தது வெள்ளையர்களுக்குக் கிலிபிடித்தது.

அப்போது அதிகாரத்திலிருந்த வெள்ளையர்களின் உதவியினால் என்னையும் எனது சகாக்களையும் சிறையில் தள்ளினால் சுதந்திரக் கிளர்ச்சிநின்றுவிடுமென எண்ணினர். வெள்ளை வியாபாரிகளின் தாசர்களான வெள்ளை அதிகாரிகள் என்மீதும், சிவா மீதும் எனது மற்றொரு நண்பர் பத்மநாப ஐயங்கார் மீதும் ராஜத் துவேஷ வழக்குத் தொடங்கினர். நாங்கள் இருவரும் 1909-ம் வருஷம் மார்ச் மாதம் 12-ம் தேதி கைது செய்யப்பட்டோம்.

நாங்கள் கைது செய்யப்பட்டதினால் ஆத்திரமடைந்த மக்கள் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பல அடாத செயல்கள் புரிந்தனர். இதற்குப் பயந்து தூத்துக்குடியிலிருந்த வெள்ளையர்கள் தங்கள் இரவுகளைக் கப்பலிலேயே சிலநாள் கழிக்க வேண்டியது ஏற்பட்டது.

## நெல்லையில் பாரதியார்

வெள்ளையர்களின் அடக்குமுறை இதே சமயத்தில் இந்தியா முழுவதிலும் தாண்டவமாடிற்று. வங்காளத்தில் அரவிந்தர் மீதும், பம்பாய் மாகாணத்தில் திலகர்மீதும், சென்னை மாகாணத்தில் என் வகையர் மீதும் ராஜத் துவேஷ வழக்குகள் ஒரேசமயத்தில் தொடரப் பட்டன.

என் வகையர்கள் கைது செய்யப்பட்டதும், சென்னை நண்பர்களான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாச்சாரி சுப்பிரமணிய பாரதி முதலியோர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது நாங்கள் மூவரும் (சிதம்பரம், சிவா, பத்மநாப அய்யங்கார்) பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணைக் கைதிமாராக இருந்தோம். சென்னை நண்பர்கள் எங்களைச் சிறையில் கண்டு உரையாடிக் களித்தனர்.

என்னைக் கண்டதும் மாமா அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டார். அவர் கண்களில் நீர் மல்கியது. "பிள்ளைவாள்! என்ன காரியம் செய்துவிட்டார்கள் பார்த்தீர்களா?" என்று மாமா அங்கலாய்த்தார். நான் சமாதானம் கூறி அவரைத் தேற்றினேன்.

*அப்பொழுதுதான் மாமா எனக்கும் கலெக்டர் விஞ்சு துரைக்கும் நடந்ததாக உருவகப்படுத்திக் கீழ்க்கண்ட பாடல்களை எழுதித் தந்தார்:*

நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்; கனல் மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன், வலி காட்டுவேன்.

கூட்டங்கூடிவந் தேமாதர மென்று
கோஷித்தாய், எமைத்தூஷித்தாய்.
ஓட்டம் நாங்க ளெடுக்க வென் றேகப்பல்
ஓட்டினாய்,பொருள் ஈட்டினாய்

கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய், சட்டமீறினாய்
ஏழைப்பட்டிங் கிறத்த லிழிவென்றே
ஏசினாய், வீரம் பேசினாய்.

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய், புன்மை போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய், ஆசை யூட்டினாய்

தொண் டொன்றே தொழி லாகக்கொண்டிருந்தோரைத்
தூண்டினாய், புகழ் வேண்டினாய்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய், சோர்வை யோட்டினாய்

எங்கு மிகுந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய், விதை தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ, நீங்கள் உய்யவோ?

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன், குத்திக்கொல்லுவேன்
தட்டிப்பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன், பழி கொள்ளுவேன்

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம், இனி யஞ்சிடோம்;
எந் நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?

வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம், முடி தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? அவமானமோ?

பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ? நாங்கள் சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ? உயிர் வெல்லமோ?

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ? பிடிவாதமோ?

பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ? மனஸ்தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ இதிற் செற்றமோ?

ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
சேர்ந் திட்டோம், நன்கு தேர்ந்திட்டோம்;
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம் சித்தம் கலைவுறோம்.

சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத் துள்ளே யிலங்க மஹாபக்தி
யேகுமோ? நெஞ்சம் வேகுமோ?

என் வகையார்கள் மீது கொண்டு வரப்பட்ட வழக்கில் எங்கள் பக்கம் வக்கீல்களாக ஆஜரான திருநெல்வேலி வக்கீல்களான சாதுகணபதி பந்துலு, கணபதி ராமய்யர், டி.வி.கிருஷ்ணசாமிஐயர், ஸ்ரீவைகுண்டம் டி.ஆர்.மகாதேவய்யர், சிவராமகிருஷ்ணய்யர் முதலிய தேசபக்தர்களுடன் சாது கணபதி பந்துலு ஆபீஸ் மேடையில் மாமாவும் மற்ற சென்னை நண்பர்களும் ஒரு வாரத்திற்கு மேலாகத் தங்கி வழக்கின் நடவடிக்கைகள், நடந்த வேடிக்கைகள் ஆகியவற்றைப் பார்த்துத் தமாஷாகச் சம்பாஷணைகள் செய்து கொண்டும் பாட்டுகள் பாடிக்கொண்டும் உல்லாஸமாகக் காலம் கழித்துக்கொண்டிருந்தனர்.

நான் சிறை செல்லும்போது காலஞ்சென்ற எனது மூத்தமகன் உலகநாதனுக்கு ஐந்து வயதிருக்கும். அவன் நான் போகுமிடங்களுக் கெல்லாம் என்னுடன் வந்து என் பிரசங்கங்களைக் கேட்டுக்

கொண்டிருந்ததனால் அப்பொழுதே அழகாக என்னைப்போலப் பிரசங்கம் செய்வான். தொட்டில் பழக்கம்தானே!

உலகநாதனின் பிரசங்கத்தைக் கேட்டு மாமா ஆனந்தமடைவார்; ஆடுவார்; பாடுவார்!

''பயலே, அப்படிப் பேசு, அப்பாவுக்கு மிஞ்சின பிள்ளையாயிருக்கணுமிடா! குட்டிச் சிதம்பரம் பிள்ளை நீதாண்டா'' எனக் குழந்தையுடன் மாமா கொஞ்சி விளையாடியதாக என் மனைவி நான் சிறையிலிருந்தபொழுது எனக்கொரு கடிதம் எழுதி அனுப்பினாள். அக்கடிதத்துடன் மாமா என் மகன் உலகநாதனைப் பாராட்டிப் பென்சிலால் எழுதி அனுப்பிய ஒரு பாட்டும் இருந்தது. அதன் தலைப்பு ''லோகநாயகி புதல்வன்'' என்பதாக என் ஞாபகம். என் மகன் உலகநாதன் எப்படி எங்களை விட்டுத் தனது இருபத்திரெண்டாவது வயதில் பிரிந்து வாழ்வை நீத்தானோ அதேபோல அந்தப் பாட்டு போன இடமும் தெரியவில்லை.

மாமாவும் சென்னை நண்பர்களும் ஒரு வாரத்திற்கு அதிகமாக நெல்லையில் தங்கியிருந்துவிட்டுச் சென்னை சென்றுவிட்டனர்.

எங்கள் மீது தொடரப்பட்டிருந்த ராஜத் துவேஷ வழக்கில் நெல்லை அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் பின்னேயால்* எனக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பெற்றோம். ஹைகோர்ட்டு அப்பீலில் எங்கள் தண்டனைகள் குறைக்கப்பட்டன. வழக்கின் ஆரம்பத்திலேயே பத்மநாபய்யங்கார் விடுதலை செய்யப்பட்டார்.

நான் எனது தண்டனையைக் கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலுமாகக் கழித்துவிட்டு 1912-ம் வருஷம் டிசம்பர் மாதம் விடுதலையடைந்தேன்.

## புதுவையில் பாரதியார்

நெல்லையிலிருந்து பாரதியார் முதலியோர் சென்னை போய்ச் சேர்ந்ததும், சென்னையில் சுரேந்திரநாத் ஆரியா மீது ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்பட்டது. மாமா பேரிலும், ஸ்ரீனிவாஸாச்சாரியார் பேரிலும் சர்க்கார் ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்போவதாகவும், அவர்கள் ஜெயில் செல்ல விரும்பவில்லையானால், புதுச்சேரிக்குச் சென்றுவிடும்படியாகவும் பாரதியாரின் தேசிய கீதங்களில் மயங்கிக் கிடந்த கவர்மெண்டு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் ஒருவர் பாரதியாரிடம் தகவல் தெரிவித்துவிட்டார். சில காரணங்களால் அவர் பெயரை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. சிறையுள் கிடந்து தேச சேவை

* - A. F. Phinhey

செய்யாதிருப்பதினும் வேறு தேசம் சென்று தேச சேவை செய்துகொண்டிருப்பதே மேல் என நாங்கள் அவர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பினோம். முதலில் மாமா இதற்கு ஒப்புக் கொள்ள வில்லை. பின்னர் மாமா புதுச்சேரி செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதினால் சென்றுவிட்டார் போலும்!

புதுச்சேரியில் அரவிந்தர் முன்னரே வந்திருந்தார். வ.வே.சுப்பிரமணிய ஐயரும் போய்ச் சேர்ந்தார். நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வதற்கு உடந்தையாக இருந்தவர் என அப்போது சொல்லப்பட்ட என் ஊர் (ஒட்டப்பிடாரம்) மாடசாமிப் பிள்ளையும் புதுவை புகுந்தார். இவ்விதமாக இந்திய தேசாபிமானிகள் பலர் புதுவையில் குடியேறி நிலையாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வேலைகள் செய்துகொண்டிருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திரஜோதி, தமிழ்நாடு முழுவதும் சுடர் வீசிக்கொண்டிருந்தது. கண்ணனூர்ச் சிறையினின்றும் எனது தண்டனைக்காலம் கழிந்து விடுதலையடைந்த நான் என் குடும்பத்தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீனிவாஸாச்சாரி முதலிய சென்னை தேசபக்தர்களைக் காணவேண்டும் என்ற அவா எனக்கு மேலிட்டது.

## புதுவையில் பாரதி தரிசனம்

நான் புதுச்சேரிக்குச் சென்றேன். மாமா வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்து அங்கு போய்ச் சேர்ந்தேன். மாமாவின் மனைவி மக்களையும் கண்டுகளித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும், ஆவிநீர் குடித்தும், அவரது ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும், அகமகிழ்ந்து சின்னாள் கழித்தேன்.

மாமாவும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொல்லியதுபோல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை. தேசபக்தராகவும், தேசத்தலைவராகவுமே விளங்கினார்.

தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்துவந்தது. ஒருநாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக் கொண்டிருந் தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும் என்றும், அதற்கான பணத்தைச் கலயமாகப் பொதுஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் மாமாவும், ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனது திட்டத்தைக் கேட்டு மாமா 'கலகலென' நகைத்தார். ''பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாமான்யமா? அதற்கு எவ்வளவு ஆள் வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும்? இதெல்லாம் நடக்கிற காரியமா? ஓய்?'' எனக் கேட்டார்.

எனக்கு மாமா மீது கோபம் வந்துவிட்டது. ''பாரதி, ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும். உலகத்தை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்?'' என்று கூறி என்னவோ சுடுசொற்கள் சிலவும் கூறிவிட்டேன். மாமாவின் மணி வாக்கு என்னமோ உண்மையாய்த் தான் ஆயிற்று. ஆனால் எனது பத்திரிகைத் திட்டந்தான் பொய்த்துப் போயிற்று.

## வ. வே. சு. ஐயரும், வ. உ. சி.யும்

நான் புதுவையில் மாமா வீட்டில் தங்கியிருந்த காலத்தில் நண்பர் வ.வே.சுப்பிரமணிய ஐயர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து எங்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அவரது எளிய உடைபாவனைகளும், உள்ளும் புறமும் ஒத்த பேச்சும் அவருடைய தேசாபிமான நிறைவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

கலெக்டர் மிஸ்டர் ஆஷ் துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கனவே அறிந்தவற்றைப் புதுவை நண்பர்களிடம் தெரிவித்து ஒப்பிட்டு உண்மையறிந்தேன். ஒட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளையையும் கண்டுபேசினேன்.

## ''மானம் பெரிது, பெரிது மானம்!''

புதுச்சேரியில் பாரதியார் முதலியோருடன் தங்கியிருந்த நாட்கள்,

> ''தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையவர்
> இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
> நுகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
> உம்பர் உறையும் பதி''

என்னும் பாவை அடிக்கடி நினைக்கவும்,

> ''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்''

என்னும் பாவின் உண்மைப் பொருளைக் காணவும் செய்தன. கடைசியாக பாரதியார் முதலிய உண்மை அறிஞர்களையும் உண்மைத் தேசாபிமானிகளையும் மிக வருத்தத்தோடு பிரிந்து சென்னை வந்து சேர்ந்தேன். நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசித்தபின் எங்கள்

கம்பெனியைச் சேர்ந்த ஒரு கப்பலை எங்கள் எதிரியான பி.ஐ.எஸ்.என்.கம்பெனியாரிடமே அப்போதிருந்த சுதேசிக்கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்றுவிட்டது எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இதுபற்றி மாமாவிடம் நான் பிரஸ்தாபித்தபோது அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள் தான் நான் புதுவையைப் பிரியும்போது என் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவை:

''சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒருசில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காளக் குடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்த சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!'' என்று எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினார். என் செய்வது? தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்லவேண்டும்: புதுவையிலிருந்து நான் என்னுடன் கொண்டு வந்தவை புஸ்தகங்கள் படுக்கைகள் மட்டுமல்ல; மாமாவின் இந்த மணிவாசகமும்தான்!

## கடைசியாகக் கண்டது

பின்னர் பல வருஷங்களுக்குப்பிறகு சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் நான் வசித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் நான் திருவல்லிக்கேணி முதலான இடங்களுக்குப் போய்விட்டு இரவு சுமார் பத்து மணிக்கு என் வீடு வந்து சேர்ந்தேன். என் வீட்டுத் தார்சா (வராந்தா)வில் இருவர் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனர். வந்தவுடன் நான் கைகால் கழுவிவிட்டு வீட்டுக்குள் சென்றேன். சாப்பாடு போடும்படி என் மனைவி மீனாக்ஷியிடம் கூறினேன். அவள் இலைபோட்டுப் பரிமாறியதும் நான் சாப்பிட ஆரம்பித்தேன். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது தார்சாவில் தூங்குபவர்கள் யார் என விசாரித்தேன். ''உங்கள் மாமனார் பாரதியாரும், அவருடன் வந்துள்ள யாரோ ஒரு சாமியாரும்'' என்றனள் என் மனையாள்.

''எப்போது வந்தார்கள்?'' என்றேன்.

''இரவு எட்டு மணிக்கு வந்தார்கள். வரும்பொழுதே மாமா உங்களைத் தேடிக்கொண்டு வந்தார்'' என்றாள்.

''இருவரும் சாப்பிட்டார்களா? விசாரித்தாயா?'' என்று வினவினேன்.

''வந்ததும் உங்களை எங்கேயென்றும், எப்பொழுது வருவீர்கள் என்றும் கேட்டார்கள். பட்டினம் போயிருக்கிறார்கள் என்றேன். நான் சொல்வதற்குள்ளாக எப்பொழுது சிதம்பரம்பிள்ளை வருவார் மீனாக்ஷி என்று மீண்டும் கேட்டார். 10 மணிக்கு வருவார்கள் என்றேன். எங்களுக்குப் பசிக்கிறது. முதலில் சோறு போடு என்றார்கள். போட்டேன்.

இருவரும் சாப்பிட்டனர். சாப்பிட்டுவிட்டு நீங்கள் வந்தவுடன், அவர்களை எழுப்பும்படி சொல்லிவிட்டு பாயும் தலையணையும் கேட்டார்கள். படுக்கையை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிக்கொண்டு தார்சாவிற்குச் சென்றுவிட்டார்கள்'' என்றார்.

நான் அவசர அவசரமாக எனது சாப்பாட்டை முடித்துக்கொண்டு தார்சாவுக்கு வந்து ''மாமா, மாமா!'' என உரக்க எழுப்பினேன். இருவரும் எழுந்துவிட்டனர்.

க்ஷேமம் விசாரித்தேன். க்ஷேமத்தையும் தாம் வந்த வரலாறு பற்றியும் கூறினார் மாமா. புதுச்சேரியில் வசித்துவந்த பல இந்திய நண்பர்களின் க்ஷேமத்தையும் விசாரித்தேன். மாமா பதில் அளித்துக் கொண்டே வந்தார்.

''சுவாமிகள் யாரோ?'' என்றேன்.

''ஒரு பெரியவர்'' என்றார் மாமா. அதற்குமேல் துளாவித் துளாவிக் கேட்க நான் விரும்பவில்லை; பேசாதிருந்துவிட்டேன். ஆனாலும் என் மனசாட்சி அந்த மனிதனைப் பற்றி என் மனதில் ஏதோ ஒரு பீதியை எழுப்பியது. இதற்கு ஆதாரமும் இல்லாமல் இல்லை. மாமா முகத்தில் ஏதோ மாற்றம் இருப்பதாக எனக்குத் தோன்றியது. பழைய உத்ஸாகத்தையும், முகமலர்ச்சியையும் கண்களின் வீரப் பொலிவையும் கண்டிலேன். பேச்சும் ஒரு புதுமாதிரியாக இருந்தது. சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவர் பேசுவதாகவும் எனக்குப்பட்டது. ஆனால் காரணம் தெரிந்திலேன். பொது விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பின் துயின்றோம்.

## மாமாவின் மாற்றம்: சாமியாரின் தோற்றம்

மறுநாட் காலையில் நாங்கள் எழுந்ததும் மாமா தம்முடன் வந்திருந்த சாமியாருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்து வைத்து வேறு வேஷ்டி கொடுக்கவேண்டுமென எனக்குக் கட்டளையிட்டார். அந்தச் சாமியாரின் நீல் எண்ணெய் மேனியில் கால் அங்குலக் கனம் அழுக்குப் படிந்திருப்பதைக் கண்டேன். சாமியாரைக் குளிக்கக் கூப்பிட்டேன். சாப்பாடான பிறகு குளிக்கலாம் என்றார்; மாமாவும் அதை ஒப்புக்கொண்டுவிட்டார்.

காலைக் காப்பி, சாப்பாடு முடிந்ததும் சாமியார் குளிப்பதற்காக வானவெளிக்குச் சென்றார். பக்கத்தில் ஒரு செப்புப் பானையில் வெந்நீர் இருந்தது. இரு வேலைக்காரர்களும் சாமியாரைக் குளிப்பாட்டுவதற்குத் தயாராயிருந்தனர். நான் மேல் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன்.

சாமியார் அழுக்கேறிய தனது வேஷ்டியைக் களைந்து வைத்தார். அவரது அரைஞாணில் பலப்பல துணி முடிச்சுக்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் ரூபாய் இருந்தது.

அவற்றை அவிழ்த்துவிடும்படி நான் வேலைக்காரர்களிடம் கூறியபோது சாமியார் ஏதோ மறுத்தார். பயப்பட வேண்டாம் என்றும், அவர் பணத்தை யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும், அவர் முன்னேயே வைத்திருந்து, குளித்துவிட்டு வந்ததும் அவரிடம் நானே கொடுத்து விடுவதாகவும் நான் கோபத்துடன் கூறவே சாமியார் அடங்கிவிட்டார்.

பின்னர் வேலையாட்கள் அவருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்து வைத்தனர். கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வந்து வைத்திருந்த ஒரு ஜோடிப் புது வேஷ்டிகளையும், சாமியாரது பண முடிச்சுக்களையும் நான் அவரிடம் கொடுத்ததும் சாமியாருக்குப் பரமானந்தம்!

மூவரும் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டோம். சிரம பரிகாரத்தின் பொருட்டு மூவரும் படுத்து உறங்கினோம்.

மாலை சுமார் 3 மணிக்கு அவர்களிருவரும் பேயிரைச்சலிட்டு வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கேட்டு நான் விழித்துக் கொண்டேன். ஒரு சிறு ''அமிருதாஞ்சன்'' டப்பாவிலிருந்து ஏதோ ஒரு லேகியத்தை எடுத்து ஆளுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு வாயில் போட்டுக்கொண்டனர். அவர்கள் கொம்மாளம் அதிகமாயிற்று.

''அது என்ன மாமா?'' எனக் கேட்டேன்.

''அதுவா, மோக்ஷலோகத்திற்குக் கொண்டு போகும் ஜீவாம்ருதம்'' என்றார் மாமா. எனக்கு விஷயம் விளங்கிவிட்டது.

''அட, பாவிகளா! எலுமிச்சங்காய் அளவா? நீங்கள் நாசமா...''

''எல்லாம் உனக்குப் பயந்துதான் இந்தச் சிறிய அளவு. இல்லாவிட்டால்...'' என்று சாமியார் முதுகில் ஒருஅடி கொடுத்துக் கொண்டே மாமா வெறிபிடித்தவர் மாதிரிச் சிரித்தார்.

மாமாவின் மாற்றத்திற்கு இம்மருந்துதான் காரணம் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. இருந்தும் பலவாறு பேசியும், பாடியும் அன்று மாலையையும் என் வீட்டில் பொழுதுபோக்கிக் கழித்தோம்.

சாமியார் சரீர கனத்திலும், லேகியம் தின்பதிலும் தவிர மற்றபடி பேச்சு முதலியவற்றில் மக்காகவே இருந்தார். அறிவின் சிகரமான மாமாவுக்கு இந்த மக்கினிடத்தில் எவ்வாறு பற்று உண்டாயிற்று என்று அதிசயித்தேன்.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு பாரதியாரின் அந்நியந்த நண்பரும், என் நண்பருமான ஜார்ஜ் டவுன் வக்கீல் எஸ்.துரைசாமி ஐயர் வீட்டிற்குச் சென்றோம். ஐயர் வீட்டில் இல்லை. எனவே நாங்கள் மூவரும் ஐயர் வீட்டு மாடிக்குச் சென்று அங்கிருந்த கட்டில்களில் படுத்துக்கொண்டு கண்துயின்றோம்.

மாலை மூன்று மணி சுமாருக்கு முதல்நாளைப் போலவே சாமியாகும். மாமாவும் உல்லாசமாகச் சப்தமிடுவதைக் கேட்டு நான் விழித்தேன். முந்திய தினத்தைப்போலவே தகர டப்பாவிலிருந்த லேகியம் அவ்விருவரது வயிற்றிலுமாகச் ''சமாப்தி''யாகியது. தலையில் அடித்துக்கொண்டு பேசாதிருந்துவிட்டேன்.

இதற்குள்ளாக வக்கீல் ஐயரும் வந்து சேர்ந்தார். அவருடன் சிறிதுநேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு நான் அம்மூவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு பெரம்பூரில் உள்ள என் வீடு போய்ச் சேர்ந்தேன்.

பின்னர் அவ்வப்போது சென்னையில் நான் 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஆபீசுக்குப் போயிருந்த சமயங்களிலெல்லாம் அங்கு உதவி ஆசிரியராக இருந்த மாமாவைக் கண்டு பேசியிருக்கிறேன். அருமை மாமாவின் எழுத்துக்கள் 'மித்திரன்' வாயிலாக எனக்கு ஆனந்தம் ஊட்டி வந்தன.

## மாமா மறைந்தார்: மாண்பு மணத்தது!

கொஞ்ச நாளில் மாமா காலஞ்சென்றது கேட்டுத் திடுக்கிட்டேன். துக்கக்கடலில் ஆழ்ந்து தத்தளித்தேன். 'நல்லார்க்கு அதிக காலம் இல்லை போலும்!' என நினைத்தேன்.

மாமா இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டாலும் அவரது தேசிய கீதங்களும் மற்றைய பாடல்களும், கதை - கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரிதத்தில் மட்டுமல்லாமல் கவிதா மேதைகளின் சரிதத்திலும் வைரம் என ஒளிவிடும்.

அவருடைய பாடல்களின் அருமை பெருமையையும் சிறிது இயம்ப வேண்டும் என நினைத்தேன். ஆனால் எனக்கு ஆற்றலின்மையாலும் அவகாசமின்மையாலும் அவ்வேலையில் புகாது நின்று, கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் என்றென்றும் படித்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வந்தே மாதரம்! வாழ்க பாரதி!

# சிவஞான போதம்
# வ. உ. சிதம்பரம் பிள்ளை உரை

## உரைப்பாயிரம்

திருவள்ளுவர் திருக்குறள், சிவஞான போதம், கைவல்லிய நவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும், சித்தாந்த நூல்களிலும், வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவையென்பது எனது அபிப்பிராயம். இம்மூன்று நூல்களில் முந்திய இரண்டின் உரைகளுடைய கடின நடையும், பெரிய அளவும் அவற்றைத் தமிழ் மக்கள் கற்பதற்குக் கையில் எடுக்காதவாறு அச்சுறுத்துகின்றன. அவ்வச்சத்தை நிவிர்த்திக்கும் பொருட்டு எளிய நடையிலும் சிறிய அளவிலும் அவற்றிற்கு உரைகள் எழுதவேண்டுமெனப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன். பின்னர்த் திருவள்ளுவர் திருக்குறளுக்கு ஓர் உரை எழுதி வெளிப்படுத்தினேன். இப்போது சிவஞான போதத்திற்கு இவ்வுரையெழுதி வெளிப்படுத்து கின்றேன்.

இவ்வுரையில் ஏனைய உரைகளிற் காணப்படும் பல மதக்கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா. அவை காணப்படாமைக்குக் காரணம் மக்கள் பலவேறு பெயர்களோடும், வடிவுகளோடும் காணப்படினும் அவர்களெல்லாம் மக்கட் சாதியினரேயாவதுபோல, மதங்கள் பலவேறு பெயர்களோடும் கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையே. அன்றியும், மத வேற்றுமையைக் காண்பவர்களும். பேசுபவர்களும் ''யான்'', ''எனது'' என்னும் மத வெறிபிடித்த மாக்களேயென்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மத வேற்றுமை களையோ, சாதி வேற்றுமைகளையோ.

வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களேயென்றும் யான் கருதுகின்றேன். அதனாலும், இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.

இச் சிவஞான போதத்தின் ஆசிரியரான ஸ்ரீ மெய்கண்ட தேவர் இயற்றியதாகச் சொல்லப்படும் 'வார்த்திகப் பொழிப்புரை'யில் பல மதக் கண்டனங்கள் காணப்படுகின்றனவேயென்று வினவின், அவர் இந்நூலை இயற்றிய காலத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர்த் தமிழ்நாட்டில் சில சமயங்கள் புகுந்து ஒரு பெருங்கலக்கத்தை உண்டுபண்ணின வென்றும், அப்போது அச் சில சமயங்களையும் வேறு பல சமயங்களையும் கண்டிக்கக் கருதிப் பிற பல சமயக் கண்டனங்களடங்கிய வார்த்திகப் பொழிப்புரையை இயற்றிச் சிவஞான போதச் சூத்திரங்களோடு சேர்த்தனரென்றும் விடையளித்திடுக.

தமிழ்ச்சிவஞான போதம் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழி பெயர்ப்பெனச் சிலரும், வடமொழிச் சிவஞான போதம் தமிழ்ச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பென வேறு சிலரும் கூறி வருகின்றனர். அது சம்பந்தமாக யான் இவ்வுரையில் ஒரு முடிவும் கட்ட முற்படவில்லை. தமிழ்ச் சிவஞான போதச் சூத்திரங்களின் சொற் களையும், எனது சொந்த மெய்ஞ்ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டும், சிவஞான போதச் சூத்திரங்களுக்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றியுள்ள சிற்றுரையின் பிண்டப் பொழிப்புரைகளையும், தமிழகராதியையும் துணையாகக் கொண்டும் இவ்வுரை இயற்றியுள்ளேன். நாள் ஒன்றுக்கு இரண்டு மணி வீதம் பன்னிரண்டு நாள்களுள் யான் சிவஞான போதத்தை ஆராய்ச்சி செய்து இவ்வுரையை எழுதி முடித்தேன். ஆதலால், ஸ்ரீ சிவஞான சுவாமிகள் முதலியோர்களின் உரைகளைப் பற்றி யான் ஆராய்ச்சி செய்யப் புகவில்லை. இவ்வுரை எழுதுவதற்காகச் சிவஞான போதத்தை யான் ஆராய்ச்சி செய்ததில் எனக்குக் கிடைத்த பலன் சித்தாந்தமும், வேதாந்தமும் ஒன்றேயென்ற எனது கொள்கை உறுதியடைந்ததே.

இவ்வுரையில் ஒவ்வொரு சூத்திரத்தின் சாரத்தையும் அதனதன் தலைக் குறிப்பாகவும், சூத்திரத்தின் பொருளை அதன்கீழே 'பொருள்' என்ற சொல்லோடும், இலக்கணக்குறிப்பு முதலியவற்றை 'அகலம்' என்ற சொல்லோடும், கருத்துரையைக் 'கருத்து' என்ற சொல்லோடும் தொடங்கி எழுதியுமுள்ளேன்.

இச் சிவஞான போதவுரையை மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடாலயத்தின் அதிபராகிய ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளுடைய தலைமையில் குறுக்குச்சாலையிலுள்ள திரு.அ.செ.சு. அவர்களுடைய

தருமச் சத்திரக் கட்டிடத்தின் முன்பக்கத்திற் கூடிய அவையின்கண் அரங்கேற்றினேன். அப்போது சுவாமிகள் காப்புச் செய்யுளிற் காணும் ''மலைவில்லார்'' என்பதற்கும், சில சூத்திரங்களின் சில சொற்களுக்கும் அருமையான பொருள்கள் சில உரைத்தார்கள். அவற்றிற் சிலவற்றை இந்நூலில் சேர்த்துள்ளேன். இந்நூலும் வேதாந்த நூல்களும் கூறுவது ஒரே சமயக் கொள்கையாகவே தோற்றுகிறதென்றும், இந்நூலைத் தாம் இனி ஆராய்ச்சி செய்யப் போவதாகவும் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளினார்கள். சென்னையினின்று வெளியாகும் 'தினமணி' அனுபந்தத்தில் இவ்வுரை அரங்கேற்றப் படுவதற்கு முன்னிருந்த நிலைமையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

இறைவனையும் உயிரையும் பற்றிப்பேசும் இவ்வருமையான நூலைத் தமிழ் மக்களெல்லாம் படித்தல் வேண்டும், படிக்க முன்வரல் வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் யான் இவ்வுரையை இயற்றினேன். எனது நோக்கம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் துணை.

# சிவஞான போதம்

ஓஉ

## காப்பு

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

*பொருள்:* கல் ஆல் நிழல் - கல் ஆலமரத்தின் நிழலின் கண்ணே (வீற்றிருக்கும்), மலைவு இல்லார் - உவமை இல்லாதவர், அருளிய - அருளுதற் பொருட்டு, பொல்லார் இணைமலர் - பொல்லாத பிள்ளையாருடைய இரண்டு தாமரை மலர்போன்ற பாதங்களை, நல்லார் புனைவரே - கற்றோர் (தம் தலையில்) சூடுவரே.

*அகலம்:* அருளிய என்பது 'செய்திய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். பொல்லாத பிள்ளையார் என்னும் பெயரையுடைய கணபதிப் பெருமானைப் ''பொல்லார்'' என்றார். மலைவில்லார் என்பதற்கு மலையை வில்லாகவுடையவ ரெனவும் மயக்கம் இல்லாதவ ரெனவும், அருளிய என்பதற்குப் பெற்றருளிய எனவும் உரைப்பினும் அமையும்.

*கருத்து:* தாம் தொடங்கிய நூல் இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறினார்.

# முதல் சூத்திரம்

## *இறைவன் உண்மை*

**அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்**
**றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா**
**மந்த மாதி யென்மனார் புலவர். 1**

*பொருள்:* அவன், அவள், அது என்னும் அவை - (ஐம்பொறிக் காட்சியிற் காணப்படும்) அவன் அவள் அது என்னும் முப்பொருளும்; மூவினைமையின் தோற்றிய திதியே - (தோன்றல், நிற்றல், அழிதல் என்னும்) மூன்று வினையுடைமையோடு தோன்றிய நிலைபேறுடைய பொருள்களே; ஒடுங்கி மலத்து உளதாம் - (அவற்றில் ஒவ்வொன்றும் பின்னர்) மறைந்து (ஆணவ மலம், மாயா மலம், கன்ம மலம் என்னும் மலங்களால்(மறுபடியும்) உளதாகும்; அந்தம் ஆதி என்மனார் புலவர் - (அவை) தோன்றுதலும், நிற்றலும், ஒடுங்குதலும் இறைவனிடத்தே என்று கூறுவர் அறிஞர்.

*அகலம்:* அவன், அவள், அது என்னும் சுட்டுப்பொருள்கள் மூன்றுமன்றி, உலகமென ஒன்று இல்லையாகலான், "அவனவ ளதுவெனு மவை" என்றார். என்னும் என்பது னகர வொற்றுக் கெட்டு நின்றது. அம் முப்பொருட்கும் உடைமை அம்மூவினைகளே யன்றி வேறில்லை யென்பதை உணர்த்த வேண்டி, " மூவினைமையின்" என்றார். இன் என்பது ஒடு என்னும் பொருள் தந்து நின்றது. திதி - நிலை பேறு. திதியையுடைய பொருள்களைத் திதி என்றார். "திதி" சாதியொருமை. நிலைபேறுன்டய - பொறிக்காட்சியில் நிலைத்து நிற்கின்ற. "ஏகாரம்" தேற்றத்தின்கண் வந்தது. ஆணவம் - 'யான்' என்று நினைத்தல். மலம் - அழுக்கு. 'யான்' என்று நினைத்தல் ஒரு தொழிலாதலால், அது கன்ம மலமாயிற்று. கன்மம் - கருமம் - தொழில். 'யான்' என்று நினைத்தற்குக் காரணம் சொல்ல முடியாததொன்றாதலால், அது மாயா மலம் என்று சொல்லப்பட்டது. அறிய முடியாத காரணத்தால் வந்ததன்னை மாயையால் வந்தது எனக் கூறுவது வழக்கு. 'யான்' என்று நினைத்தது யார் எனில், அறிவு சொரூபமாகிய இறைவனே. மலம் என்பது மூன்றாம் வேற்றுமைத்தொகை; 'அத்து'ச்சாரியை. வறுமையால் இரந்தனன் என்பது, வறுமையைப் போக்குவதற்காக இரந்தனன் எனப் பொருள் தருதல்போல், "மலத்தால் உளதாம்" என்பது "மலத்தைப் போக்குவதற்காக உளதாம்" எனப் பொருள் தந்து நின்றது. அம் முப்பொருள்களில் ஒவ்வொன்றும் ஒடுங்கி உளதாம் என்பதை உணர்த்தவே, உளதாம் என்று ஒருமையில் கூறினார். அந்தமுறுதல் என்பதற்குத் "தன்னினங்கோடல்" என்னும் உத்தியால் தோன்றலும்,

நிற்றலும் என்பனவற்றைச் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது. அறிஞர் என்பது ஈண்டு மெய்ப்பொருளுணர்ந்தோரைக் குறித்து நின்றது.

கருத்து: பொறிக்காட்சிக்குப் புலப்படும் உலகத்தோற்றத்திற்குக் காரணன், அக்காட்சிக்குப் புலப்படாத இறைவன்.

## இரண்டாம் சூத்திரம்

### இறைவனே உலகமாயினன்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே. 2

பொருள்: தானே அவையேயாய் - இறைவனே (அவன், அவள், அது என்னும்) அம்முப்பொருள்களேயாய்; இருவினையின் - (அம்முப்பொருள்களில் பகுத்தறிவுடைய உயிர்கள் செய்யும்) நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளால் ஆணையின் போக்குவரவு புரிய - (அவ்விறைவன்) சிற்சக்தியால் இறத்தலையும், பிறத்தலையும் செய்ய; நீக்கம் இன்றி நிற்கும் - (இறைவன் அவ்வுயிர்களினின்று) நீங்குதல் இல்லாமல் நிற்பன்.

அகலம்: அன்று, ஏ என்பன அசைகள். பொருட் பொருத்தம் பற்றித் ''தானே அவையேயாய்'' என்று கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. இறைவனன்றி வேறொன்றும் அவையாகத் தோன்றுதல் இல்லையென்பதையும் இறைவன் தோற்றுங்கால் அவையாகவே தோற்றுவனென்பதையும் குறிக்க வந்தமையால், ''ஏகாரம்'' இரண்டும் பிரிநிலை. உயிர்கள் தாமாகவே இரு வினை புரிகின்றன வென்பதையும் அவற்றின் பயனாகிய இறத்தல், பிறத்தல் முதலியன இறைவன் சிற்சக்தியால் நிகழ்கின்றன வென்பதையும் உணர்த்தும் பொருட்டே ''ஆணையின்'' என்பதைப் போக்குவரவு புரிய'' என்பதன்பின் வைத்தனர். உயிர்கள் இருவினைகளைப் புரியுங் காலத்தும் பிறப்பிறப்புகளை அடையுங்காலத்தும், மற்றெக்காலத்தும் உயிர் களோடு இறைவன் ஒன்றி நிற்கின்றான் என்பதை உணர்த்தவே, ''நீக்கமின்றி நிற்கும்'' என்றார்.

கருத்து: இறைவனே அவன், அவள், அதுவாகி அவற்றுடன் என்றும் ஒன்றி நிற்கின்றான்.

## மூன்றாம் சூத்திரம்

### உயிரின் உண்மை

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா. 3

பொருள்: இலது என்றலின் - (காட்சியில் உயிர்) இலது என்றலின்; எனது உடல் என்றலின் - என்னுடைய உடம்பு என்றலின்; ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் - ஐம்பொறிகளுடைய ஒடுக்கத்தை அறிதலின்; கண்படில் உண்டிவினை இன்மையின் - உறங்கினால் உணவும் தொழிலும் இல்லாமையின்; உணர்த்த உணர்தலின் - (ஒரு பொருளை) அறிவிக்க அறிதலின் ; மாயா இயந்திர தனுவுள் - மாயமாக வந்த (ஓர்) இயந்திரம் (எனச் சொல்லத்தக்க) கருவி(யாகிய உடம்பி)னுள்; ஆன்மா உளது - உயிர் உள்ளது.

அகலம்: 'இலது என்றல்' முதலிய ஐந்து செயல்களால் மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா உளது என்று கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. என்றலின் - என்று கூறுதலின். காட்சியில் உயிர் இலது என்று கூறுங்கால் காட்சிக்கு அப்பாற்பட்டு உயிர் உளது என்றல் பெறப்பட்டது. ஈண்டு ஆன்மா என்பது ஜீவான்மா என்னும் பொருளில் வந்தது. ஜீவான்மா, ஜீவன், உயிர் என்பன ஒரு பொருட் கிளவிகள். கிளவி - சொல். ஜீவான்மா என்பது 'யான்' என்னும் அகங்காரத்தைப் பொருந்திய அறிவு. ஆன்மா என்பது 'யான்' என்னும் அகங்காரத்தைப் பொருந்தாத அறிவு. 'யான்' என்னும் ஜீவான்மா எனது உடம்பு என்கின்றது; அஃதே ஐம்பொறிகளின் ஒடுக்கத்தை அறிகின்றது; அஃதே உணர்த்த உணர்கின்றது; அஃதே நனவில் உண்டி வினை கொள்கின்றது. புலன் - விஷயம். புலன் என்பது ஈண்டு ஆகுபெயராய் அதனைப் பற்றும் பொறிக்கு ஆயிற்று. ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புலன்கள் - ஐம்பொறிகள் முறையே பற்றும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. ஐம்பொறி ஒடுக்கம் - ஐம்பொறிகள் தொழில் புரியா தொடுங்கி இருத்தல். ஐம்பொறிகளும் முறையே தத்தம் புலன்களைப் பற்றாதிருத்தலை ஐம்பொறியொடுக்க மென்றார். ஐம்பொறிகள் ஐம்புலன்களைப் பற்றாதிருத்தல் சொர்ப்பனத்திலும், சுழுத்தியிலும் நிகழ்தல்போல ஜாக்கிரத்திலும் நிகழ்தல் கூடும். ஒருவன் ஒரு பொருளைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்குங்கால், அவனது பொறிகள் அவற்றின் புலன்களைப் பற்றுதல் இல்லை. ஆனால், சொர்ப்பனத்திலும் சுழுத்தியிலும் பொறிகள் புலன்களைப் பற்றாத

தன்மையை அலை நீங்கிய பின்னரே அறிதல் போல, ஜாக்கிரத்தில் பொறிகள் புலன்களைப் பற்றாத தன்மையை ஆழ்ந்த சிந்தனை நீங்கிய பின்னரே ஒருவன் அறிதல் கூடும். ஜீவர்கள் ஜாக்கிரத்தில் உணவும் தொழிலும் கொள்ளுதலும், சொர்ப்பனத்திலும் சுழுத்தியிலும் அவற்றைக் கொள்ளாதிருத்தலும் இயல்பாகையால், ''கண்படில் உண்டி வினையின்மை'' என்றார். நனவு - ஜாக்கிரம்; கனவு - சொர்ப்பனம்; உறக்கம் - சுழுத்தி, அறிவிக்க அறிதல், ஒவ்வொருவருக்கும் அனுபவம். ஜீவாத்மாவைச் சரீரம் எவ்வாறு பொருந்திற்று என்பது அறியமுடியாததொன்றாதலால், 'மாயா இயந்திரம்'' என்றார். உடம்பு பல தொழில்களைச் செய்யும் பல உறுப்புக்களைக் கொண்டிருத்தலால், அதனை ''இயந்திரம்'' என்றார். உடம்பு பல உறுப்புக்களையுடைய இயந்திரம் போன்றதாயினும், அது பல உறுப்புக்கள் இல்லாத ஒரு சாமான்ய கருவிபோல உபயோகப்படத் தக்கதாயும் இருத்தலின், அதனைத் தனுவென்றுங் கூறினார். தனுவினுள் என்பதில் இன் சாரியை.

கருத்து: இல தென்றல் முதலிய செயல்களைச் செய்வதால், உயிர் உடம்பில் உளது.

## நான்காம் சூத்திரம்

### உயிரின் தன்மை

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மா சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பதின் றைந்தவத் தைத்தே. 4

பொருள்: ஆன்மா அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று - உயிர் அந்தக்கரணமாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அவற்றுள் ஒன்று அன்று; அவை சந்தித்தது - அவற்றோடு கூடியது; சகச மலத்து உணராது - இயற்கையான (ஆணவ மலத்தினால் பொருள்களை உள்ளபடி) அறியாது; அரசு அமைச்சு ஏய்ப்ப நின்று ஐந்து அவத்தைத்து - அரசன் அமைச்சரோடு கூடி நிற்றல் ஒப்ப (அந்தக் கரணங்களோடு கூடி) நின்று (பொருள்களை உணர்ந்து ஜாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும்) ஐந்து அவத்தைகளை உடையது.

அகலம்: ''ஏகாரம்'' ஈற்றசை. அவை என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகை. ஆன்மா என்னும் எழுவாய் அன்று, சந்தித்தது, உணராது, அவத்தைத்து என்னும் நான்கு பயனிலைகளைக் கொண்டு நின்றது. சகசம் - இயற்கை. ஆணவ மலம் - 'யான்' என்னும் அகங்கார அழுக்கு. ஆத்மா அவ்வழுக்கு அற்றது. ஜீவாத்மா அவ்வழுக்கு உள்ளது.

அறிவு சொரூபமாகிய ஆத்மா 'யான்' என்று அகங்கரித்ததால், ஜீவாத்மா ஆயிற்று. அதனாலேயே, ஜீவாத்மாவுக்கு ஆணவ மலம் இயற்கை என்னப்பட்டது. மனம் - நினைக்கும்சக்தி. புத்தி - அதுவா, இதுவா என்று ஐயமுற்றவிடத்து அவ்விரண்டில் ஒன்று என்று நிச்சயிக்கும் சக்தி. அகங்காரம் - 'யான்' என்று எழும் சக்தி. சித்தம் - விரும்பும் சக்தி. அவத்தை - நிலை. ஜாக்கிரம் - நனவு - ஐம்பொறிகளோடும் மனத்தோடும் சேர்ந்து ஜீவாத்மா தொழில் செய்யும் நிலை. சொர்ப்பனம் - கனவு - ஐம்பொறிகளை விடுத்து மனத்தோடு மாத்திரம் சேர்ந்து ஜீவாத்மா தொழில் செய்யும் நிலை. சுழுத்தி - ஐம்பொறிகளையும் மனத்தையும் விடுத்து ஜீவாத்மா தொழில் செய்யும் நிலை. துரியம் - ஜீவாத்மா மனம் (நினைப்பு) எழாமல் பார்த்துக்கொண்டிருக்கிற நிலை. இதனை விகற்ப சமாதி என்பர். துரியாதீதம் - ஜீவாத்மா அறிவாகவே, அஃதாவது தான் தானாகவே நிற்கும் அல்லது தொழில் செய்யும் நிலை. இதனை முறையே நிர்விகற்ப சமாதியென்றும் நனவிற் சுழுத்தியென்றும் சொல்வர்.

*கருத்து: ஜீவாத்மா அந்தக் கரணத்தோடு கூடி ஐந்து அவத்தைகள் உறும்.*

## ஐந்தாம் சூத்திரம்

### பொறிகளுடன் உயிர் இறைவனை அறியாது

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. 5

*பொருள்:* விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு (செவி) - (மேற்) கூறிய உயிருடன் கூடி நின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி (என்னும் ஐம்பொறிகளும்): அளந்து அறிந்தும் அறியா - (தத்தம் புலன்களை) அளவிட்டு அறிந்தும் (உயிரை) அறியமாட்டா. அவைபோல - அப்பொறிகள்போல; தாம் தம் உணர்வின் தமி அருள் (அறியா) - உயிர்கள் தமது அறிவால் இறைவனது சிற்சக்தியை அறியமாட்டா; காந்தம் கண்ட பசாசத்தவை - காந்தத்தைக் கண்ட இரும்பின் (தன்மையைப் போல இறைவன் சந்நிதானத்தில் பொறிகளை அறியும்) தன்மையை உடையன.

*அகலம்:* உள்ளத்து என்பதன் 'அத்து'ச் சாரியை. உள்ளம் - ஆன்மபுருடன் - உயிர். முந்திய சூத்திரத்தில் கூறப்பட்டது அஃதே. செவி என்பது சொல்லெச்சம். சொல் எச்சம் - சொல் எஞ்சி (குறைந்து) நிற்றல்.

பொறிகள் அறிதல் தத்தம் புலன்களையே யாதலால், புலன்களை என்று விதந்து கூறிற்றிலர். உம்மை விகாரத்தால் தொக்கது. ஆங்கு என்பது அசை. தமி - ஒப்பின்மை; அஃது ஈண்டு ஆகு பெயராய் ஒப்பில்லாத இறைவனுக்கு ஆயிற்று. அறியா என்பது சொல்லெச்சம். 'ஏகாரம்' ஈற்றசை.

*கருத்து: உயிர் பொறிகளோடு கூடி நிற்பதால் இறைவனை அறியாது.*

## ஆறாம் சூத்திரம்

### இறைவன் சொரூபம்

**உணருரு வசித்தெனி னுணரா தின்மையா**
**மிருதிற னல்லது சிவசத் தாமென**
**விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.** 6

*பொருள்:* உணர் உரு என்னின் அசித்தாம் - (இறைவனது சொரூபம்) (உயிர்) சுட்டி அறியும் சொரூபம் என்றால் (உயிர் அறியும் உலகப் பொருள்போல) அறிவில் பொருளாம்; உணராது (எனின்) இன்மையாம் - (உயிர் எவ்வாற்றானும்) அறியாத சொரூபம் என்றால் (முயற்கொம்புபோல) இல்பொருளாம்; இருதிறன் அல்லது சிவசத்தாம் - (இவ்)இரண்டு தன்மையும் அல்லாத (தாகிய) சித் சத்தாம்; என இரண்டு வகையின் இசைக்கும் உலகு - என்று இரண்டு தன்மையோடு (கூடிய சொரூபமாக) உயர்ந்தோர் கூறுவர்.

*அகலம்:* முந்திய உரையாசிரியர்கள் கொண்ட பாடம் "உணருரு வசத்தெனி னுணராதின்மை யினிரு", வடமொழிச் சூத்திரத்தையும், பொருட் பொருத்தத்தையும் நோக்க இப்பாடம் பிழைபட்ட பாடம் என்பது நன்கு தெரியும். "ஏகாரம்" ஈற்றசை. முன் சூத்திரத்தில் (தமி) இறைவன் கூறப்பட்டிருத்தலால், இச்சூத்திரத்தில் உரு என்பதை இறைவனது உரு என்று கொள்ளப்பட்டது. என்னின் என்பது னகர வொற்றுக் கெட்டுநின்றது. அஃது உணராது என்பதுடனும் ஆம் என்பது அசித்து என்பதுடனும் கூட்டி உரைக்கப்பட்டன. உணர் என்பது வினைத்தொகை. அசித்து - ஜடம். உணராது, இல்லது என்பன முறையே உணராதது, இல்லாதது என்னும் பொருள் தந்து நின்றன.

"உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" என்றமையால், உலகம் என்பதற்கு உயர்ந்தோர் எனப் பொருள் உரைக்கப்பட்டது. சித் - அறிவு. சத் - உண்மை. ஆகவே சித் சத் என்பது அறிவாகிய உண்மைப் பொருள். தீ சூடும் ஒளியுமாகிய இரண்டு தன்மைகளை உடைய பொருளாயிருத்தல் போல, இறைவன் அறிவும் உண்மையுமாகிய இரண்டு தன்மைகளை

உடையவன். ''மன்'' அசை. அஃது ஈண்டு ஒழியிசைக்கண் வந்தது. ''ஏகாரம்'' ஈற்றசை.

கருத்து: இறைவன் அறிவாகிய உண்மைப்பொருள்.

## ஏழாம் சூத்திரம்

### உயிர் இரண்டு வகை அறிவுள்ளது

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா. 7

பொருள்: சத்து எதிர் யாவையும் சூனியம் ஆகலின் - உள் பொருளின் முன்னர் எவையும் இல்பொருளா மாகலான்; சத்து அறியாது - உள் பொருள் (அறிதற்கு ஒன்றும் இல்லாத படியால் இல்பொருளாகிய உலகத்தை) அறியாது; அசத்து இலது (ஆகலின்) அறியாது - இல்பொருள் இல்லாததாகலின் (உள்பொருளாகிய இறைவனை) அறியாது. இரண்டு அல்லாத ஆன்மா இருதிறன் அறிவு உள்ளது - (சத்தும் அசத்துமாகிய) இரண்டும் அல்லாத உயிர் (உலகத்தைச் சேர்ந்தபோது உலகத்தை அறியும் அறிவும், இறைவனைச் சேர்ந்தபோது இறைவனை அறியும் அறிவுமாகிய) இரண்டு வகையான அறிவையுடையது.

அகலம்: சத்தே என்பதன் 'ஏகாரம்' அசை. இரண்டும் என்பதன் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. ஆகலின் என்பது இலது என்பதனோடும் கூட்டி யுரைக்கப்பட்டது. அல்லாத என்பது வகர வொற்றும் ஈறும் கெட்டு நின்றது. உள்ளது என்பது ளகர வொற்றுக் கெட்டு நின்றது. உயிர் சத்தும் அன்று; அசத்தும் அன்று. அது (சத்தாகிய) இறைவனோடு சேருங்கால் இறைவனை அறிதலும், (அசத்தாகிய) உலகத்தோடு சேருங்கால் உலகத்தை அறிதலுமாகிய இரண்டு வகை அறிவை உடையது.

கருத்து: உயிர் உலகத்தோடு சேருங்கால் உலகத்தையும், இறைவனோடு சேருங்கால் இறைவனையும் அறியவல்லது.

## எட்டாம் சூத்திரம்

### இறைவன் குருவா யுணர்த்துவன்

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழற் செலுமே. 8

*பொருள்:* தவத்தினில் - (உயிர்கள் செய்த) தவத்தினால்; தம்முதல் - தமது இறைவன்; தம் குருவுமாய் - தமது குருவுமாகி; ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த - (உயிர்கள் ஒவ்வொன்றையும் பார்த்து) ''ஐம்பொறி களாகிய வேடர்களுடன் (சேர்ந்து) வளர்ந்து (நீ எனது சொரூபம் என்பதை)மறந்து விட்டனை'' என்று அறிவிக்க; விட்டு - (அவ்வைம்பொறி வேடர்களை விட்டு) நீங்கி, அந்நியம் இன்மையின் அரன் கழல் செல்லும் - வேறு ஒன்றும் இல்லாமையால் இறைவனுடைய அடிகளின்கண் செல்லும்.

*அகலம்:* புலம் என்பது ஆகுபெயர்; அவற்றைப் பற்றும் பொறிகளுக்கு ஆயினமையால். ''ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை'' என்பது உயிர்கள் ஒவ்வொன்றையும் பார்த்துக் குரு உரைக்கும் சொற்கள். தவத்தால்தான் இறைவன் குருவாய் உணர்த்துவ னென்பதை அறிவிக்கவே, 'தவத்தினில்' என்றனர். தவத்தினில் என்பதில் 'இன்' சாரியை. தவமாவது ''உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை.'' தமது இறைவன் தமது குருவாய்த் தமது அறிவிற்கு அறிவாய் நின்றும், தம்முன் மானிடச் சரீரத்தோடு தோன்றியும் உணர்த்துவன் என்பதைக் குறிக்கவே, 'குருவுமாய்த் தோன்றி' என்று கூறாமல் 'குருவுமாய்' என்று மட்டும் கூறினர். தம் என்பது குருவுடனும் கூட்டி உரைக்கப் பட்டது. ஐம்பொறிகளின் சேர்க்கையை விட்ட பின்னர் உலகம் தோன்றாமையால், 'அந்நிய மின்மையின்' என்றனர். அந்நியம் இல்லையான பின்னர் அரனே உளனாதலால், அவனையே உயிர் சிந்திக்கும் என்பதை உணர்த்தவே, 'அந்நிய மின்மையின் அரன் கழல் செலும்' என்றனர். அரனை அரன் கழல் என்றது உபசார வழக்கு. செல்லும் என்பது லகர வொற்றுக் கெட்டு நின்றது. 'ஏகாரம்' ஈற்றசை.

*கருத்து:* உயிர்கள் தம் தவத்தால் உலகப்பற்றை விடுத்து இறைவனைச் சிந்திக்கும்.

## ஒன்பதாம் சூத்திரம்

### மலம் நீங்கிய உயிர் இறைவனை உணரும்

**ஊனக்கண் பாச முணராப் பதியை**
**ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி**
**யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவ**
**தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.** 9

*பொருள்:* ஊனக்கண்ணும் பாசமும் உணராத பதியை - (யான் என்னும் அகங்காரத்தையுடைய உயிரின்) குறைந்த அறிவும் (உலகப் பற்றையுடைய உயிரின்) மல அறிவும் அறியாத இறைவனை;

ஞானக்கண்ணின் சிந்தை நாடி - (உயிர்) இறைவனை உணரும் அறிவால் உள்ளத்தில் ஆராய்ந்ததால்; உராது துனை தேர்த்து என பாசம் ஒருவ - (புவியில்) பொருந்தாது வேகமாகச் செல்கின்ற பேய்த்தேரின் தன்மையைப்போலப் பாச மலம் நீங்க; பதி தண் நிழல் ஆம் - இறைவனது தண்ணிய அருள் உண்டாகும்; அஞ்செழுத்து விதி எண்ணும் - (அவ்வருளை அடையும் வரையில் உயிர்) பஞ்சாட்சரத்தை விதிப்படி தியானிக்கும்.

அகலம்: அறிவினைக் கண் என்று கூறுவது வழக்கு- உதாரணம் - அகக்கண். பாசம் - மலம்; அஃதாவது, உலகப்பற்று. பாசம் என்பது ஆகுபெயர், அதனையுடைய அறிவிற்கு ஆயினமையால், உணராத என்பது ஈறு கெட்டு நின்றது. கண்ணினின் என்பதன் முதல் இன் ''சாரியை''; இரண்டாம் 'இன்' ஆல் என்னும் பொருளில் வந்தது. சிந்தை - உள்ளம்; அது சிந்தித்தலால், சிந்தை எனப் பெயர் பெற்றது. நாடி என்பது வினையெச்சம். மழைபெய்து பயிர் விளைந்தது என்புழிப் பெய்து என்னும் வினையெச்சம் பெய்ததால் என்னும் பொருள் தந்து நிற்றல்போல, நாடி என்னும் வினையெச்சம் நாடியதால் என்னும் பொருள் தந்து நின்றது. நாடி என்பதனை இகர வீற்று முன்னிலை, ஏவல் என்று உரைப்பாரும் உளர். முன்னிலைப் பொருள் ஈண்டுப் பொருந்தாது. உராது என்பது ஈறு கெட்டு நின்றது. உராவல் - பொருந்துதல். பேய்த்தேர் - கானல். பேய்போலப் பூமியில் பொருந்தாது, தாகமுற்றோன் அதனை அடுத்துச் செல்லச் செல்ல, அது தூரத் தூரச் சென்று கொண்டிருக்கும். அதுபற்றி, அது பேய்த்தேர் எனப் பெயர் பெற்றது. ஏகாரம், ஈற்றசை.

கருத்து: இறைவன் ஞானத்தால் மலம் நீங்கும்; மலம் நீங்கவே உயிர் இறைவனை உணரும்.

## பத்தாம் சூத்திரம்

### இறைவனை உணர்ந்தபின் உயிரை மலம் சேரா

அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே. 10

பொருள்: தானே அவனே ஆகிய அந்நெறி - உயிரே (யான் என்பதை விடுத்து) இறைவனே ஆகிய அவ்வழி; ஏகன் ஆகி - (உயிர், இறைவன் என்று இரண்டு இல்லாமல்) ஒருவனே யாகி; இறை பணி நிற்க - (யான் என்பது ஒழிந்து போய் விட்டமையால்) இறைவன் பணிகளைச் செய்து நிற்க; மலமாயையோடு வல்வினை இன்று - ஆணவ

மலத்தோடும், மாயா மலத்தோடும் வலியதான கன்ம மலம் இல்லையாகும்.

அகலம்: அவனே தானே என்பவற்றின் ''ஏகாரம்'' இரண்டும் மற்றவற்றினின்றும் பிரித்தலால், பிறிநிலைக்கண் வந்தன. 'யான்' என்னும் நினைப்பால், இறைவன் உயிரேயாவன்; வேறொன்றும் ஆகான். 'யான்' என்னும் நினைப்பைவிட, உயிர் இறைவனேயாகும்; வேறொன்றும் ஆகாது. இவ்வுண்மையை உணர்த்தவே, இரண்டிடத்தும் ஏகாரம் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வழி - அவ்விடத்து - அப்பொழுது. தான் இறைவனே என்று உணரும் முன்னர் 'யான்' என்பதைப் பற்றி நின்றமையால் உயிர் ஒரு பொருள் போலவும், தான் இறைவனை உணர்ந்த பின்னர் 'யான்' என்பது நீங்கி நின்றமையால் இறைவன் வேறு ஒரு பொருள் போலவும் இரண்டுபட்டுத் தோன்றல்கூடும் என்பதையும் உண்மையில் அவ்வாறு இரண்டு இல்லையென்பதையும் உணர்த்தவே, 'ஏகனாகி' என்றார். பணி - தொழில். ஏகனானபின் தான் என வேறு இல்லையாயினமையால், அவ்வுயிர் நின்ற உடம்பின் செயல்களெல்லாம் இறை பணியேயாகும். 'யான்' என்பது ஒழிந்தபோதே, ஆணவ மலம் ஒழிந்தது; ஆணவ மலம் ஒழிந்தபோதே மாயா மலமும், கன்ம மலமும் ஒழிந்தன. தன் என்பது அசை. வினைப்பயன் அனுபவிக்கப்பட்டே தீருமென்று சொல்லப்படுகின்றமையால், அதனை வல்வினை என்றார். 'ஏகாரம்' ஈற்றசை.

கருத்து: யான் என்பதை விடுத்தபொழுதே, தான் இறைவனே என்று உயிர் உணரும்; உயிரின் மலங்களும் நீங்கிவிடும்.

## பதினோராம் சூத்திரம்

### உயிர் இறைவனை அடைதல்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழற் செலுமே. 11

பொருள்: காணும் கண்ணுக்கு கண்டு காண காட்டும் உளம்போல் - (உருவைக்)காண விரும்பும் கண்ணுக்கு (கண்ணோடு கூடி உருவைக்) கண்டு (கண்) காணும்படியாகக் காட்டுகின்ற உயிர்போல, காணும் உள்ளத்திற்கு கண்டு காண காட்டலின் - (இறைவனை) அறிய விரும்பும் உயிர்க்கு (அவ்வுயிரோடு கூடித் தன்னை) அறிந்துஉயிர் அறியும்படியாக (இறைவன்) அறிவித்தலால்; அயராத அன்பின் அரன் கழல் செல்லும் - (அவ்வுபகாரத்தைப்) பெற்ற உயிர் தளராத அன்போடு இறைவனை அடைந்து நிற்கும்.

அகலம்: உள்ளம் என்பது எகர வொற்றுக் கெட்டு நின்றது. உள்ளம் - ஆன்ம புருடன் - உயிர். காண என்பதும் கண்டு என்பதும் உவமானத்தோடும், உவமேயத்தோடும் கூட்டி யுரைக்கப்பட்டன. உவமானம் கண்; உவமேயம் உயிர். புறப்பொருளைக் கண்ணோடு கூடி உயிர் கண்டு கண்ணுக்குக் காட்டுதல் போல், தன்னை உயிரோடு கூடி அறிந்து இறைவன் உயிருக்கு அறிவிப்பனென்று கூறியவாறு. ஓர் ஆசிரியன் தன் மாணாக்கனோடு கூடிச்சென்று, அம்மாணாக்கன் விரும்பும்பொருள்களை யெல்லாம் கண்டு அம்மாணாக்கனுக்குக் காட்டுவனேல், அம்மாணாக்கன் அவ்வாசிரியன்பால் தளராமல் அன்பு செலுத்தி அவனோடு இடைவிடாது உறைதல் போல, இறைவன் உயிரோடு கூடி அவ்வுயிர் அறிய விரும்பும் பொருளாகிய தன்னை அறிந்து அவ்வுயிர்க்கு அறிவித்தலால், உயிர் இறைவனோடு ஐக்கியமாய் நிற்கும் என்று கொள்க. 'அயராத' என்பது ஈறுகெட்டு நின்றது. இறைவனை இறைவன் நிழல் என்றது உபசார வழக்கு. 'ஏகாரம்' ஈற்றசை.

கருத்து: இறைவன் அருளாலேயே இறைவனை உயிர் அடையும்.

## பன்னிரண்டாம் சூத்திரம்

### சீவன்முத்தன் செயல்கள்

செம்மலர் நோன்றாட் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே. 12

பொருள்: செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டாத அம்மலம் கழீஇ - செந்தாமரை மலர் போன்ற அழகும் மேம்பாடும் வாய்ந்த திருவடிகளை அடைய விடாமல் தடுத்த அந்த ஆணவ மலத்தை இறைவன் ஞான நீரால் கழுவிக் களைந்து; அன்பரோடு மரீஇ - இறைவன்பால் அன்பு செலுத்து நின்றவர்களோடு கூடி; மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் - 'யான்' 'எனது' என்னும் மயக்கம் நீங்கும் படியாக இறைவன்பால் செலுத்தும் அன்பு நிறைந்தவர் களுடைய வேடங்களையும்; ஆலயமும் - இறைவனைத் தொழுதற்காக ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள ஆலயங்களையும்; அரன் எனத் தொழும் - இறைவனே என்று கொண்டு (சீவன் முத்தன்) தொழுவன்.

அகலம்: 'செம்மலர் நோன்றாள்' என்பது இறைவனுக்குக் கூறப்பட்ட உபசாரம். இறைவனைச் சேரவொட்டாமல் தடுத்தது ஆணவ மலமே யாகலான், அதனை அம்மலம் என்று சுட்டிக் கூறினார். 'யான்'

'எனது' அற்று இறைவனைக் கண்டுகொண்டிருக்கும் பக்தர்களது வேடங்கள் மாத்திரமே இறைவன் என்று தொழப்படுதற்குரியன என்பதையும், ஆணவத்தோடு கூடியுள்ளவரது வேடங்களோ, இறைவன் பக்தி யில்லாதாருடைய வேடங்களோ, இறைவன் எனத் தொழப்படுதற்குரியன அல்ல என்பதையும் உணர்த்த வேண்டி, 'மாலற நேய மலிந்தவர் வேடம்' என்றார். அம்மயக்கமற்ற அன்பர் எச்சமயத்தவராயினும் அவர் வேடமும், ஆலயங்கள் எச்சமயத்தினருடை யனவாயினும் அவையும் இறைவனே என்று தொழற்பாலன. 'தான்' அசை, 'ஏகாரம்' ஈற்றசை.

*கருத்து:* சிவன் முத்தன் செயல்கள் தனது ஆணவ மலத்தை ஒழித்தலும், இறைவனது அடியாரோடு கூடியிருத்தலும், அவ்வடியாரையும் ஆலயங்களையும் தொழுதலுமே.

## சிவஞான போத மூலமும் உரையும் முற்றின

# சிவஞான போத வரலாறு

சித்தாந்திகளில் ஒரு சாரார் கூற்று: சிவபிரான் மக்கள் உய்தற்பொருட்டு வடமொழியில் இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் கூறியருளினர். வேதம் கருமகாண்டமெனவும், ஞானகாண்டமெனவும் இருவகைப்படும். கருமகாண்டம் மக்கள் செய்யவேண்டிய கருமங்களைக் கூறுவது. ஞானகாண்டம் மக்கள் அடையவேண்டிய ஞானத்தைக் கூறுவது. இஞ்ஞானகாண்டம் வேதாந்தமெனச் சொல்லப்படும். இது பல உபநிடதங்களைக் கொண்டுள்ளது. இவ்வுபநிடதங்கள் பல தெய்வங்களைப் பிரமமெனக் கூறும். சிவாகமங்கள் சிவபரம்பொருளே பிரமமெனக் கூறும். இவை காமிகம் முதலிய இருபத்தெட்டு. இவ்விருபத் தெட்டுள் ஒன்றாகிய இரௌரவ ஆகமத்துள் சிவஞானபோதம் என ஒரு படலம் இருக்கிறது. அது பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டுள்ளது. இதுவே வடமொழிச் சிவஞான போதம். இதனை அநந்ததேவர் ஸ்ரீகண்ட பரமேஸ்வரருக்கும், அவர் நந்தி பெருமானுக்கும், அவர் சனற்குமார முனிவருக்கும், அவர் சத்தியஞான தரிசினி முனிவருக்கும், அவர் பரஞ்சோதி முனிவருக்கும், அவர் ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கும் போதித்தனர். இதனை மெய்கண்ட தேவர் தமிழில் மொழிபெயர்த்தருளினர். இதுவே தமிழ்ச் சிவஞான போதம்.

சித்தாந்திகளில் மற்றொரு சாரார் கூற்று: சிவபிரான் மக்கள் உய்தற் பொருட்டுத் தமிழ் மொழியில் நான்கு வேதங்களையும் பல ஆகமங் களையும் செய்தருளினர். அவற்றின் பொருள்களை மாணிக்கவாசகர் முதலிய நால்வரும் திருவாசகமாகவும், தேவாரமாகவும் திருவாய் மலர்ந்தருளினர். அவற்றின் சாரத்தை யெல்லாம் திரட்டித் தமிழ்ச் சிவஞான போதமாக ஸ்ரீ மெய்கண்ட தேவர் செய்தருளினர். இதற்குச் சான்று ''வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ, ரோதுந் தமிழதனிலுள்ளுறுநெய் - போதமிகு, நெய்யினுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான், செய்ததமிழ் நூலின் திறம்.''

இச்செய்யுளிற் கண்ட வேதம் என்பது தமிழ் வேதங்களையும், ஆகமம் என்பது தமிழாகமங்களையும் குறித்து நின்றவ. அவ்வாகமங்கள் வடமொழி ஆகமங்களவல்லவென்பதை விளக்குதற்காகவே மெய்யாகமமெனக் கூறப்பட்டது. தமிழ்ச் சிவஞான போதத்தை வடமொழியில் பெயர்த்து, அதற்குப் பழைமையை நல்கும் பொருட்டு, அதனை இரௌரவ ஆகமத்துள் ஒரு படலமாகப் புகுத்து வைத்தனர். அதற்கு வடமொழிச் சிவஞான போதத்துப் பன்னிரண்டாம் சூத்திரத்தின் இறுதியிலுள்ள "இவ்வாறு சிவஞான போதத்தில் சைவப் பொருளின் நிச்சயத்தை அறிக" என்னும் பொருள் தரும் வாக்கியம் சான்று.

இவ்விருசாரார் கூற்றில் உண்மை எது? வேதாந்த நூல்கள் என்னும் கைவல்லிய நவநீதம் முதலியவற்றில் அதிகப் பற்றுடைய யான் சித்தாந்த நூல்களையும் கற்கும்படி செய்யவேண்டுமென்று கருதிப் பல வருடங்களுக்கு முன்னர்த் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் காரியதரிசியாயும், எனது நண்பராயுமிருந்த திருவாளர் தெ.ச.சு.சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ஒரு நாள் என்னிடம் வந்து, "நீங்கள் வக்கீலாயிருக்கிறபடியால் நீங்கள் சொல்வனவற்றை யாவரும் அறியும்படியான விதத்தில் தெளிவாகச் சொல்லுகிறீர்கள். நீங்கள் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் படித்து நமது சைவ சித்தாந்த சபையில் பிரசங்கம் செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். அப்போது யான் அவர்களுடைய உட்கருத்தை அறியவில்லையாயினும், யான் சித்தாந்த நூல்களிற் சிறந்து விளங்கும் சிவஞான போதத்தைக் கற்கவேண்டுவது அவசியம் என்று கருதி, அவர்கள் வேண்டுதலுக்கு இணங்கித் தமிழ்ச் சிவஞான போதத்தைக் கற்று அச் சைவ சித்தாந்த சபையில் ஒரு பிரசங்கம் செய்தேன். ஆனால், சிவஞான போதப் பிரசங்கம் முடிந்தபின் அதனை மறந்துவிட்டேன். ஆயினும், சிவஞான போதம் சித்தாந்த நூல்களில் ஒப்புயர்வற்ற ஒரு ஞான நூல் என்பது மாத்திரம் என் ஞாபகத்தில் இருந்துகொண்டே வந்தது. பல வருடங்களுக்குப் பின்னர், யான் திருநெல்வேலி வண்ணார்பேட்டை ஸ்ரீமான் டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தபோது வடமொழிச் சிவஞான போதத்தை வடமொழிப் பண்டிதர் ஒருவருடைய உதவியைக் கொண்டு தமிழில் மொழிபெயர்த்துப் பன்னிரண்டு சூத்திரங்களாகச் செய்து, தமிழ்ச் சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களோடு ஒத்துப் பார்த்தேன். இரண்டில் ஒன்றன் மொழிபெயர்ப்பே மற்றதென்று கண்டேன். இப்போதும் இரண்டு நூல்களையும் படித்தும் ஒத்தும் பார்த்தேன். ஒன்றன் மொழிபெயர்ப்பே மற்றதென்று இப்போதும் கண்டேன். இரண்டில் எது முதனூல், எது மொழிபெயர்ப்பு என்று என்னால் இப்போது தீர்மானிக்க முடியவில்லை.

சிவஞான போதமும் ஞானவாசிட்டமும்: சிவஞான போதம் முதல் சூத்திரம்: உலகம் இறைவனிடத்துத் தோன்றி, நின்று, ஒடுங்குகின்றது. ஞானவாசிட்டம் 360-ம் செய்யுளின் பின்னிரண்டடி:

''அந்தமில்சின் மாத்திரமாய் விண்ணிலுநொய் தாம் பரம மணுவேயாகு, முந்துபிர மாண்டமெலா மவ்வணுவிலேதோன்றி முதிர்ந்து மாயும்.''

சிவஞான போதம் இரண்டாம் சூத்திரம்:(1) இறைவனே உலகமாகி அதினின்று பிரியாது நிற்பன். ஞானவாசிட்டம் 1492-ம் செய்யுளின் இரண்டாம் நான்காம் அடிகள்: ''ஆனாத சகங்களையுள் ளடக்கினும் வேற் றுமைமேவா தறிவொன் றேயாம், வானார்சிற் சொருபத்தைப் பிரியாத தன்மயமாம் வைய மெல்லாம்.''

(2) உயிர்கள் தமது கருமங்களினாற் பிறப்பிறப்புக்களை அடையும். ஞானவாசிட்டம் 1968-ம் செய்யுள் முதலிரண்டடிகள்: ''ஈசனிடை நின்றுற்பவமா யெழுந்த வுயிர் கடாஞ் செய்த, வீசுகரு மங்களினா லேமேன்மேற் பிறவிகளை மேவும்.'' (மேன்மேல் பிறவிமேவும் என்றதனால் மேன்மேல் இறப்பும் பொருந்தும் என்பது பெறப்பட்டது.)

சிவஞான போதம் மூன்றாம் சூத்திரம்: உடம்பினுள் உயிர் இருக்கின்றது. ஞானவாசிட்டம் 1976-ம் செய்யுளின் முதலிரண்டடிகள்: ''மேகமனையாய் கைகால்கண் மேவுமிந்த வுடறானே, போகமுண்ணச் சிவனுக்குப் பொருந்து தூல வுருவாகும்.''

சிவஞான போதம் நான்காம் சூத்திரம்: உயிர் ஐந்தவத்தைகளை உறும். ஞானவாசிட்டம் 1986-ம் செய்யுள்: ''கண்ட நனவு கோரமதாங் கனவு சாந்த மெனப் பெயராங், கொண்ட சுழுத்தி மூடமதாங் கூறுமிம்மூன் றவத்தைகளும், விண்ட மனத்தின் வடிவாகும் விளம்பு மிம்மூன் றையும்விட்டாற், றண்டு மனம்போ மனமிறந்தாற் சத்தாயொவறாஞ் சமநிலையாம்.'' (ஒன்றாஞ் சமநிலையுள் துரியமும் துரியாதீதமும் அடங்கின.)

சிவஞான போதம் ஐந்தாம் சூத்திரம்: இறைவனை உயிர் அறியாது. ஞானவாசிட்டம் 231-ம் செய்யுளின் முதலடி: ''பொருணோக்கா சிவவறிவு.'' (இறைவனை அறியாது உயிரின் அறிவு.)

சிவஞான போதம் ஆறாம் சூத்திரம்: இறைவனுடைய சொரூபம் சித்சத். ஞானவாசிட்டம் 2055-ம் செய்யுளின் மூன்றாம் அடி: ''சவிப்பில்சிவ மெங்கணு முளது சாந்தஞ்சுபஞ் சித்துரு.

சிவஞான போதம் ஏழாம் சூத்திரம்: உயிர் சத சத்தாகும் (உள்ளதும் இல்லதும் ஆகும்)ஞானவாசிட்டம் 361-ம் செய்யுளின் நான்காம்

அரு: "உருத்திகழு முள்ளதிவ திரண்டினுக்கு முள்ளாகு மவையிரண்டி னுருவுமாகும்."

சிவஞான போதம் எட்டாம் சூத்திரம்: குருவின் உபதேசத்தால் உயிர் இறைவனை உணரும். ஞானவாசிட்டம் 773-ம் செய்யுளின் முதலடியும் நான்காம் அடியும்: "தேசிகன்சொற் பிழையாம லனுட்டிக்கிற் பையப்பையத் தியக்கநீங்கி, ஏசறுமா காசபலம் விழ்வது போன் மெய்ஞ்ஞான மெனிதிலுண்டாம்."

சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரம்: ஞான விசாரத்தால் இறைவன் அருள் உண்டாகும். ஞானவாசிட்டம் 568-ம் செய்யுளின் நான்காம் அடி: "ஊன்றிய விசாரத்தாலே யுயர்பொரு ளெய்தவேண்டும்." (ஊன்றிய விசாரம் - ஆழ்ந்த ஞான விசாரம். உயர் பொருள் - இறைவன்.)

சிவஞான போதம் பத்தாம் சூத்திரம்: உயிர் இறைவனாகி இறைபணி செய்து நிற்க மலங்கள் உண்டாகா. ஞானவாசிட்டம் 836-ம் செய்யுளின் இரண்டாம் அடி: "விதமான வனைத்துக்குஞ் சார்பை நோக்கி வேண்டியவா றுலகில்வினை யாடுவீரா." அனைத்துக்குஞ் சார்பு - உலகங்கட்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும் இறைவன். (இறைவனை நோக்கிக் கொண்டே உலகில் எத்தொழில் செய்தாலும், மலங்களும் அவற்றின் காரியங்களாகிய இன்ப துன்பங்களும் பற்றா என்றபடி.)

சிவஞான போதம் பதினோராஞ் சூத்திரம்; தன்னை உணர்த்தியருளிய இறைவனை உயிர் அடைந்து நிற்கும். ஞானவாசிட்டம் 1414-ம் செய்யுளின் இரண்டாம் நாலாம் அடிகள்: "அங்கனுற வருணோக்கஞ் செய்தானை வணக்கத்தா வருக்கியத்தால், சங்கரனை யேத்தினே னுமையையுமப் படியேத்தித் தாளில் விழ்ந்தேன்." (எனக்கு ஞானத்தை யருளிய இறைவனை வணங்கி அடைந்தேன் என்றபடி.)

சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம்: ஞான நீரால் மலத்தைக் கழுவி அடியாரையும் ஆலயங்களையும் தொழல் வேண்டும். ஞானவாசிட்டம் 1442-ம் செய்யுள் முதல் மூன்றடிகள்: "வெகுவா யடைந்த பொருள்களிலே மேவித் தனது மெய்யுணர்வாந், தகுநீர் முழுக்கான் மலமற்றுத் தப்பில் போத பூசனையான், மிகுநற் போத விலிங்கத்தை மேவு பூசை செயல்வேண்டும்." (இலிங்க பூசை - ஆலய வழிபாடு.) 180-ம் செய்யுளின் நான்காம் அடி: "சகமெனு மாயையை வெல்லத்தக் கோர்க்கெல்லாந் தப்பாத சகாயமாஞ் சாதுசங்கம்.

சிவஞான போதச் சிற்றுரையால் யான் கண்ட உண்மை: இவ்வுலகத்தின்கண் தோன்றி நிலவுகின்ற சமயங்கள் பல. அவற்றுள், கடவுள் இல்லையென்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். மற்றைய சமயங்களெல்லாம் கடவுள் உண்டென்று சொல்பவைகளே. அவற்றை ஆஸ்திக சமயம் என்பர்

ஆன்றோர். நாஸ்திக சமயத்தினர் அண்டங்களின் அமைப்பும், அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றி வருதலும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஒழுங்காக நிகழ்ந்து வருதலும் இயற்கையின் சக்தியால் என்று சொல்லுகின்றனர். ஆஸ்திக சமயத்தினர்களோ அவைகளெல்லாம் ஒழுங்காக நிகழ்ந்துவருதல் கடவுள் சக்தியால் என்று சொல்லுகின்றனர். நாஸ்திகரது இயற்கையைத்தான் ஆஸ்திகர் கடவுளென்று கூறுகின்றனரென்று நாஸ்திகரும், ஆஸ்திகரது கடவுளைத்தான் நாஸ்திகர் இயற்கையென்று கூறுகின்றனரென்று ஆஸ்திகரும் கொள்வரேல், இவ்விரு சமயங்களுள்ளும் வேற்றுமையில்லை.

இவ்வுலகத்திலுள்ள ஆஸ்திக சமயத்தார்களெல்லாம் தத்தம் சமயக் கடவுள் சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமும் வாய்ந்தவரென்று ஒப்புக்கொண்டும், ஒவ்வோர் ஆஸ்திக சமயத்தினரும், தத்தம் சமயமே மெய்யான அல்லது உயர்ந்த சமயமென்றும், தத்தம் சமயக் கடவுளே மெய்யான அல்லது உயர்ந்த கடவுளென்றும், மற்றைய சமயங்களெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த சமயமென்றும், மற்றைய சமயக் கடவுளெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த கடவுளென்றும் கூறி வேறுபடுகின்றனர். சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமும் உள்ள பொருள் ஒன்றுதான் இருக்க முடியுமேயன்றி, ஒன்றிற்கு மேல் இருக்கமுடியா தென்பது அறிவுடைய ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மை.

ஒவ்வொரு சமயக் கடவுளுக்கும் ஏற்பட்டுள்ள பெயரும் வடிவும் ஒவ்வொரு சமயத்தையும் கண்டுபிடித்த ஆசிரியர்களாலும், அவர்களைப் பின்பற்றியோர்களாலும் அவரவர் பாஷைக்கும், உள்ளத்திற்கும், செவிகளுக்கும், கண்களுக்கும் இயைந்தவாறு கற்பிக்கப்பட்டவைகளே. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கடவுளையே மற்றைய சமயத்தினர்கள் அவர்களுக்குப் பிரியமான பெயர்களாலும் வடிவுகளாலும் வணங்குகின்றார்களென்று கொள்ளின், ஆஸ்திக சமயங்களெல்லாம் ஒன்றேயாய் விளங்கும்.

சிவஞான போத வரலாறு முற்றிற்று

## தீக்கை யாது?

சிவஞான போதவுரை செப்புதற்குத் தீக்கை
தவஞானம் வேண்டுமெனச் சாற்றி - நவஞானம்
பேசுகின்றா ரவ்விரண்டும் பேரளவிற் கேட்டசிலர்
ஏசுகின்றா ரென்னையில னென்று. 1

'தீக்கை' வடமொழியின் 'தீக்ஷா' வெனுஞ்சொல்லே
'தீ'க்கர்த்தம் 'ஞானநல்கல்' 'க்ஷா' க்கர்த்தம் - 'போக்கன் மலம்'
''உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு'' 2

ஞானமுறன் மாசறுத்த னண்ணுந் துயர்தாங்கல்
ஈனவுயிர்க் குந்தீங் கியற்றாமை - யானென்னின்
காலமெல்லாங் கொண்டுள்ளேன் கண்ணுடையார் கூறுவரோ
ஏலவுயர் தீக்கையிலே னென்று. 3

அன்றியுமிவ் வையமெலா மாக்கி யளித்தழித்து
மன்றுறைவா ரென்னுள்ளே வாழ்கின்றா - ரென்றறிவார்
தீக்கையிலே னென்றிகழ்ந்து செப்பாரென் னுள்வாழ்வார்
தீக்கைசெய்து வையாரோ சேர்த்து. 4

*இச்செய்யுள்களின் அச்சுத் தாளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த போது சிவஞான பாடியம் 22-ம் பக்கத்திலிருந்து பின்வரும் வாக்கியங்கள் கிடைத்தன: ''விஞ்ஞானகலர்க்கு முதல்வன் உண்ணின்றவாறே தீக்கை யென்னும் இயற்கைப் பெயருடைய நவது கிரியாசக்தி சங்கற்ப மாத்திரையானே மல நீக்குவதென்றி ஒளத்திரி தீக்கையான் அன்றென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது''. ''முதல்வனது கிரியாசக்தி சங்கற்பமொன்றே மல நீக்கத்திற்குக் காரணமெனவும் கிரியாசக்தியும் ஞானசக்தியுந் தம்முள் வேறன்மையான் உபசாரத்தாற் றீக்கை யெனப் பெயர் பெறும். ஒளத்திரி முதலியனவை சஞ்சித வினையை நீக்கி உரிமைப்படுத்து முகத்தானே ஞானத்திற்கு அங்க மாவதன்றிச் சுதந்தரமாகா தெனவுந் தெற்றென உணர்க.''*

வ. உ. சிதம்பரம் பிள்ளை

- முற்றும் -

ஃஃஃ

வ.உ.சி.நூலகம்



- சிவஞான போத உரை
- வ.உ.சி. கண்ட பாரதி
- அரசியல் பெருஞ்சொல்

ஆகிய மூன்று நூல்களின் தொகுப்பு